Civil Aviation Authority
Sri Lanka

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# ஆண்டறிக்கை

# 2012

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆவது வாசகத்திற்கிணங்க பாராளுமன்றிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

# சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம்

ஸ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனரின் குவன தினா
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா


உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு
வெய்பெர வெக்கிய அபே
இக்மன் அய மகநெகுமகி முல்வெவ
மேவெய் தமக்கும அபேய்

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு
சமாஜ மெஹவர சாரதாஹும் ரெக
வககீமென் புதமு

| | | |
|---|---|---|
| ஆக்கம் | : | அரிசன் அஹுபுது |
| பாடல் | : | கலாநிதி பண்டிதர் டப்ள்யூ.டி. அமரதேவ |
| இசையமைத்தவர் | : | கலாநிதி பண்டிதர் டப்ள்யூ.டி. அமரதேவ |

## கௌரவ அமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்து

இவ் ஆண்டறிக்கை 2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 01 ஜனவரி 2012 இல் ஆரம்பித்து 31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டில் இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.



ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த
தலைவர்,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

28 பெப்ரவரி 2013.

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம் | 03 |
| கௌரவ அமைச்சர், சிவில் விமானப் போக்குவரத்து | 04 |
| உள்ளடக்கம் | 05 |
| சுருக்கமான சொற்றொடர்கள் | 10 |
| விபரக்கொத்து | 13 |
| தலைவரின் அறிக்கை | 15 |
| சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை | 17 |
| பக்கத்தோற்றம் | 20 |
| மீள்பார்வை | 20 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள் | 21 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடைமையும் | 28 |
| அதிகாரசபையின் பொறுப்பு | 28 |
| நிறுவனக் கட்டமைப்பு | 28 |
| அதிகாரசபைக் கூட்டங்கள் | 28 |
| ஊழியர் குழு | 29 |
| நிதிக் குழு | 29 |
| திட்டமிடற் குழு | 29 |
| கணக்காய்வுக் குழு | 30 |
| சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) | 30 |
| நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு | 31 |

| | |
|---|---|
| அதிகாரசபையினதும் சிரேஷ்ட உறுப்பினர்களதும் பொறுப்பு | 31 |
| பொறுப்புடமை | 31 |
| ஆர்வ ரீதியான முரண்பாடுகள் | 31 |
| உள்ளகக் கணக்காய்வு | 31 |
| சட்டக் கடப்பாடு | 32 |
| ஒழுக்க விழுமியங்கள் | 32 |
| **இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை** | **33** |
| தூரநோக்கு | 33 |
| குறிக்கோள் | 33 |
| குறிக்கோள் வாசகம் | 33 |
| தத்துவம் | 33 |
| இலக்குகள் | 33 |
| தந்திரோபாயங்கள் | 33 |
| மதிப்பீடுகள் | 33 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முதன்மை இலக்குகள் | 34 |
| விளைவுகள் | 34 |
| வெளியீடுகள் | 35 |
| **நியதிச் சட்டச் செயற்பரப்பு** | **36** |
| **வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்** | **38** |
| அதிகாரசபையும் அதன் குழுக்களும் | 38 |
| பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் | 38 |
| CAASL கூட்டங்கள் | 38 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 38 |
| வானூர்தி விபத்து விசாரணை அலகு | 39 |
| உள்ளகக் கணக்காய்வுப் பகுதி | 39 |
| **வானியல் சேவைகள் பிரிவு** | **42** |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி | 42 |
| ICAO உலகலாவிய பாதுகாப்புச் சோதனை (USAP) சுற்று 2 - ஆய்வு - இலங்கை | 42 |
| இடர் விடயங்கள் தொடர்பில் ஆய்வு முடிவுகளின் வரைபட வெளிப்படுத்தல் | 42 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு நிபுணர்களின் நியமனம் | 43 |
| முன்னெடுக்கப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனையிடல் திட்டம் | 43 |
| சர்வதேச அமர்வுகளில் நாட்டினது பிரதிநிதித்துவம் | 43 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மீதமான ICAO இன் உயர் மட்ட மாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதித்துவம் | 43 |
| வரையறுக்கப்பட்ட எக்ஸ்போ ஏவியேஷன் (தனியார்) கம்பனி மீதான விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனை | 43 |

| | |
|---|---|
| எக்ஸ்போ ஏவியேஷனுக்கான வழிகாட்டுனர்கள் (Instruction) சான்றுபடுத்தல் | 44 |
| பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகள் | 44 |
| விஷேட வேலைத்திட்டப் பகுதி | 44 |
| கண்காட்சி | 44 |
| தேசத்தின் மகுடம் தேசியக் கண்காட்சி | 44 |
| “மொறட்டுவ உதான” வர்த்தகக் கண்காட்சி | 44 |
| விமானப் போக்குவரத்து எரிபொருள் விலை கண்காணிப்பு | 44 |
| அறிக்கைகள் | 45 |
| சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு CADEC | 45 |
| விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி | 45 |
| வான்பரப்பு முகாமைத்துவம் | 45 |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமானத்தளச் சான்றிதழைப் புதுப்பித்தல் | 46 |
| “மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்” மீதான கட்டுமான மற்றும் சான்றுப்படுத்தின் பணிகளுக்கான நியதிச்சட்ட உதவிகள் | 46 |
| ATC தரப்படுத்தல் மதிப்பீடுகள் | 46 |
| சோதனை நடவடிக்கைகள் | 46 |
| ATC சம்பவங்கள் மீதான விசாரணை | 47 |
| உயர்வான கோபுர வடிவங்களின் நிர்மானத்திற்கான அனுமதிகள் | 47 |
| ஆட்புலத்தின் மேலான பறத்தல் மற்றும் தரையிறங்கள் அனுமதிகள் | 47 |
| வானியல் தகவல் சேவைகள் | 47 |
| உலங்கு வானூர்தி மூலமான வான்வெளி வேலைகள் | 47 |
| **விமானப் பறப்புப் பாதுகாப்புப் பிரிவு** | **48** |
| தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி | 48 |
| 01 ஜனவரி 2012 இலிருந்து மாலைதீவிற்கான பறத்தற் குழு பரீட்சைச் சேவைகள் விமானச் சேவைப் போக்குவரத்து விமானி உரிமம் (ALPL) வரை விரிவாக்கஞ் செய்யப்பட்டது | 48 |
| சிறிலங்கன் எயார்லைன்ஸின் (SLAL) வகைத்தரப்படுத்தல் பயிற்சி நிறுவனத்தினை சான்றுப்படுத்தல் | 48 |
| வெளிநாட்டு பறத்தல் பாடசாலை ஏற்றுக் கொள்ளல் (நியூசிலாந்து இன்ரநெஷனல் ஏவியேஷன் அக்கடமி) | 48 |
| தனிநபர் அனுமதிப்பத்திரம் தன்னியக்கப்படுத்தலின் அறிமுகம் | 48 |
| ஐந்தாவது SARI பகுதி 66 (வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திர ஒழுங்குவிதி) /147 (பராமரிப்பு பயிற்சியளித்தல் நிறுவன ஒழுங்குவிதி) வேலைக்குழுக் கூட்டம் | 49 |
| SARI பகுதி 66 ஒழுங்குவிதிகள் (தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு (SARI) பகுதி 66 - வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகள்) | 49 |
| பறத்தல் பாடசாலைகள் மற்றும் விமானப் போக்குவரத்து பயிற்சியளித்தல் நிறுவனங்கள் மேலான சோதனைகள் | 50 |
| சர்வதேச பயிற்சிகளில் பங்குகொள்ளல் | 50 |
| வான் மருத்துவ அலகுக்கான அழைப்பு முறைமை அமுலாக்கம் | 50 |
| வானியல் தகவல் சுற்றறிக்கை யொன்றின் வழங்குகைகள் (AIC) | 50 |
| பல இயந்திர பயிற்சியளித்தல் வேலைத்திட்டத்திற்கான அனுமதி | 50 |

| | |
|---|---|
| வெளிநாட்டு விமானிகளின் ஆட்சேர்ப்பு | 50 |
| அனுமதியளிக்கப்பட்ட வைத்தியசாலைகளுடனான ஒப்பந்தங்களை புதுப்பித்தல் | 50 |
| செயற்பாட்டுப் பகுதி | 50 |
| ஒழுங்குவிதிகளின் விருத்தி | 50 |
| வழிகாட்டல் ஆவண விருத்தி | 50 |
| தனிநபர்களும், பயிற்சிகளும் | 51 |
| வான் செயற்பாட்டாளர்களைச் சான்றுபடுத்தல் | 51 |
| சோதனைகள் | 51 |
| வான்தகமைப் பகுதி | 52 |
| தொடர்ச்சியான வான்தகமை | 52 |
| வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்கள் | 52 |
| மூன்றாந் தரப்பினரது பராமரிப்பு வேலைகள் | 52 |
| வானூர்தி பதிவு | 52 |
| பாதுகாப்பு மேற்பார்வை | 52 |
| விஸாவிற்கான முன்மொழிவுகள் | 52 |
| பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரம் | 52 |
| உதிரிப் பாகங்களுக்கான அனுமதி | 53 |
| **கூட்டாண்மைப் பிரிவு** | **54** |
| வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி | 54 |
| விமான சேவை செயற்பாடுகள் | 54 |
| பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வு | 54 |
| BIA இல் இடைத்தடங்கற் பயணிகள் | 56 |
| உள்நாட்டு விமானப் போக்குவரத்து | 56 |
| உலங்கு வானூர்தி மற்றும் பலூன் செயற்பாடுகள் | 56 |
| பிரயாண முகவர்கள் | 56 |
| அனைத்து ஊழியர்கள் | 57 |
| நிரந்திர ஊழியர்கள் | 57 |
| தற்காலிக ஊழியர்கள் | 57 |
| இருதரப்பு வான்சேவைப் பேரம்பேசல்கள் | 57 |
| விமான சேவை ஒதுக்கீட்டு மற்றும் கட்டணங்கள் கணிப்பீடுகள் கற்கைநெறி | 57 |
| SLOT கூட்டிணைவு | 57 |
| பொது விமான போக்குவரத்து விருத்தி | 57 |
| நுகர்வோர் முறையீடுகளை கையாளல் | 58 |
| வான்போக்குவரத்து கைத்தொழில் /வர்த்தகத் திணைக்களத்தில் அக்கறையுடையோருடனான சந்திப்புக்கள் | 58 |
| பட்டதாரி பயிலுநர் மாணவர்களுக்கான உள்ளக பயிற்சி | 58 |
| மனித வளங்கள் மற்றும் அலுவலகத் முகாமைத்துவ பகுதி | 58 |
| CAA இன் 10வது ஆண்டு நிறைவு | 58 |
| ஊழியரிடல் | 58 |

உள்ளடக்கம்

ஊழியர் நலன்புரி 58
பயிற்சியளித்தல் கருத்தரங்குகள் வேலைப்பட்டறைகள் கூட்டங்கள் மகாநாடுகள் 60
தொழில்நுட்ப நூலகம் 60
CAASL இணையத்தளம் 60
CAASL இன் கூட்டிணைக்கப்பட்ட திட்டம் மற்றும் வேலைத்திட்டம் 60
அலுவலகப் பராமரிப்பு தொடர்புபட்ட செயற்பாடுகள் 61
CAASL இன் தன்னியக்கம் 61
நிதி முகாமைத்துவப் பகுதி 61
செயற்திட்ட பாதீடு 61
CAA இன் வருமானம் 61
முகாமைத்துவ தகவல்கள் 62
வாகன அணி முகாமைத்துவம் 62

**செயற்சாதனைச் சுருக்கம் -2012 63**

**பகுதி தனிச்சிறப்புச் செயற்பாடுகள் -2012 65**

கைத்தொழிலின் செயற்சாதனை - 2012 70
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற வருடத்திற்கான முழுமையான வருமானக் கூற்று 71
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2012 டிசம்பர் 31 இல் நிதி நிலமைக்கூற்று 72
31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மாற்றற் கூற்று 73
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 31 டிசம்பர் 2011 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று 74
நிதி அறிக்கைகள் - 2012 75
நிதி அறிக்கையிடலுக்கான அதிகாரசபை முகாமையின் பொறுப்புக் கூறல் கூற்று 75

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் 76**

**விஷேட கணக்கியற் கொள்கைகள் 78**

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 87**

**கணக்காய்வுத் தலைமை அதிபதியின் அறிக்கை 95**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு சீ.ஏ.ஏ.எஸ்.எல் இனால் வழங்கப்பட்ட பதிலுரைகள் 111**

# சுருக்கமான சொற்றொடர்கள்

| | |
|---|---|
| A&NS | விமானத்தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் |
| AA | உதவிக் கணக்காளர் |
| AAI | உதவி விமானத்தளப் பரிசோதகர் |
| AA(I) | உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் |
| AASI | உதவி விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| AASL | வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி |
| AATO | உதவி வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| AAwE | உதவி வான்தகமைப் பொறியியலாளர் |
| Acct | கணக்காளர் |
| AFM | உதவி நிதி முகாமையாளர் |
| AFTN | வானியல் நிலையான தொலைத்தொடர்பு வலையமைப்பு |
| AGOI | உதவி தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| AI | விமானத்தளப் பரிசோதகர் |
| AIU | விபத்து விசாரணை அலகு |
| AISO | வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| AME(BL) | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | வானூர்திப் பராமரிப்பு தொழிநுட்பக் கலைஞர் |
| ANR | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| ANS | வான்செலவுகள் சேவைகள் |
| ANSI | வான்செலவுகள் சேவைகள் பரிசோதகர் |
| AOC | வான் செயற்பாட்டாளர் சான்றுப்பத்திரம் |
| AS | வானியல் சேவைகள் |
| ASI | விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| ASN | விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT&LA | வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் |
| ATC | வான் நெரிசற் கட்டுப்பாடு / வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் |
| ATO | வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |

| | |
|---|---|
| Av. Sec | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு |
| Aw | வான்தகமை |
| AwE | வான்தகமைப் பொறியியலாளர் |
| BIA | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | சிவில் விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| CAO | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்வியூட்டற் குழு |
| CEO | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் |
| CIA | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| COSCAP-SA | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| Cp | கூட்டாண்மை |
| CSI | வானறைப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| C of R | பதிவுச் சான்றிதழ் |
| DCA | சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் |
| D | பணிப்பாளர் |
| DD | பிரதிப் பணிப்பாளர் |
| DGCA | சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் |
| DO | ஆவண உத்தியோகத்தர் |
| DPIG | அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு |
| EASA | ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவர் |
| ELP | உபகரணங்கள் ஏற்றும் திட்டம் |
| EU-SA | ஐரோப்பிய ஒன்றியம்- தெற்காசியா |
| FAL | அனுசரணை |
| FIR | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FOI | விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| FS | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| GOI | தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| GSA | பொது விற்பனைப் பிரதிநிதி |
| HR&OM | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| HR&OMA | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உதவியாளர் |
| HR&OMO | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உத்தியோகத்தர் |
| IA | உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு |
| MEL | குறைந்த பட்ச உபகரணப் பட்டியல் |
| NOTAM | விமான சேவையிலுள்ளோருக்கான அறிவித்தல்கள் |
| OA | அலுவலக உதவியாளர் |
| Ops | செயற்பாடுகள் |
| PA | நேர்முக உதவியாளர்கள் |
| PEL | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் |
| PLO | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் உத்தியோகத்தர் |

| | |
|---|---|
| PA-AAI | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - விமான விபத்து விசாரணை |
| PA-AE | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - விமான சேவைப் பரீட்சைகள் |
| PA-IT | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - தகவல் தொழிநுட்பம் |
| PA-SP | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - விஷேட செயற்றிட்டம் |
| S/CAASL | செயலாளர் / இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| SD | சிரேஷ்ட பணிப்பாளர் |
| SAFA | வெளிநாட்டு வானூர்திக்கான பாதுகாப்பு மதிப்பீடு |
| SAISO | சிரேஷ்ட வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| SARPs | தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகள் |
| SARI | தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SATO | சிரேஷ்ட விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| SAwE | சிரேஷ்ட வான்தகமைப் பொறியியலாளர் |
| SFOI | சிரேஷ்ட விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| SLAS | இலங்கை கணக்கீட்டு நிதியம் |
| SLCAP | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் |
| SLFRS | இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் |
| SP | விஷேட செயற்றிட்டம் |
| SMS | பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| USAP | உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USOAP | உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

# விபரக்கொத்து

| | | |
|---|---|---|
| பிரதான அலுவலகம் | : | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| | | இல. 04, ஹுணுபிட்டிய வீதி, கொழும்பு-02. |
| | | தொலைபேசி : 94-11-2304632 |
| | | தொலைநகல் : 94-11-2304644 |
| | | மின்னஞ்சல் : info@caa.lk |
| | | இணையத்தளம் : www.caa.lk |
| | | தபால் முகவரி : த.பெ.இல. 535, கொழும்பு |
| | | தபால் தந்தி முகவரி : AIRCIVIL |
| | | AFTN முகவரி : VCCCYAYX |
| கிளை அலுவலகம் | : | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, |
| | | "ஹில்டொப்", நைகந்த, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க. |
| | | தொலைபேசி : 94-11-2251076 |
| | | தொலைநகல் : 94-11-2251076 |
| | | மின்னஞ்சல் : katcaa@caa.lk |
| உப அலுவலகங்கள் | : | வான்தகைமை உப அலுவலகம், |
| | | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, |
| | | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு கட்டுநாயக்க. |
| | | தொலைபேசி : 94-11-2252269 |
| | | மின்னஞ்சல் : aidbcaa@caa.lk |
| | : | விமானதகைமை உப அலுவலகம், |
| | | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, கொழும்பு விமான நிலையம், |
| | | இரத்மலானை. |
| | | தொலைபேசி : 94-11-2635756 |
| | | மின்னஞ்சல் : aidccaa@caa.lk |
| கணக்காய்வாளர் | : | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கணக்காய்வாளர் நாயகம். |
| சட்டத்தரணிகள் | : | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சட்டமா அதிபர் |
| வங்கியாளர் | : | இலங்கை வங்கி |
| காப்புறுதியாளர் | : | வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |
| | | வ/ப செலிங்கோ காப்புறுதிக் கம்பனி |

விபரக்கொத்து



# தலைவரின் பார்வையில்.....

வலுவூட்டப்பட்டதும், கட்டுப்படுத்தக்கூடியதும், நிலைத்து நிற்கக்கூடியதுமான முதலாவது பறத்தல் நிகழ்வு 2012 இல் கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் இடம்பெற்றதன் மூலம் இலங்கையின் விமானப் போக்குவரத்துப் பயணத்தில் திருப்பமொன்று பதிவாக்கிக்கொள்ளப்பட்டது. இலங்கையில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற்துறை அதன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிய போது, அந் நாட்டினது நியதிச் சட்டச் சேவை வழங்குனரான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 இல் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களமாக இருந்து மாற்றமடைந்து அதனது வெற்றிப்பாதையில் பத்தாவது ஆண்டு நிறைவில் தடம் பதித்துள்ளது.

உலகளாவிய விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற்துறையானது எரிபொருள் விலையேற்றம், பொருளாதார மந்தநிலை, மற்றும் அரசியல் மாற்றங்கள் போன்றனவற்றிற்கு மத்தியிலும் உணர்வு பூர்வமான விடுதலையொன்றினைப் பெற்றுள்ளது. 2012 வருடமானது 31 மில்லியன் பிரயாணிகளின் புறப்பாடுகளின் பொருட்டு, 2.9 பில்லியன் பயணிகளைப் பரிமாற்றியுள்ளதாக பதிவாகியுள்ளது. 5% விகிதத்திற்கும் மேலான பிரயாணிகள் காவுகையுடைய வளர்ச்சியொன்று உலகளாவிய விமான சேவைகள் மூலம் அடையப்பட்டுள்ளது.

ஏனைய பிராந்தியங்களுள் ஆசிய பசுபிக் பிராந்தியமானது, 2011 முழுமையாகவும் 6.9% விகிதமான வளர்ச்சியொன்றுடன் கூடிய 1599 மில்லியன் வருமானம் ஈட்டும் பயணிகள் கிலோமீற்றருடனான பங்களிப்புடன் முன்னிலை வகித்து வருகின்றது. பயணிகள் கேள்விக்கு எதிர்மறையாக வான் வழி சரக்குப் பரிமாற்றத்திற்கான கேள்வியானது மீளாய்விற்கு உட்படுத்தப்படும் வருடத்தில் -1.2% வீத எதிர்மறையான வளர்ச்சிப் போக்கொன்றைக் காட்டியுள்ளது. இது 2010 இலிருந்து வான்வழி சரக்குப் பரிமாற்றத்திற் பதிவாகியுள்ள இரண்டாவது தொடர்ச்சியான வளர்ச்சியாகக் காணப்படுகின்றது.

போருக்குப் பின்னரான அபிவிருத்திக் கொள்கையுடன், இலங்கையானது பாரிய அபிவிருத்தி கட்டத்தினை எதிர்கொள்கின்றது. சிவில் விமானப் போக்குவரத்துத் துறையானது விமானப் போக்குவரத்துச் செயற்பாட்டு மையமாக குறித்த பிராந்தியத்தில் அதன் நிலையினை ஏற்படுத்துவதனூடாக முன்நோக்கிச் செல்லும் பொருளாதார வளர்ச்சிக்கு பிரதான மூலமொன்றாகத் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது. அக்கறையுடையோரின் இயலுமைத்தன்மைகளை உயர்த்து-வதற்கென எடுக்கப்பட்டுள்ள இத்தகைய தேவையினை எதிர்கொள்வதற்கான அத்தியாவசியமான விடயங்களிற் சில, விமானப் போக்குவரத்தில் அக்கறையுடையோர் மற்றும் உப துறைகளுக்கான ஏற்கனவேயுள்ள நியதிச்சட்ட செய்முறைகள் மற்றும் உற்பத்தியாற்றல் கொண்ட கீழ்க்கட்டுமான முதலீடுகள் போன்றனவற்றின் தாராளமயமாக்கலினை உள்ளடக்குகின்றது.

மேற்கூறப்பட்ட இலக்கிற்கு இணங்க இலங்கைக்குச் சொந்தமான சர்வதேச செயற்பாட்டாளர்கள், 1.1 மில்லியன் தொகையுடைய இடைநிற் பயணிகளின் அசைவுடன் கூடியதான 7.1 மில்லியன் தொகையினைக் கொண்டதான மொத்தப் பயணிகள் அசைவினைப் பதிவு செய்துள்ளனர். இந்த வளர்ச்சியானது 2011 இல் இடம்பெற்ற மொத்தப் பயணிகளில் 15% வளர்ச்சி மற்றும் இடைநிற் பயணிகள் தொகையில் 61% குறிப்பிடத்தக்கதான வளர்ச்சியைக் கொண்டு அமைந்துள்ளது. தொடர்ச்சியாக வான் வழி சரக்குப் பரிமாற்றல் துறையானது 9.8% வளர்ச்சியைக் கொண்டதான மொத்தமாக 174,204 மெற்றித்தொன் எடை கொண்டதான சரக்குளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. மேலும் 2013 இல், இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் (MRIA) உருவாக்கத்துடன் நாட்டின் அரசாங்கமானது நாட்டின் விரைவான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை முன்னெடுத்துக் கொள்வதற்கு உறுதி பூண்டுள்ளது.

இலங்கையினது நியதிச் சட்டச் சேவை வழங்குனரான சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான இலக்கு யாதெனில் இலங்கையில் விமானப் போக்குவரத்துத்துறையில் அக்கறை கொண்டோர்கள் மீதான பாதுகாப்பு மேற்பார்வைச் செயற்பாடுகளை மேற்கொள்வதாக அமைகின்றது. எனவே இலங்கையில் இவ்வாறானதொரு இலக்கினை அடைந்து கொள்ளலானது விமானப் போக்குவரத்தில் பூச்சிய

விபத்துக்களையும், சம்பவமொன்றினையும் பதிவாக்கியுள்ளது.

2012 காலப்பகுதியில் சர்வதேச சிவில் விமானப் போக்குவாத்து அமைப்பினால் முடிவுறுத்தப்பட்ட உலகளாவிய பாதுகாப்புச் சோதனைச் செயற்றிட்டமானது (USAP) 145 நாடுகளின் 67% உலகளாவிய சராசரிக்கு எதிராக 85% அளவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புடன் தொடர்புபட்டதான நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செய்முறைகள் (SARPs) அமைந்து காணப்படுவதனைக் காட்டுகின்றது.

நாட்டினுடைய உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையில் யாழ்ப்பாணம் - கொழும்பு மற்றும் கொழும்பு - யாழ்ப்பாணம் என்பது பிரசித்தி பெற்ற பயண இலக்குகளாக இருப்பதுடன், மொத்தத்தில் 5436 பிரயாணிகளைக் காவுகைக்கு உட்படுத்தியதனூடாக மிகப் பெரிய வளர்ச்சியொன்றைப் பதிவாக்கியுள்ளது.


நியதிச் சட்ட விடயங்களை முன்னெடுக்கக் கூடியவாறு தேவையான அளவில் உபகரணமிடுதல் என்பது ஒழுங்குபடுத்துனர் ஒருவரால் தவிர்த்துக்கொள்ளப்பட முடியாததாகக் காணப்படுகின்றது. எனவே நியதிச் சட்டசேவையின் உள்நோக்கமானது பிரயோகங்களில் நியமங்களின் தரக்குறைவொன்றினை ஏற்படுத்திக் கொள்ளாதவாறு நிறைவுறுத்துத்தப்படுகின்றது. இவ் இலக்கினை நிறைவு செய்துகொள்ளும் பொருட்டு, சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆனது புதிதாக ஒன்பது (09) ஊழியர்ளை உள்வாங்கிக்கொண்டது. சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆனது நிறுவனத்தினுள் அதன் ஊழியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் நடுநிலை வகிக்கின்றனர் என்பதனை முழு மனதுடன் நம்புகின்றது. எனவே நூற்றுத் தொண்ணூற்றெழு (197) பயிற்சிகள், கருத்தரங்குகள், வேலைப் பட்டறைகள், கூட்டங்கள், மற்றும் மகாநாட்டு வசதிகளை வழங்குவதன் மூலம் ஊழியர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கு சீ.ஏ.எஸ்.எல் முன்னுரிமையளிக்கின்றது.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான இலக்கொன்றாக நல்லுறுதிமிக்க விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சூழலொன்றினை உருவாக்கிக் கொள்ள சீ.ஏ.ஏ.எஸ்.எல் வேலைச் செய்முறையின் தன்னியைபாக்கல் அமைந்திருந்தது. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட வருடத்தில் சோதனை அறிக்கைகளின் தன்னியக்க உருவாக்கம் மற்றும் பகிர்ந்தளிப்பு என்பனவற்றினை விளைவாகக் கொண்டாதான இலத்திரனியல் சரிபார்க்கும் பட்டியல் வெற்றிகரமான முறையில் நிறைவு செய்யப்பட்டது. சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவில் தன்னியக்கமயமாக்கற் செய்முறையினது 80% ஆன வேலைகள் நிறைவு பெற்ற நிலையில் செய்முறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேற் கூறப்பட்ட தன்னியக்க மயப்படுத்தற் செய்முறையானது நாடுகளுக்கு ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் முகவரால் (EASA) அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு மேற்பார்வை வசதியூட்டப்பட்ட ஒருங்கிணைந்த பிரயோகத்தினூடாக (SOFIA) வசதியளிக்கப்பட்டது. மேலும், சீ.ஏ.ஏ.எஸ்.எல் இல் வினைத்திறனானதும் பயனுறுதி மிக்கதுமான நிதி முகாமைத்துவத்திற்கென நிதி முகாமைத்துவ முறைமையொன்று விருத்தி செய்யப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்துத்துறையினை வளப்படுத்துவதற்கென, மனித மூலதனம் மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றினைக் கொண்டதுமான ஒரு வலிமையுடையதும், உடனடியானதுமான சேர்வை வேண்டப்படுகின்றது. சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆனது அநுராதபுர மாவட்டத்தில் ஐந்து (05) கல்வி வலயங்களில் கல்வி மற்றும் அறிவூட்டல் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்ததன் மூலம், இலங்கைச் சமூகத்தில் குறிப்பாக இளையோரிடத்தில் விமானப் போக்குவரத்துத்துறையினை எடுத்துச் சென்று அதன் சாதகமானதொரு தூண்டுதலினை முன்னெடுத்து வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக “குவான்ஷர” என்னும் சஞ்சிகையானது இரண்டாயிரத்துத் எண்ணூறு பாடசாலைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2012 இல் சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் மொத்த வருமானம் மற்றும் செலவுகள் முறையே 977 மில்லியன்கள் மற்றும் 606 மில்லியன்கள் ஆகும். சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் பிரதான வருமான மூலகங்களாக கடல் கடந்த விற்பனை மிகைக் கட்டணம், சேவைக்கட்டணங்கள், விமானமேறல் வரி, மற்றும் நியதிச் சட்ட சேவை வருமானங்கள் காணப்படுகின்றன. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், மேற் கூறப்பட்ட வகையுடைய வருமான மூலகங்களினூடாகப் பெறப்பட்ட மேலதிக வருமானம் 31% ஆனதொரு அதிகரிப்பொன்றினைப் பெற்றுள்ளது.

மேலும் நான் தலைவராக இருந்து எனது தொழிற்பாடுகளை முன்னெடுக்கும் போது வழங்கப்பட்ட அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவிற்காக சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், அதன் பணிப்பாளர் நாயகம், மற்றும் அதன் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியறிதலை தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், நான் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், அதன் செயலாளர் அவர்கள், மற்றும் அதன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் எனக்களித்த கூட்டிணைவு மற்றும் வழிகாட்டல் என்பனவற்றிற்காக இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.



ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த
தலைவர்,
இலங்கை சிவில் விமானப்
போக்குவரத்து அதிகாரசபை



# சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை

## உலகளாவிய நிலைமை

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடமானது உலகளாவிய விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலுக்கு வேறுபட்ட கோணங்களில் பலவகையான முடிவுகளைத் தோற்றுவித்துள்ளது. உலகளாவிய விமான சேவைகள் 5.3 (+5.5% Y/Y) ரில்லியன் வருமானப் பயணிகள் கிலோ மீற்றரினையும், 180 பில்லியன் சரக்குத் தொன் கிலோ மீற்றரினையும் 2.9 (+5.0 + year on year) பில்லியன் பிரயாணிகளை அட்டவணைப்படுத்தப்பட்ட 31 மில்லியன் புறப்பாடுகளின் மூலம் காவுகைக்குட்படுத்தித் தொழிற்பட்டுள்ளது,

வான் போக்குவரத்தின் அடிப்படைக் கருதுகோளாகக் காணப்படும் பாதுகாப்பு எனும் வியூகத்திலிருந்து நோக்குகையில் 2012 ஆண்டானது ஒவ்வொரு மில்லியன் புறப்பாட்டிற்கும் 3.2 விபத்துக்களைப் பதிவாக்கி 99 விபத்துக்களில் 372 இறப்புக்களுடன், 2004 இல் இருந்து மிகப் பாதுகாப்பான வருடமாக இருந்து வருகிறது.

2012 இல், எதிர்காலத்தின் பாதுகாப்பான செயற்பாட்டிற்காக தொழிநுட்ப மற்றும் மனிதவள தேவைப்பாடுகளில் நாட்டின் பாதுகாப்பு வேலைத்திட்டம் (SSPs) பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை, மற்றும் முதலீட்டில் அக்கறை கொண்டோரிடையேயான அதிக படியான இணைவாக்கம் மற்றும் முதலீடுகளில் புதுமை முன்னிலைப் படுத்தப்பட்டதுமான புதிய தகவல்களின் பகிர்வு போன்றனவற்றுடன் தொடர்புபட்டதான உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செய்முறையைக் குறிப்பிட்டு சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து இணக்கப்பாட்டிற்கு புதிய பாதுகாப்பு முகாமைத்துவ இணைப்பொன்றின் (இணைப்பு 19) உள்வாங்கப்படுவதற்கான செயற்பாடுகளை ICAO ஆரம்பித்துள்ளது.

ICAO ஆனது தொடர்ச்சியான மனப்பாங்கொன்றுடன், சிவில் விமானப் போக்குவரத்தில் தற்காப்பு மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடையதான சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செய்முறைகளுடன் நாட்டினது இணக்கப்பாட்டு மட்டத்தினை மதிப்பிட்டு, தனது மேற்பார்வை செய்வதனை இலக்காகக் கொண்ட தொடர்ச்சியான மேற்பார்வை முறைமையுடன் (CMA) தொடர்ந்து செயற்படுகின்றது. ஆய்வு முடிவில் அவர்களது சுருக்கமானது உத்தியோக பூர்வ இணையத்தளத்தினூடாக மக்களுக்கு தெரியப்படுத்த ஆவன செய்யப்படுகின்றன.

சிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலில் அனேகமாக முன்னுரிமைப்படுத்தப்படும் விடயங்களில் குறிப்பிடக் கூடியதாக சூழலில் நிலைத்திருத்தல் தன்மையின் முன்னேற்றத்திற்கு விமானப் போக்குவரத்தின் அர்ப்பணிப்புகளும் செயற்பாடுகளும் அமைந்திருந்தன. பல்வேறுபட்ட நாடுகளிற்கிடையில் சர்ச்சைக்குரிய நிலைமையொன்றிற்கு வெளியீட்டுப் பொருட்கள் மீதான வர்த்தக வரி முறைமையினுள் (EUETS) விமானப் போக்குவரத்தின் உள்ளடங்கலானது வழிவகுத்தது. பெரும்பாலான நாடுகள் தேசிய இறைமைத்தன்மையினை குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளும் ஒருதலைப்பட்ச முறைமையாக EUETS ஐ அடையாளங்கண்டு கொண்டன. ICAO செயற்பாட்டுத் திட்டமொன்றினை சமர்ப்பித்தலின் மூலம் காபனீரொட்சையிட்டு வெளியீட்டினை குறைப்பதற்கு நாடுகளுக்கான அளவீட்டுக் கூடையொன்றினை (a Basket of Measure) முன்மொழிந்தது.

## விமான சேவைக் கைத்தொழில்

சர்வதேச வான் போக்குவரத்து இணையத்தால் (IATA) வெளியிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2012 இல் வான் வழி சரக்குப் பரிமாற்றம் 15% வீழ்ச்சியொன்றினையும், பயணிகள் கேள்வியில் 5.3% (year on year) அதிகரிப்பொன்றும் காணப்பட்டது. ஆண்டுக்கான விமான சேவைகளின் ஏற்றற் (Load) காரணிகள் 79.1% மட்டத்திற்கு அண்மித்த பதிவொன்றினை வெளிப்படுத்தியது. சர்வதேச சந்தைகளின் கேள்வியானது உள்நாட்டுப் பயணத்துடன் (4.0%) ஒப்பிட்டுப் பார்க்கும் போது 6.0% கொண்ட ஒரு துரித வீதத்தில் விரிவாகியுள்ளது. இவ் இரு நிலைமைகளிலும் வெளியேறும் சந்தையானது வளர்ச்சியின் பிரதான விடயமாகக் காணப்பட்டது. குறித்த ஆண்டுக்கான வான் வழிச் சரக்கு ஏற்றற் காரணியானது 45.2% ஐக் காட்டுகின்றது. இன்றைய

இணைக்கப்பட்ட உலகில் தேவைக்குரிய உலகளாவிய வான் போக்குவரத்தானது எவ்வாறு இருந்தது என்பதனை வெளிக்காட்டுவதனூடாக, 2012 இல் உறுதியான பயணிகள் கேள்வி வளர்ச்சியானது பொருளாதார மந்த நிலைக்கு மாறுபட்டதாக அமைந்தது. அதே வேளை, முன்னணி பாதுகாப்புடைய விமான சேவைகளால் வெளிப்படுத்தப்பட்ட கிட்டிய- பதிவுசெய்யப்பட்ட ஏற்றற் காரணிகள் கொள்ளளவினை சுதாகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டன. 2012 இல் மதிப்பிடப்பட்ட 6.7 பில்லியன் அமெரிக்க டொலர் இலாபத்தினை விமான சேவைகள் உருவாக்கிக் கொள்வதற்கு உதவி வழங்குவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் உயர் வானூர்திப் பயன்பாடு உயர் எரிபொருள் விலையால் பாதிப்பிற்குள்ளாயின. எனினும் விமான சேவைகளின் தேறிய இலாப எல்லையானது 1% ஆகவே காணப்படுகின்றது. பயணிகள் சந்தைகளின் வளர்ச்சிக்கு முரணானதாக வான்வழி சரக்குப் பரிமாற்றற் சந்தையானது 1.5% ஆல் பின்னடைவினைக் காட்டியது. இது சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும், வானூர்தி மூலம் பரிமாற்றம் செய்யப்பட்ட பொருட்கள், கடற் கப்பல் மூலமான தொகுதியாக்கப்பட்ட பொருட் கையாள்கைக்கு மாற்றஞ் செய்யப்பட்டமையே பிரதான காரணங்களாகும். மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், விமான சேவையின் செயற்பாட்டுச் செலவுக் கட்டமைப்பில் 33% மான அளவினை எரிபொருள் விலையானது கணக்கிற் கொள்ளப்படுகின்றது. இன்றைய விமான சேவைகள் 2003 இல் எரிபொருளுக்கென தாம் செலவு செய்த தொகையின் ஐந்து (5) மடங்கினை செலவு செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகளாவிய விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலின் பொருளாதார இலக்கு

வான் போக்குவரத்தானது உலகளாவிய பொருளாதாரச் செயற்பாடுகளில் 490 பில்லியன் அமெரிக்க டொலர்களை உருவாக்கி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெரும் பங்கொன்றினை வகித்துவருகின்றது. விமானப் போக்குவரத்தினால் உருவாக்கப்படும் ஏறத்தாழ 35.9 மில்லியன் வேலைவாய்ப்புக்களானவை அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் மொத்தமாக உருவாக்கப்படும் வேலைவாய்ப்புக்களில் அரைப்பங்கிற்கும் மேலான பங்கினைக் கொண்டுள்ளன. 2030 இல் விமானப் போக்குவரத்தால் மொத்தமாக 82.2 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடைய வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் என்பதுடன், 6.9 ரில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு பங்களிக்கும் என சர்வதேச வான் போக்குவரத்து இணையம் (IATA) மதிப்பீடு செய்துள்ளது. மொத்த உலக வர்த்தகத்தில் 35% இற்குச் சமமான 5.3 ரில்லியன் அமெரிக்க டொலர்கள் பொறுமதியான பொருட்கள் வருடாந்தம் வான் வழியாக நகர்த்தப்படுகின்றன.

### வானூர்தி வினியோகங்கள்

போ(B)யிங் கம்பனியானது 601 விமானங்களை (1999 முதல்) வினியோகித்துள்ளதாகப் பதிவுகள் வெளிப்படுத்தும் அதேசமயம், எயார் பஸ் கம்பனியானது 2012 இல் 588 வானூர்திகளை வினியோகித்துள்ளது. மேலும் போ(B)யிங் கம்பனியானது தனது புதிய உற்பத்தியான B-787 ரகத்தினையுடைய 49 வானூர்திகளை எட்டு (8) வாடிக்கையாளர்களுக்கு வினியோகித்துள்ள அதே வேளை எயார் பஸ் கம்பனியானது தனது புதிய உற்பத்தியான A-380 ரகத்தினையுடைய 99 வானூர்திகளை தனது ஒன்பது (9) வாடிக்கையாளர்களுக்கு ஆண்டின் இறுதிவரை வினியோகித்துள்ளது.

### பிராந்திய நிலைமை

கைத்தொழில் எதிர்வுகூறல் வெளிப்படுத்துகையின் படி, அடுத்து வரும் இருபது (20) வருடங்களில் உலகில் வான் போக்குவரத்து துறையின் வளர்ச்சியானது ஏசியா- பசுபிக் பிராந்தியத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட பிரயாணிகளால் அதிகளவில் தோற்றுவிக்கப்படும். உலகில் காணப்படும் வேலைப்பழு கொண்ட இருபது (20) சர்வதேச விமான நிலையங்களில், 2012 இல் எழுபத்தி நான்கு (74) மில்லியன் பிரயாணிகளைக் கையாளும் உலகில் இரண்டாமிடம் வகிக்கும் பீ(B)ஜீங் விமான நிலையம் உட்பட ஆசிய - பசுபிக் பிராந்தியத்திலுள்ள ஆறு (6) விமான நிலையங்களைக் கொண்டிருக்கும். ஏனைய பிராந்தியங்களுள் ஆகக் கூடுதலான வளர்ச்சியைப் பதிவாக்கி, ஆசிய - பசுபிக் பிராந்தியமானது 2011 இல் 5.4% தேறிய இலாப வளர்ச்சியைக் பதிவாக்கியுள்ளது. மேலும், 2012 இல் வருமான தொன் கிலோமீற்றர் (RTK) தொடர்பில் 2.3% இனை ஆசிய-பசுபிக் பிராந்தியமானது பதிவாக்கியுள்ளது. 2012 இல் அனைத்து இவ்வாறான சாதக வளர்ச்சிகளுக்கு மத்தியில், இந்திய விமானப் போக்குவரத்துத் துறையானது குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சிப் போக்கொன்றினைப் பதிவாக்கியுள்ளது. இந்தியன் விமான சேவையானது எட்டு (8) பில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான பற்றினைக் கொண்டுள்ளதுடன், கிங்பி(b)ஷர் விமான சேவையானது இரண்டு (2)பில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றினைப் பதிவாக்கியுள்ளது.

### உள்நாட்டு நிலைமை

இலங்கையில், 2012 வருடமானது விமானப் போக்குவரத்துத்துறைக்கான குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டிய மற்றுமொரு சவால் மிக்க ஆண்டாக இருந்துவந்துள்ளது. இருந்தும் இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறை அதன் நூற்றாண்டில் கால்பதிக்கும் கசப்பற்ற வருடாகவும் அமைந்தது.

அரசாங்கத்தின் யுத்தத்தின் பின்னரான பொருளாதாரக் கொள்கையானது “மஹிந்த சிந்தனை” மூலம் அடையாளங் காணப்பட்ட ஐந்து (5) மையங்களின் கீழ், விமானப் போக்குவரத்து மையமொன்றினை உருவாக்கிக் கொள்ளும் இலக்குடன், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பெறுவதற்கான பிராந்தியக் காரணிகளில் ஒன்றாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை அடையாளங்கண்டுள்ளது.

2012 இல், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மூலம் கையாண்ட மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 15% (Y/Y) வளர்ச்சி வீதத்தினைக் கொண்ட 7.2 மில்லியனைப் பதிவாக்கியுள்ள அதேவேளை, இடைநிற் பயணிகளின் அளவானது மிகப் பெரிய வீதத்தால் (61%) வளர்ச்சி கண்டுள்ளது. வானூர்திகளின் அசைவானது 12% வளர்ச்சியுடனான 0.5 மில்லியன் அண்ணளவில் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தேசிய வான் பயண ஏற்பாட்டாளரான சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஆனது BIA ஊடாகப் பயணிக்கும் பயணிகளில் 88% ஆன பயணிகளை நகர்த்தியுள்ளது. நாட்டிற்குச் சொந்தமான குறைந்த விலைகொண்ட வான்பயண ஏற்பாட்டாளரான மிஹின்லங்கா, கொழும்பிற்கு வருகை தந்த பயணிகளில் 8% இனரை நகர்த்தியுள்ளது. சென்னை, டுபாய், சிங்கப்பூர், மாலைதீவு, மற்றும் டோகா ஆகிய நாடுகள் கொழும்பிலிருந்து பிரயாணிக்கும் வான் பயணிகளின் விருப்பத்திற்கேற்ப, பயண இலக்குகளை அமைத்திருந்தது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட வருடத்தில் 200% இற்கும் மேற்பட்ட வளர்ச்சியொன்றினைப் பதிவாக்கி ஒரு தனிச் சிறப்புமிக்கதான வளர்ச்சிக்கான அனுபவத்தினை உள்நாட்டு விமானப் போக்குவரத்தானது பெற்றுள்ளது. யாழ்ப்பாணம்-இரத்மலானை மற்றும் இரத்மலானை- யாழ்ப்பாணம் இடையிலான பயணிகளின் வளர்ச்சியானது வளர்ச்சிக்கான பங்களிப்பில் முக்கியமானதொன்றாக இருந்துள்ளது. உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையானது அதன் வளர்ச்சியினைக் காட்டியுள்ள போது, 2011 உடன் ஒப்பிடுகையில் பொது விமானப் போக்குவரததுத் துறையானது அதன் பலூன் செயற்பாடுகளில் குறைவானதொரு வளர்ச்சிப் போக்கினையே காட்டியுள்ளது. மேலும் நாட்டினது பொது விமானப் போக்குவரத்துப் பகுதிக்கு பரா மோட்டர் செயற்பாடானது உள்ளடக்கப்பட்டுள்ளது.

2012 இல், இலங்கை ICAO ஆல் மேற்கொள்ளப்பட்ட அதன் உலகளாவிய பாதுகாப்புச் சோதனை வேலைத்திட்டத்தின் கீழ், (USAP) சோதனை நிகழ்வொன்றிற்கு முகங் கொடுத்திருந்தது. சோதனை முடிவானது 145 நாடுகளின் உலக சராசரியான 67% இற்கு எதிராக விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு நடவடிக்கையுடன் தொடர்புடையதான நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செய்முறைகளுடன் (SARPs) இணங்கிச் செயற்படலில் 85% கூடியதான நாட்டின் திறன்மிக்கதொரு செயற்றிறன் ஒன்றினை வெளிப்படுத்தியருந்தது.


வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனியானது நாட்டிற்கான இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதில் மும்முரமாகச் செயற்பட்டது. சீ.ஏ.ஏ அவ் விமான நிலையத்தினைச் சான்றுப்படுத்தும் செயற்பாட்டில் ஒருங்கிணைந்து பணியாற்றியது. இவ் விமான நிலையமானது 18 மார்ச் 2013 இல் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்புச் செயற்பாடுகள் 2011 ஐ ஒத்ததாக எவ்வித குறிப்பிட்டுக் கூறத்தக்கதான விபத்துக்களோ அல்லது சம்பவங்களோ பதிவாகியிராத வகையில் காணப்பட்டது. எனினும், சீ.ஏ.ஏ இன் பாதுகாப்பு செயற்றிறன் இலக்குகளை பேணுவதென்ற அதன் விருப்பத்திற்கு மாறாக வருந்தத்தக்கதான விடயமொன்றாக, பறப்பின் போது குழப்பமான நிலை காரணமாக சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் பறப்பொன்றில் கடுங்காயங்களுக்கு விமானப் பணிப்பெண் ஒருவரும், சிறிய காயங்களுக்கு பன்னிரெண்டு (12) பயணிகளும் உள்ளக்கப்பட்டனர். இவற்றிற்கு மேலாக, இலங்கையில் விமானப் போக்குவரத்து இடம்பெற்று நூற்றாண்டினை நினைவு கொள்ளும் முகமாக, அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் பிரசன்னத்துடன் 07 டிசம்பர் 2012 அன்று அலரி மாளிகையில் இடம்பெறும் பிரதான நிகழ்வு உள்ளடங்கலான செயற்பாடுகளின் நிரலொன்றினை முன்னெடுப்பதற்கான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் சீ.ஏ.ஏ.எஸ்.எல் 92% வீதத்தலான அதிகரித்த செலவொன்றிற்கெதிராக அதன் வருமானமானது 31% ஆல் அதிகரித்திருந்தது. சீ.ஏ.ஏ.எஸ்.எல் இன் வருமானமீட்டலில் பிரதான பங்கை வகித்தவையாக, கடல் கடந்த விற்பனை மிகைக் கட்டணம், விமானமேறல் வரி மீதான சேவைக் கட்டணம், மற்றும் நியதிச் சட்டச் சேவைகள் மீதான வருமானம் என்பன அமைந்திருந்தன.

இந்த அலுவலகத்தில் நான் எனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தமது உதவிகள் மற்றும் ஆதரவினை வழங்கியதற்காக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர், செயலாளர், மற்றும் அதன் ஊழியர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், எனது தொழிற்பாடுகளில் உதவிபுரிந்த மற்றும் வழிப்படுத்திய சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர், உபதலைவர், மற்றும் அதன் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக தமது கடமைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தமைக்காக, உயர்ந்தளவு ஊக்குவிக்கப்பட்ட, ஒழுக்கப்படுத்தப்பட்ட, மற்றும் நம்பகத்தன்மை மிக்க சீ.ஏ,ஏ இன் ஊழியர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றியை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



எச்.எம்.சீ.நிமல்சிறி

சிவில் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.

# பக்கத்தோற்றம்

## மீள்பார்வை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 27 டிசம்பர் 2002 இல் தாபிக்கப்பட்டதுடன், இது இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது வாசகத்திற்கமைய கணக்குகளின் கணக்காய்வு நோக்கங்களுக்காக நியதிச் சட்ட நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் (ICAO) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுக்கிணங்கிய வகையிலும், 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கிய வகையிலும், சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, அதன் செயற்றிறன், மற்றும் அது சார்ந்த நியதிச்சட்ட விடயங்களை மேம்படுத்துதல் மற்றும் இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி, அதன் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பிரதான பங்காளியாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை வழிப்படுத்தல் என்பன இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடுகளாக அமைகின்றன.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை எட்டு (08) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களில் ஐவர் (05) சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் நியமனம் பெறுகின்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியொருவர், மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் என்போர் பதவிவழி நியமனம் பெற்றோராக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் சேவையாற்றுகின்றனர். நியமனம் பெற்ற உறுப்பினரது உத்தியோக பூர்வ காலமானது நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களாகும். அதிகாரசபையானது தற்போது சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்படுவதாக அமையும்.

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள்

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த (தலைவர்)

திரு. ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர (உபதலைவர்)

திரு. கே.ஜே.வி.என். ஜெயவர்த்தன (உறுப்பினர்)

திரு. ஷஹி அலீப் (உறுப்பினர்)

திரு. டினேஷ் ஹாலகே (உறுப்பினர்)

பதவி வழி நியமனம் பெற்ற உறுப்பினர்கள்

பாதுகாப்புச் செயலாளர்

நிதியமைச்சின் பிரதிநிதி

சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம்



தலைவர்,
ஜெனரல் றொஹஹன் டி.சில்வா தளுவத்த,
WWV, RWP, VSV, USP, LOM, ndc, psc

தலைவர் ஜெனரல் றொஹஹன் டி.சில்வா தளுவத்த, WWV, RWP, VSV, USP, LOM, ndc, psc அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை பன்னிபிட்டிய தர்மபாலா வித்தியாலயத்தில் பெற்றிருந்ததுடன் அவர் தனது இரண்டாம் நிலைக் கல்வியினை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் பெற்றிருந்தார். அவர் இங்கு கல்வியிலும், விளையாட்டிலும் திறமை காட்டினார்.

இவர் இலங்கைத் தரைப்படையில் 1961 இல் இணைந்து கொண்டார் என்பதுடன் அவர் தமது உத்தியோகத்தர் கடெற் (Cadet) பயிற்சியின் பொருட்டு றோயல் இராணுவ அக்கடமிக்கும் மற்றும் இங்கிலாந்து சன்ட்கியூஸ்ற் இற்கும் அனுப்பிவைக்கப்பட்டார். இலங்கை இராணுவப் பயிற்சி மாணவர்களில் முதலாவதாக வெளியேறிய இவர், கவசப் படைப்பிரிவில் 2வது லெப்டினன்ற் பதவிக்கு அமர்த்தப்பட்டார். மேலும் இவர் தனது இளம் உத்தியோகத்தர் பயற்சியின் பொருட்டு இங்கிலாந்து - பௌங்ரன் (Bowington, UK) இல் உள்ள றோயல் கவசப் படைப்பிரிவு நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவர் இந்தியா - வெலிங்ரனில் புகழ் பெற்ற உத்தியோகத்தர் கல்லூரிக் கற்கைநெறி, இந்தியா-புதுடெல்லியில் தேசிய பாதுகாப்புக் கற்கை நெறி உள்ளடங்கிய பல கற்கை நெறிகளைப் பெற்றார். இவரது 41 வருட கால முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் இவர் பல்துறை செயற்பாட்டுகள் கொமாண்டர் (கட்டளை அதிகாரி), ஊழியர் பிரதானி, பகுதி கொமாண்டர், பிரிகேட் கொமாண்டர் மற்றும் இராணுவ பயற்சிக் கல்லூரி கட்டளை அதிகாரி என பல முக்கிய கட்டளையிடல், உத்தியோக, மற்றும் கற்கைநெறி நியமனங்களை தன்னகத்தே கொண்டிருந்தார்.

மேலும் இவர் வடக்கு மற்றும் கிழக்கு அனைத்துச் செயற்பாடுகளுக்குமான கட்டளை அதிகாரியாக பணிபுரிந்த வேளை 1995 இல் யாழ்ப்பாணம் குடாநாடு விடுவிக்கப்படுவதற்கான சூரியக்கதிர் நடவடிக்கை எனப்படும் மிக முக்கிய இராணுவ நடவடிக்கை உள்ளடங்கலாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

மேலும் இவர் ஜெனரல் தளுவத்தயாலும் அமெரிக்காவின் பசுபிக் இராணுவ கட்டளை அதிகாரியாலும் இணைந்து நடாத்தப்பட்ட பசுபிக் இராணுவ முகாமைத்துவக் கருத்தரங்கு உள்ளடங்கலாக பல சர்வதேச கருத்தரங்குகளில் பங்குபற்றினார் என்பதுடன், இந் நிகழ்வில் இவருக்கு வெளியார்ந்த சேவைகளின் செயற்பாடுகளில் செயற்பட்டுக்கொண்ட தனிச் சிறப்பு மிக்க செயலாற்றுகைக்காக அமெரிக்க அதிபரால் LEGRON OF MERIT எனும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இராணுவ கட்டளை அதிகாரியாக அவரது சேவையின் மகுடத்தினை அடைந்த நிலையில், அவர் 1998 டிசம்பரில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவரது பெறுமதி மிக்க சேவையை கௌரவிக்கும் பொருட்டு, இவர் ஜெனரல் நிலைக்கு உயர்த்தப்பட்டதுடன், இணைந்த செயற்பாட்டுச் செயலகத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இராணுவம் வன்னி பகுதியை இழந்து கொண்டு வரும் போதும், யாழ்ப்பாணம் குடாநாட்டை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும், இவர் பாதுகாப்பு செயலணிக்கான பிரதானியாக நியமிக்கப்பட்டதுடன், நிலமையினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரும் பொருட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். வெற்றிகரமாக இலக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பொருட்டு, இவர் இறுதியாக 2002 இல் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர், அவர் பிரேஸிலுக்கு தூதுவராக நியமனம் பெற்றார். அதுவரை அந் நாட்டில் தூதுவராலயமொன்று இல்லாததன்

பொருட்டு, இவரே தூதுவராலயமொன்றை அங்கு நிறுவவேண்டியிருந்தது. தூதுவராக இருந்த அவரது கடமைப் பயண முடிவில் இலங்கைக்கும் பிரேஸிலுக்கும் இடையிலான சிறந்த தொடர்பின் முன்னோடியில் அவரது வெளியார்ந்த பங்களிப்பினை இனங்கண்டு பிரேஸில் ஜனாதிபதியினால் GRAND CROSS OF THE NATIONAL ORDER OF THE SOUTHERN CROSS எனும் வெகுமதியளித்து கௌரவிக்கப்பட்டார். இவர் இலங்கைக்கு திரும்பிய போது 2011 இல் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். 2012 இல் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். மேலும், இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் வேந்தராக நியமிக்கப்பட்டார்.

இவர் ஆர்வம் மற்றும் பல்துறை பயிற்சித் திறன் மிக்க விளையாட்டு வீரனாக இருந்து மெய்வல்லுநர் போட்டிகள், கூடைப்பந்து, கிரிக்கெட், பற்மின்டன் மற்றும் ரெனிஸ் என்பவற்றில் வர்ணங்களை பெற்று வெற்றியீட்டினார். இவர் இருபது வருடங்களாக தேசிய கூடைப்பந்தாட்ட அணியினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், அவ் அணியின் தலைமைப் பொறுப்பினையும் ஏற்றிருந்தார். மெய்வல்லுநர் போட்டியில் மிக முக்கிய அடைவு மட்டமாக பிரிட்டிஸ் இராணுவ வெற்றி வீரர்கள் நிகழ்வில் மும்மடங்கு பாய்தல் நிகழ்வில் வெற்றியீட்டியதனையும், பிரிட்டிஷ் தேசிய மெய்வன்மைக் கூட்டங்களில், மெய்வன்மையில் பிரிட்டிஷ் இணைந்த சேவைகளில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றிருந்தார். இவர் மெய்வன்மையாளருக்கான பிரிட்டிஷ் இணைந்த சேவைகள் வர்ணங்களை வெற்றியீட்டக் கூடியவராகவும் திகழ்ந்தார்.

அவர் தனது சேவைக்காலம் முழுமையிலும், அவர் பொறுப்பேற்றிருந்த ஒவ்வொரு கடமையிலும் தனது முகாமைத்துவ திறனை வெளிக்காட்டியிருந்தார்.



உபதலைவர்

## திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ. ஜயசுந்தர

திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர அவர்கள், அவரது ஆரம்பக் கல்வியினை கண்டி தர்மராஜாக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார் என்பதுடன், இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். இவர் 1971 இல் பொலிஸ் திணைக்களத்தில் தன்னை இணைத்துக் கொண்டதுடன், அவரது 37 வருடகால சேவையின் பின்னர் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஓய்வு பெற்றார். இவர் அவரது முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் பயிற்சியின் நிமிர்த்தம் ஜப்பான், மலேசியா, ஸ்கொட்லாண்ட் யாட், அமெரிக்க ஐக்கிய இராச்சியம், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தார். மேலும் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உதவித் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராக கடமைகளை ஏற்பதற்கு முன்னர், வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) கம்பனியில் விஷேட நடவடிக்கைப் பணிப்பாளராக இருந்தார்.

## உறுப்பினர்கள்



### திரு. கோட்டாபேய ராஜபக்ஷ - **RWP, RSP**


பாதுகாப்புச் செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு - (பதவிவழி உறுப்பினர்)

திரு கோட்டாபேய ராஜபக்ஷ RWP, RSP அவர்கள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்றார். இவர் தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினை நிறைவு செய்ததுடன், 26 மே 1972 இல் இவர் இலங்கைத் தரைப்படையின் சமிஞ்ஞைப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

1974 இல் இலங்கைத் தரைப்படையின் சிங்க படைப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டார். இவர் மேலும் 1980 களில் ராஜரட்ட ரைபிள் படைப்பிரிவிலும், 1983 களில் கஜபா படைப்பிரிவிலும் இவர் ஒரு லெப்டினற் கேர்ணல் பதவி நிலையில் 1991 இல் தனது முதிர்வு பெறாத ஓய்வுறுத்தற் காலம் வரை பணிபுரிந்தார். திரு ராஜபக்ஷ அவர்களின் முன்னுதாரணம்மிக்க இராணுவ சேவைக் காலத்தில், அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் தரைப்படை வீரருக்கான உயர்நிலைப் பாடநெறி மற்றும் இந்தியாவின் வெலிங்டனிலுள்ள பாதுகாப்பு சேவைகள் ஆளணியினர் கல்லூரி உள்ளடங்கலாக மிக முக்கியம் மிக்க பயிற்சி நெறிகளைத் தொடர்ந்தார்.

திரு ராஜபக்ஷ அவர்கள் வடமராட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்ட ஒரு இராணுவ வீரராவர். இவர் இந்த நடவடிக்கைகளின் போது கஜபா ரெஜின்மென்ற் முதலாவது படைப்பிரிவிற்குக் கட்டளையிடும் அதிகாரியாகத் தொழிற்பட்டார்.

இவர் 1990 இல் “முப்படைப் பலம் மற்றும் ஜயசக்தி இராணுவ நடவடிக்கைகளின் போது வெற்றிகரமாகத் தனது அதே படைப்பிரிவிற்கு கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டார். மேலும் இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பயிற்சி நிலையத்தின் பிரதிக் கட்டளையதிகாரி எனும் பதவி வகித்ததுடன், இவரது தன்னிகரற்ற சேவையைப் பாராட்டி இவருக்கு “ரண விக்கிரம” மற்றும் “ரணசூர” பதக்கங்கள் அணிவிக்கப்பட்டார்.



### திரு. எச்.எம்.சீ.நிமல்சிறி

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர். (பதவிவழி உறுப்பினர்)

திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி அவர்கள் 2002 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து அதனது பணிப்பாளர் நாயகமாகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் 1987 இல் இருந்து சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தில் செயற்பாட்டுகள் பகுதியின் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளதுடன், இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் பலம்மிக்க ஒரு உத்தியோத்தராகச் செயலாற்றி வருகின்றார். திரு.நிமல்சிறி அவர்கள் சிவில் விமானப் போக்குவரத்தின் புதிய சட்டக் கோட்பாட்டு வரைபினைத் தயாரிக்க முன்னோடியாகச் செயற்பட்ட உத்தியோத்தர்களில் ஒருவராவார். இவர் சிவில் விமானப் போக்குவரத்துச் சட்ட வரைபின் அறிமுகத்திற்கும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தோற்றத்திற்கும் வழிசமைத்த முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்தினார்.

இவர் வான் போக்குவரத்து, வான் போக்குவரத்துப் பாதுகாப்பு, வான்செலவு சேவைகள், பாதுகாப்புச் சோதனை, மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் சம்மந்தமான பலதரப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்துச்

சம்மந்தமான பரந்தளவான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் தற்போதைய இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் என்பனவற்றைப் பிரதிநிதித்துவம் செய்து வெளிநாடுகளுடன் இருதரப்பு வான் சேவைகள் கலந்துரையாடல்களில் பங்குகொண்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்துத் தொடர்பான வேறுபட்ட பிராந்திய மற்றும் சர்வதேச மாநாடுகளில் பங்குகொண்டுள்ளார். 2007 இல் இவர் இலங்கை அரசாங்கம் இவருக்கு வழங்கிய விடுமுறையொன்றின் கீழ், மூன்று வருடங்கள் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் கீழ் அமுலாக்கப்பட்டு வரும் COSCAP-SA இன் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளராக ICAO இல் இரண்டாந் தர நியமனத்தினைப் பெற்றிருந்தார்.

திரு.நிமல்சிறி அவர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமாணி (B.SC) பெற்றிருந்தார் என்பதுடன், அதே பல்கலைக்கழகத்தில் கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி (M.SC) பட்டத்தினையும் பெற்றிருந்தார். மேலும் இவர் ரஷ்யா அல்லிறோவிஸ்க் இல் தகைமைமிக்க கற்கை நெறியொன்றைத் தொடர்ந்த பின்னர், பறப்பு செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரமொன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். மேலும் திரு.நிமல்சிறி அவர்கள் விமானப் போக்குவரத்தினை ஒரு பாடவிதானமாகக் கொண்ட போக்குவரத்து மற்றும் உதவிப் போக்குவரத்து முகாமைத்துவத்தினை விஞ்ஞானமாணி விஷேட பாடமாகக் கொண்ட மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஒரு வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

திரு.நிமல்சிறி அவர்கள் ஏசியா மற்றும் பசுபிக் வலயத்திலுள்ள நாடுகளின் வான் செலவு விடயங்களின் திட்டமிடல் மற்றும் அமுலாக்கலுக்கென ICAO இனால் ஒழுங்குபடுத்தப்படும் ஏசியா மற்றும் பசுபிக் வான் செலவு திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு (APANPIRG) இன் இரண்டாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## திரு. டப்ள்யூ. ஐ.திசேரா

நிதியமைச்சின் பிரதிநிதி
(பதவிவழி உறுப்பினர்)

திரு. ஐவன் திசேரா அவர்கள் 1982 இல் ஒரு அரச கணக்காளராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். இவர் 1982 முதல் 1993 வரையான காலப்பகுதியில் பதுளை மாவட்ட செயலகத்தில் ஒரு கணக்காளராகப் பணிபுரிந்தார். பின்னர் 1993 இல் பிரதிப்பணிப்பாளராகத் தரமுயர்வு பெற்ற இவர், தேசிய கணக்குகள் மற்றும் பொதுத் திறைசேரி திணைக்களத்தில் இணைக்கப்பட்டார். தேசிய கணக்குகள் திணைக்களத்தில் இவர் பணியாற்றிய போது, காசு முகாமைத்துவம் மற்றும் வருமானம் போன்ற வேறுபட்ட துறைகளில் பணிபுரியும் சந்தர்ப்பத்தினைக் கொண்டிருந்தார். தேசிய கணக்குகள் திணைக்களத்தில் இவர் பணியாற்றிய காலங்களில் குழுவின் தலைவராக இருந்து அரச நிலையான சொத்து முகாமைத்துவம் மீதான புதிய கைநூல் ஒன்றையும், இலங்கை இராணுவத்தின் நிதி முகாமை மீதான முழுமையான அறிக்கையொன்றினையும் சமர்ப்பித்திருந்தார். 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திரு திசேரா அவர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நிதி முகாமைத்துவப் பிரிவின் தலைவராகவும், ஒரு சிரேஷ்ட ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்.

இவர், 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உயர் கல்வி அமைச்சில் பட்டப்படிப்புகள் கற்கையின் முன்னேற்ற மற்றும் தர விருத்தியில் (IRQUE) கேள்விப்பத்திர நிபுணர் பதவியினைப் பெற்றுக் கொண்டார். 2004 ஆம் ஆண்டு ஒக்டோபரில் தேசிய கேள்விப்பத்திர முகவர் (NPA) உருவாக்கப்பட்ட போது திரு திசேரா அவர்கள் அம் முகவர் ஸ்தாபனத்தின் கொள்ளளவு, கட்டுமானம், ஆராச்சி, மற்றும் அபிவிருத்திப் பணிப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு திசேரா அவர்கள் அரச கேள்விப்பத்திரத் துறையில் உள்நாட்டு நிபுணர்களை விருத்தி செய்வதற்கு "அரச கேள்விப்பத்திர முறை மற்றும் ஒப்பந்த நிர்வாகம்" என்ற தலைப்பில் ஒரு புதிய டிப்ளோமா நிகழ்ச்சியொன்றை அறிமுகஞ் செய்ததுடன், ஆயிரக்கணக்கான அரசதுறை ஊழியர்களைப் பயிற்றுவித்தார். தேசிய கேள்விப்பத்திர முறைமை நிறைவடைந்தவுடன், இச் செயற்பாடுகள் அரச நிதித் திணைக்களத்திற்கு மீண்டும் மாற்றப்பட்டதுடன், திரு திசேரா அவர்கள் கேள்விப் பத்திர முகாமைத்துவத்திற்கு அதற்குப் பொறுப்பான மேலதிக பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து நிதித் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு உதவிகள் மற்றும் பாதீட்டு மேற்பார்வைத் திணைக்களத்தில் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு திசேரா அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பொருளியல் பட்டதாரியாக இருப்பதுடன், அவர் அவுஸ்ரேலியா லொவோங்கோங் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் வர்த்தகம் எனும் முதுமாணிப் பட்டமொன்றையும் பெற்றுள்ளார். இவர் பொது நிதி மற்றும் அபிவிருத்தி நிதியியல் நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினமாவார்.

தற்போது இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கைத் தர நிர்ணய நிறுவனம் மற்றும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை என்பனவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகப் பணியாற்றுகின்றார்.



## திரு. கே.வி.என். ஜெயவர்த்தனா

திரு. கே.வி. என். ஜெயவர்த்தனா அவர்கள் 1983 இல் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தன்னை ஒரு வழக்கறிஞராக ஈடுபடுத்திக் கொண்டார் என்பதுடன், 1990-1991 கல்வியாண்டில் வான் மற்றும் ஆகாயம் எனும் துறையில் விஷேடத்துவம் கொண்ட பயிற்சி நெறியின் வெற்றிகரமான முடிவில் இலண்டன் பல்கலைக்கழக் கல்லூரியால் இவருக்குப் பொதுச் சட்டத்துறையில் முதுமாணிப்பட்டம் வழங்கப்பட்டது. திரு. ஜெயவர்த்தனா அவர்கள் 1998 ஆம் ஆண்டு முதல் 2005 மே வரையான காலப்பகுதியில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வான் சட்ட மேற்பார்வை உத்தியோகத்தராகப் பணிபுரிந்து விமானப் போக்குவரத்துச் சட்டம் சம்மந்தமாக பரந்த அறிவினைக் கொண்டுள்ளார். மேலும் திரு. ஜெயவர்த்தனா அவர்கள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டவாக்க வரைபு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து சட்டவாக்க வரைபு என்பவற்றைத் தயாரிப்பதில் மிக ஈடுபாடு காட்டியது மட்டுமன்றி சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களத்தில் ஒரு சட்ட ஆலோசகராகத் தொழிற்பட்டார். மேலும் இவர் இலங்கை சார்பாக பல எண்ணிக்கையான இருநாட்டு விமான சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டுள்ளதுடன், இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து இப் பேச்சுகளில் கலந்து கொள்வோருக்கும் சட்ட ஆலோசகராகச் செயற்பட்டுள்ளார்.

மேலும், 1996 இல் இருந்து பொதுவுடமை நிறுவனங்களின் மீளமைப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் குழுவில் ஒருவராகச் செயற்பட்டுள்ளார். திரு. ஜெயவர்த்தனா அவர்கள் 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தலினை விளைவாகக் கொண்ட கம்பனிச் சட்ட மறுசீரமைப்புச் செய்முறையில் 1993 மேயிலிருந்து பங்குகொண்டு வந்துள்ளார். சட்டவாக்கச் செய்முறையில் இவரது குறிப்பிடக் கூடியதான பங்களிப்பினை அடையாளப்படுத்தும் வகையில், இவர் 1998 ஆகஸ்ட் மாதம் கம்பனிச் சட்ட ஆலோசகர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இப் பதவி நிலையில் இவர் இதுவரையிலும் சேவையாற்றி வருகின்றார். இவர் கொழும்பு ஹில்டன் கொட்டேல் கம்பனிக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கொட்டேல் டெவலப்பர்ஸ் (லங்கா) கம்பனியில் இயக்குனர்களில் ஒருவராகப் பணியாற்றி வருவதுடன், வரையறுக்கப்பட்ட இலங்கை சதோஷ நிறுவனத்தின் ஆரம்பகாலத் தலைவராகவும் மற்றும் அந் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருந்ததுடன், வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) நிறுவனத்தில் ஒரு பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.



## திரு. ஷஹி அலிப்

திரு. ஷஹி அலிப் அவர்கள் தம்பதெனிய அபிவிருத்தி நிதியத் தலைவராகவும், ஸ்ராஷன் குழுமத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை முகாமையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

## திரு. தினேஷ் காலஹே



திரு. தினேஷ் காலஹே அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை காலி மஹிந்த கல்லூரியில் கற்றிருந்தார். பின்னர் அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து மின்னியல் மற்றும் தொலைதொடர்பு எந்திரவியலில் ஒரு பட்டத்தினைப் B.Sc (Hons) பெற்றுக்கொண்டார். மேலும் இவர் இலங்கை பொறியியல் நிறுவனத்தால் (IESL) பட்டயம் பெற்ற பொறியியலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் றுகுணு பல்கலைக்கழகத்தில் வியாபார முதுமாணிப் பட்டமொன்றினை நிறைவுசெய்துள்ளார்.

திரு. தினேஷ் காலஹே அவர்கள் 1999 இல் நவீன தொழிநுட்பத்திற்கான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தில் ஒரு ஆய்வு பொறியியலாளராகத் தனது தொழில்சார் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். பின்னர் ஒரு விஞ்ஞான வைத்திய சேவைப் பொறியியலாளராக வரையறுக்கப்பட்ட ஜெனரல் சேலஸ் கம்பனியில் இணைந்துகொண்டார். இவர் வரையறுக்கப்பட்ட சணடெல் நிறுவனத்தில் ஒரு பொறியியலாளராகத் தொழில் புரியும் போது தரத் தொலைத்தொடர்பில் தனது ஆரம்பப் பயிற்சி நெறிகளையும், வேலை அனுபவங்களையும் பெற்றுக்கொண்டார்.

இவர் 2001 இல் வரையறுக்கப்பட்ட சண்டெல் நிறுவனத்திலிருந்து விலகி, ஒரு பிரதேச முகாமையாளராக சிறிலங்கா டெலிக்கொம்மில் இணைந்து கொண்டதுடன், தொடர்ந்து அவர் அங்கு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு முகாமையாளராக நியமிக்கப்பட்டார். திரு. தினேஷ் காலஹே அவர்கள் 2008 இல் பிரதிப் பொது முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றதுடன், தற்போது தென் மாகாணப் பிரதிப் பொது முகாமையாளராகச் சேவையாற்றி வருகின்றார். இவர் றுகுணு பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தின் ஒரு வெளிவாரி அங்கத்தவராக இருக்கின்றார். மேலும் இவர் இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (IESL) இணை அங்கத்தவராகவும் திகழ்கின்றார்.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடமையும்



## அதிகாரசபையின் பொறுப்பு

அதிகாரசபையின் பிரதான பொறுப்புகள், ஆனால் அவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதாக அன்றி, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

» சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் திட்டமிடல்கள் மூலம் அமைச்சர் மற்றும் அரச துறையின் பங்காளர்களின் கருத்துக்கள் சித்தரித்துக் காட்டப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல்.

» சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடிய தகைமைகள் மற்றும் தேர்ச்சி கொண்டோரைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களது சம்பளம் உள்ளிட்ட சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.

» சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நோக்கங்களை அடைவதற்காக ஒழுங்கமைப்பு செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.

» உரிய நோக்கினை நிறைவேற்றுவதற்காக சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துஅதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்குப் பொறுப்புக்களை ஒப்படைத்தல்.

» திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் முன்னேற்றங்கள் தொடர்பாக அமைச்சருக்குப் பொறுப்புக்கூறல்.

» உள்ளக நிர்வாக முறைகள் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

## நிறுவனக் கட்டமைப்பு

அதிகாரசபையானது கொள்கை சம்மந்தமான விடயங்களைக் கையாள்வதற்கென பரந்த அறிவொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், வியாபாரம், சட்டம், மற்றும் விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் போன்றனவற்றில் பரந்தளவான திறன்கள் மற்றும் அனுபவங்களுடைய அங்கத்தவர்களை தன்னகத்தே கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் நியமனம் பெறுமிடத்து, அனைத்து அங்கத்தவர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு தங்களது முழுமையான பங்களிப்புடன், செயற்பட வேண்டுமெனவும், அதனது தீர்மானங்கள் அவர்களது ஒருமித்த தன்மையால் பெறப்பட வேண்டுமெனவும், அதிகாரசபைக்கு அப்பால் அங்கத்தவர்களுக்கு எந்தவாறானதொரு ஆழுமையும் இருத்தலாகாது எனவும் வேண்டப்படுகின்றது.

2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிகளின் பிரகாரம், அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமே சட்டத்தால் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்து செயற்படுவார். அமைச்சரவை அமைச்சர்களால் தீர்மானிக்கப்பட்ட ஊழியர் விதிகள், நிபந்தனைகளுக்குப் பொறுப்புள்ளவராக இருப்பதுடன், அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருப்பதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம் அல்லது ஏனைய எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அல்லது அவற்றால் அவருக்கு வழங்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பார்.

அதிகாரசபையானது கொள்கைகளை வகுத்துக் கொள்வதனூடாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இலக்குகளை அடைவதற்கென அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை வழிப்படுத்துகின்றது.

## அதிகாரசபைக் கூட்டங்கள்

அதிகாரசபையானது சம்பந்தப்பட்ட விடயங்களின் மீது

தீவிர கவனம் செலுத்தும் நோக்கில் ஊழியர் குழு, நிதிக் குழு, திட்டமிடற் குழு, கணக்காய்வுக் குழு, மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு என ஐந்து குழுக்களை ஸ்தாபித்துள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் அதிகாரசபையின் இலக்குகளை அடைவதனை நோக்காகக் கொண்டு, நிறுவனத்தின் செய்முறை உருவாக்கத்திற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## ஊழியர் குழு

ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

1. நிர்வாகக் கட்டமைப்பொன்றினை அல்லது தேவையேற்படின் அதில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பொன்றினை அங்கீகரித்தல்.
2. ஊழியர்களது பணிநிலைப்பிரிவு மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைத் தீர்மானித்தல்.
3. தெரிவு செய்தல், ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல், ஓய்வுறுத்துதல், மற்றும் சேவை முடிவுறுத்துதல் போன்றன தொடர்பான விடயங்களைக் கையாளல்.
4. ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வருடாந்த வேலைத் திட்டத்தினை மேற்பார்வை செய்தல்.
6. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிர்வாக சட்ட திட்டங்கள் மற்றும் செய்முறைகளை அபிவிருத்தி செய்தல்.
7. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான ஒழுக்காற்றுச் செய்முறைகளை மேற்கொள்ளல்.
8. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலகச் செய்முறைகளை மேம்படுத்துதல்.
9. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல்.
10. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தல்களுக்கான நஷ்டஈட்டுத் திட்டத்தை விருத்தி செய்தல்.
11. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. ஜெனரல் ரொஹான் டி. சில்வா தளுவத்த, தலைவர்.
2. திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
3. திரு.கே.ஜே.வி.என். ஜெயவர்த்தனா, உறுப்பினர்.

## நிதிக் குழு

நிதிக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

1. வருடாந்த பாதீட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.
2. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிதிச் சட்டதிட்டங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல்.
3. உபகரணங்களின் கொள்வனவு, வசதிகள், மற்றும் சேவைகளின் கொள்வனவுகளை மேற்பார்வை செய்தல்.
4. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான வருமான வழிவகைகளை மேற்பார்வை செய்தல்.
5. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் சிக்கன முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல்.

நிதிக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. ஜெனரல் ரொஹான் டி. சில்வா தளுவத்த, தலைவர்.
2. திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
3. திரு.டப்ள்யூ. ஐ.திசேரா, நிதியமைச்சின் பிரதிநிதி.

## திட்டமிடற் குழு

திட்டமிடற் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

1. தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையை வகுத்தல்
2. தேசிய சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டமொன்றினை வகுத்தல்
3. சிவில் விமானப் போக்குவரத்து சம்பந்தமான அடிப்படை மற்றும் இரண்டாந்தரச் சட்டங்களை மேற்பார்வை செய்வதுடன், தேவையேற்படின் திருத்தங்களை மேற்கொள்ளல்.
4. தேசிய சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டங்களை அமுலாக்கம் செய்தல்.

5. தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் செயற்றிட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்தல்.
6. சிவில் மற்றும் இராணுவ கூட்டிணைவினை மேற்பார்வை செய்தல்.
7. வான் சேவைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
8. வானியல் சேவை வழங்குனர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

திட்டமிடற் குழுவானது அதிகாரசபையின் அனைத்து எட்டு உறுப்பினர்களையும் உள்ளடக்கியுள்ளது.

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

1. உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.
2. நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிட்டு மேற்பார்வை செய்தல்.
3. சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.
4. வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதுடன், கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.
5. நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.
6. கணக்கியல் நியமங்கள் பின்பற்றப் படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்விற்குட்படுத்தல்.
7. பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்கள் போன்றனவற்றை மீளாய்வு செய்தல்.
8. அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிப்படுத்தல்களின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்
9. ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புகள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
10. சேவைக்கேற்ப அதிகாரசபையால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திரு.டப்ள்யூ. ஐ.திசேரா, தலைவர் (நிதியமைச்சின் பிரதிநிதி).
2. திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர, உபதலைவர்.
3. திரு.டினேஷ் ஹாலஹே, உறுப்பினர்
4. திரு.றொஹான் செனிவரத்ன, பாதுகாப்புச் செயலாளரின் பிரதிநித
5. திரு. கே.வீ.என்.ஜெயவர்த்ன
6. திரு.எஸ்.எம். சந்திரபாலா, விமானப் போக்குவரத்து, அமைச்சின் பிரதிநிதி

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் ஊழியர்களை தன்னகத்தே கொண்டதாக, சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு விஷேட செயற்திட்டங்களில் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் அமுலாக்கத்திற்கென ஆகஸ்ட் 2010 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இக் குழுவானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான உத்தியோகத்தரின் தலைமையிலும் சிரேஷ்ட பணிப்பாளரின் வழிகாட்டலிலும் தொழிற்படுகின்றது.

1. திரு. தேவ் கௌசல சமரவீர, உபதலைவர்.
2. திரு. ஜிம்ஹான் தபரேரா, செயலாளர்.
3. திருமதி மஞ்சுளா விக்கிரமநாயக்க, பொருளாளர்.

## உறுப்பினர்கள்

4. திருமதி துலாஞ்சலி மாப்பிற்றியஹே
5. திருமதி சீ.எஸ்.கொடித்துவக்கு
6. திரு. நிலந்த தென்னக்கோன்
7. திரு. ரீ.எம்.வை.பீ.தென்னக்கோன்
8. திருமதி. ஜீ.ஈ.மில்லவிதானாராச்சி
9. திரு. எம்.ஐ.கே.குணவர்த்தன
10. திரு. எஸ்.பி.பீ.வத்தேவவ
11. திரு. ஆர்.எல்.தலாஹல்ல

## நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு

குறிப்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்தின் கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு முன்னிலைப்படுத்துவதற்கு நிறுவனத்தில் அக்கறை கொண்டோர் தொடர்பில் கொண்டுள்ள அதனது பதில் கூறும் பொறுப்பினை அதிகாரசபையானது தெரிந்துகொள்கின்றது.

## அதிகாரசபையினதும் சிரேஷ்ட உறுப்பினர்களதும் பொறுப்பு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளின் பிரதானமாக இருப்பது யாதெனில், நிறைவேற்று உத்தியோகத்தரை பிரதானியாகக் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும், அதிகாரசபையினதும் பங்கு வகித்தல் தொடர்பிலுள்ள தெழிவானதொரு வரையறையாகும்.

அதிகாரசபையானது, உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை வகுத்தல் மற்றும் இலக்குகள் அடையப்படுதலை நோக்காகக் கொண்டதான செய்முறை மேற்பார்வையில் கரிசனை கொண்டிருக்கின்றது. சிரேஷ்ட முகாமைத்துவமானது, அதிகாரசபையால் வகுக்கப்பட்ட உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் அமுலாக்கலைக் கருத்திற் கொண்டுள்ளது.

வான் செலவுச் சட்டத்தில் அல்லது வேறு ஏதாவது சட்டத்தால் அல்லது அதன் அடிப்படையில் வகுக்கப்பட்ட ஒழுங்கு முறையின் படி சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பிட்ட ஒழுங்கு விதிமுறைக் கடப்பாட்டுக்கான பொறுப்புப் கூறலை அதிகாரசபையானது கொண்டிருக்காது என்பதுடன், அதிகாரசபை அதிலிருந்து விலகியதாகக் காணப்படுகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கான அதிகாரப் பரவலாக்கல் மற்றும் தொழிற்பாடுகளை உறுதிசெய்து, அவரது பங்கு வகித்தலை அதிகாரசபையானது விரிவாகத் தெழிவுபடுத்தியுள்ளது.

## பொறுப்புடமை

அதிகாரசபையின் தந்திரோபாய இலக்குகளை இலக்காகக் கொண்ட தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும் நோக்குடன், அதன் மூன்றாண்டு வியாபாரத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளவாறு அதனது கொள்கைகள், தந்திரோபாய வழிகாட்டல்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றிற்கிணங்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகள் முகாமைப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதி செய்யும் நோக்குடன் அதிகாரசபையும் அதனது உப குழுக்களும் தொடர் கூட்டங்களை நடாத்திவருகின்றன.

## ஆர்வ ரீதியான முரண்பாடுகள்

அதிகாரசபையானது ஆர்வலர் பதிவேடொன்றினைப் பராமரித்து வருவதுடன், அதிகாரசபையின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் வெளிப்படுத்துவதற்குரிய அவர்களது கடமை பற்றி அறிந்துகொண்டுள்ளனர் என்பதனை உறுதிசெய்து கொள்கின்றது. மேலும் இந்த அணுகுமுறையானது ஊழியர்களுக்காக ஆர்வலர் பதிவேட்டின் முரண்பாடொன்றைப் பராமரிப்பதனை வெளிப்படுத்துகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

பெருமளவிலான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள போதிலும், நிறுவனக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மிக்க முறைமையொன்றினைப் பராமரிப்பதற்கான பொறுப்பு அதிகாரசபையையே சாரும்.

அதிகாரசபையினது முக்கியத்துவம் மிக்க இலக்குகள் அடையப்படுகின்றன என்பதனை உறுதிசெய்து கொள்வதற்கு உருவாக்கிக் கொள்ளப்படும் கொள்கைகள், முறைமைகள், மற்றும் செய்முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளகக் கட்டப்பாடு காணப்படுகின்றது. அதிகாரசபை மற்றும் சிரேஷ்ட முகாமை என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டவாறு பொறுப்புடமைக் கூற்றில் கையொப்பமிடுவதன் மூலம் தனது பொறுப்புடமையினைத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை கண்காணிப்பதற்கான பொறுப்புடமை கொண்டதாக உள்ளகக் கணக்காய்வுப் பகுதியை அதிகாரசபை கொண்டுள்ளது. இவ் அலகானது சீ.ஏ.ஏ.எஸ். எல் ஆல் வழங்கப்படும் அனைத்து சேவைகளின் தரத்தினை கருத்திற் கொள்வதுடன், அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களின் சநடயைிடைவைல யும் கருத்திற் கொள்கின்றது.

உள்ளகக் கணக்காய்வானது சிரேஷ்ட முகாமையின் அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாகச் செயற்படுவதுடன், அதன் கண்டுபிடிப்புகள் உடன்பட்ட வழிமுறைகளினூடாக நேரடியாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடப்படுகின்றது.

## சட்டக் கடப்பாடு

நிறுவனம் அனைத்துச் சட்டப் பிரமாணங்களையும் பின்பற்றுகின்றது என்பதனை உறுதி செய்வதற்கான அதன் பொறுப்புடமையினை அதிகாரசபை வெளிப்படுத்துகின்றது. அதிகாரசபையானது உடன்பாட்டு விடயங்களை முறை ரீதியாக அடையாளங்கண்டு கொள்ள நிகழ்ச்சித்திட்டச் செய்முறையொன்றின் மேம்பாடு மற்றும் செயற்படுத்துகை போன்றனவற்றிற்காக, சிரேஷ்ட முகாமைக்குப் பொறுப்புடமையினைப் பகிர்ந்தளித்துள்ளதுடன், அனைத்து ஊழியர்களும் அவர்களுடன் குறிப்பாகத் தொடர்புடைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிவினைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்கின்றது.

தனித்தனி விடயங்களாக அதிகாரசபையால் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அரசாங்க நிறுவனங்களால் விடப்படும் பொதுவான மற்றும் விஷேடமான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் எவ்வளவிற்கு அதிகாரசபையால் அமுலாக்கப்பட வேண்டும் என்பதனை அதிகாரசபையே தீர்மானிக்குமென அதிகாரசபை இணங்கியுள்ளது. எனவே அரசாங்கத்தினால் விடுக்கப்படும் எவ்வாறானதொரு சுற்றறிக்கைகளையும் அதிகாரசபை அவ் வழிகாட்டலின் உள்ளடக்கத்தினைப் பரிசீலனை செய்து, அவ் வழிகாட்டலின் பிரயோகத்தன்மையின் எல்லை மற்றும் அளவுகளைத் தீர்மானித்தாலன்றி, அவை தன்னிச்சையாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையின் அமுலாக்கலுக்கு உள்ளடங்கமாட்டாது.

## ஒழுக்க விழுமியங்கள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில், அதிகாரசபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆழுகைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழியர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதனை ஒரு ஒழுங்குமுறையில் கண்காணித்து வருகின்றது. ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக் கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது அறிகுறிகள் போன்றனவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்ட வருகின்றது.

சிறந்த கூட்டிணைவான பிரஜைகள் அதிகாரசபையில் ஈடுபாடுகொண்டுள்ளனர், அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்துப் பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள், மற்றும் பொறுப்புகள் போன்றனவற்றுடன் இயைவாக்கமடைந்த மனநிலையொன்றுடன் செயற்படும் வகையிலான அர்ப்பணிப்பொன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகாரசபை முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கும் அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன் கூடிய அதன் ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உள்ளாக்கியாக இருத்தல்.

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்குவிதிகள், இடர் அற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, மற்றும் சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பனவற்றினூடாக வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

“அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்”

## தத்துவம்

“இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்”

## இலக்குகள்

- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு விளைவு நோக்கங்கள் அடையப்படல் அல்லது மிகைப்படுத்தப்படல்
- பொருத்தமான விதத்தில் வளமாக்கப்படல்
- தொழில் வல்லுனராக மற்றும் தகுதி வாய்ந்தவராக இருத்தல்
- பரந்தளவான நம்பிக்கை மற்றும் அங்கீகாரத்தைப் பெறல்
- அதன் அடைவ மட்டங்களை நிலைநிறுத்திக் கொள்ளல்
- சிவில் விமானப் போக்குவரத்தின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டின் பலம்மிக்க ஒரு அனுசரணையாளராக இருத்தல்

## தந்திரோபாயங்கள்

- நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்துதல் அத்துடன் சமூக கடப்பாடுகளை நிறைவு செய்தல்
- மிக முக்கியமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்குதல்
- குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டுதல்களை அறிமுகப்படுத்துதல்
- விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றலுடனும் தொழில் புரிதல்
- ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும், உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்தவர்களுடன் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்
- அனைத்து ஆவணங்கள், மூலங்கள், மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதி மிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்

## மதிப்பீடுகள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் அதன் ஊழியர்கள்

- விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னிரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாச்சாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை வாடிக்கையாளருக்குச் சேவை வழங்கலை துரிதப்படுத்துதல்
- முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் “முடியும்” என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்
- நம்பகத் தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்
- தொடர்ச்சியான முன்னேற்றப்பணியில் விருப்பங்கொண்டோராகவும், மாற்றத்திற்கு உட்படக்

கூடியவராகவும் இருத்தல்

- வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்
- திறந்த, நேர்மையுள்ள, வெளிப்படைத் தன்மையுள்ளோராக இருத்தல்
- செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்
- குழுவாக வேலைசெய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்
- ஒவ்வொருவரின் பங்களிப்பிற்கும் வெகுமதி சேர்த்தல்
- சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பனவற்றை அடையாளங்காணல்
- செய்பவற்றிலிருந்து மகிழ்வடைதல்
- தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்
- தொழில் மற்றும் வீட்டுச் சூழல்களுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல்
- சிவில் விமானப் போக்குவரத்து நிர்வாகக் கட்டமைப்பு

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முதன்மை இலக்குகள்

- வர்த்தக விமானப் போக்குவரத்துத் துறையில் இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
- சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரணான தலையீடுகளைத் தவிர்த்தல்
- பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படலைத் தவிர்த்தல்
- விமான நிலையங்களில் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
- பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களில் விபத்துக்களைக் குறைத்தல்
- பறத்தல் நேரங்களில் வர்த்தகப் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:1000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
- பறத்தல் நேரங்களில் பொது விமானப் போக்குவரத்து பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:5000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
- பறத்தல் பயிற்சிப் பாடசாலைகளில் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:10,000 எனக் குறைத்தல்
- தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:20,000 பறப்பு மணித்தியாலங்களாகக் குறைத்தல்
- தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பொது விமானப் போக்குவரத்து பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:10,000 பறப்புகளாகக் குறைத்தல்
- வான் கட்டுப்பாட்டு சேவைகள் உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:50,000 பறப்பாகக் குறைத்தல்
- குறிக்கப்பட்ட நேரத்தில் விமானம் புறப்படுதலில் ஏற்படக்கூடிய தாமதத்தைக் குறைத்தல்
- சராசரி நிலையுடைய மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்
- வான்வழிப் பயணத்தில் சேவைத்தரத்தினை அதிகரித்தல்
- பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, விமானத் தளத்தில் நெரிசலான, விரைவான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்
- விமானப் போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக் குறைத்து, வீண்விரயத்தினைத் தவிர்த்தல்
- சூழல் மீது விமானப் போக்குவரத்தின் மறைமுக/ எதிர்மறை விளைவுகளைக் குறைத்தல்

## விளைவுகள்

- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் நாட்டிற்காக சர்வதேச தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதுடன், சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அமுவாக்கல் மற்றும் செயலாக்கத்னை நிலைநிறுத்துதல்
- வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமையின் சர்வதேச அங்கீகாரம்
- சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்கு முறைமையொன்றினையும் மற்றும் வான் போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் உருவாக்கல்
- இலங்கைப் பிரஜைகளின் நல்வாழ்விற்காக இலங்கையின் வான்பரப்பை ஆகக் கூடியளவு பயன்படுத்துதல்
- நாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கல்
- காரணமற்ற போட்டித்தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்
- மக்களினதும் பொருட்களினதும் கிடைப்பனவு மற்றும் நகர்வுகளை மேம்படுத்துதல்
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் தங்கியுள்ள சேவைகள்
- சிவில் விமானப் போக்குவரத்து துறையில் கல்வி
- சிவில் வானியல் சார் அனைத்து விடயங்களையும் மேம்படுத்தல்
- வினைத்திறன் மிக்க நடைமுறை மற்றும் ஒழுங்கு முறைகளுக்கான சீரான சட்ட வரையறைகள்
- சூழலின் நிலையான தன்மை

## வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள் |
|---|---|
| கொள்கை ஆலோசனை | • அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கல்.<br>• சட்ட மறுசீரமைப்பு<br>• விதிகளின் உருவாக்கம்<br>• அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்<br>• விமானப் போக்குவரத்துக் கொள்கை உருவாக்கம்<br>• செய்முறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>• விமானப் போக்குவரத்து கட்டமைப்பின் மூலத் திட்டம் |
| பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சான்றுப்படுத்துகை | கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான இடர் முகாமைத்துவம்<br>• விமான நிலையம்/வான் துறையின் பாதுகாப்பு<br>• விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>• பொது விமான போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>• தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>• விமானப் பறப்புப் பயிற்சிப் பாதுகாப்பு<br>• வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு மற்றும்<br>• விமான போக்குவரத்து சேவைகள் துறையினரது பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| பாதுகாப்புப் ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | • பாதுகாப்பு விசாரணை<br>• பாதுகாப்புப் ஆய்வு<br>• பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>• வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை மற்றும்<br>• பாதுகாப்புப் பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| அதிகாரமளித்தல் | • விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>• விமானப் போக்குவரத்துக் கட்டணங்களை அங்கீகாரம்<br>• பயண முகவர்களை சான்றுப்படுத்தல்<br>• வானூர்திகளைப் பதிவு செய்தல்<br>• வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரம்<br>• உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>• பொது விற்பனை முகவர்களுக்கான அங்கீகாரம் அளித்தல்<br>• சர்வதேச செயற்பாடுகளுக்காக உள்நாட்டு சேவை வழங்குனர்களை ஒதுக்கீடு செய்தல் |
| பாதுகாப்பு மதிப்பீடு | • சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| நடைமுறைப்படுத்தல் | • ஒழுங்குமுறை மீறல்கள் மீதான பதில்கள்.<br>• பொது சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுல்படுத்தல் |
| அரசாங்கத்திற்கு உதவுதல் | • விமானப் சேவை நிறுவனங்களிடமிருந்து தாமத வரியினை அறவிடல் |

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## நியதிச் சட்டச் செயற்பரப்பு

சிவில் விமானப் போக்குவரத்தின் நியதிச் சட்ட செயற்பரப்பானது 2012 இன் இறுதிக் காலப்பகுதியில் பின்வருமாறு காணப்பட்டது.

| நியமிச் சட்டப் பரப்பெல்லை | 2012 | 2011 | அதிகரிப்பு % |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்நாட்டுத் தரை விமான நிலையங்கள் | 12 | 12 | - |
| உள்நாட்டு நீர் விமானத் தளங்கள் | 15 | 15 | - |
| சர்வதேச விமானத் தளங்கள் (RMA உடன்) | 02 | 02 | - |
| சர்வதேச விமான நிலையங்கள் (உருவாக்கப்படும்) | 01 | 01 | - |
| **விமான சேவைகள்** | | | |
| உள்நாட்டு விமான சேவைகள் | 08 | 08 | - |
| சர்வதேச விமான சேவைகள் | 30 | 28 | 7% |
| **பயிற்சியளித்தல் நிறுவனங்கள்** | | | |
| பறத்தற் பாடசாலைகள் | 06 | 06 | - |
| பொறியியல்/ பராமரிப்புப் பாடசாலைகள் | - | - | - |
| வான் போக்குவரத்து நெரிசலுடன் தொடர்புபட்டது | 01 | 01 | |
| **வானியல் சேவைகள் வழங்குனர்கள்** | | | |
| விமானத்தளங்கள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து நெரிசல் சேவைகள் | 01 | 01 | - |
| வானியல் சார் தளச் சேவைகள் | 01 | - | - |
| வானியல் சார் தொலைதொடர்புச் சேவைகள் | 01 | - | - |
| வான் போக்குவரத்து பாதுகாப்புத் சேவைகள் | 01 | - | - |
| தளப்பராமரிப்புச் சேவைகள் | 01 | - | - |
| உபசரணைச் சேவைகள் | 01 | - | - |
| வானூர்தி எரிபொருள் மீள்நிரப்பல் மற்றும் எண்ணெய் வினியோகம் | 01 | - | - |
| **வானூர்தி** | | | |
| அவ்ரா லைற் வானூர்தி | 2 | - | - |
| பாரமற்ற வானூர்தி | 8 | 8 | - |
| நடுத்தர வானூர்தி | 3 | 3 | - |
| பாரம் கூடிய வானூர்தி | 32 | 27 | 18.5% |

| | | | |
|---|---|---|---|
| ஹெலிகொப்ரர் | 7 | 6 | 16.67% |
| வெப்ப காற்று பலூன்கள் | 7 | 7 | - |
| **பறத்தற் பயிற்சி உபகரணங்கள்** | | | |
| உள்நாட்டு பறத்தல் மாதிரிகள் | 01 | - | - |
| வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட பறத்தல் மாதிரிகள் | 06 | 11 | -45.45% |
| **தனிநபர்கள்** | | | |
| மாணவ விமானி அனுமதிப்பத்திரதாரர் | 202 | 177 | 14.12% |
| தனிநபர் விமானி அனுமதிப்பத்திரதாரர் | 146 | 127 | 14.96% |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரதாரர் | 325 | 270 | 20.37% |
| வான் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரதாரர் | 319 | 371 | -14.01% |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அனுமதிப் பத்திரம் | 76 | 60 | 26.6% |
| வானூர்திப் பராமரிப்பு பொறியியலாளர் அனுமதிப்பத்திரதாரர் | 175 | 283 | -38.16% |
| வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரதாரர் | 397 | 265 | 49.81% |
| பறத்தற் செயற்பாட்டு அனுமதிப்பத்திரதாரர் | 175 | 175 | - |
| வானியல் நிலைய செயறபாட்டாளர் அனுமதிப்பத்திரதாரர் | 04 | 04 | - |
| விமான அறை உறுப்பினர் சான்றிதழ்தாரர் | 1134 | 1013 | 11.09% |
| பறத்தல் பயிற்சியளிப்போர் | 20 | 15 | 33.33% |
| உதவி பறத்தல் பயிற்சியளிப்போர் | 17 | 16 | 6.25% |
| தளப் பயிற்சியளிப்போர் | 22 | 22 | - |
| பறத்தற் பரீட்சகர் | 08 | 08 | - |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட சோதனையிடல் விமானிகள் | 32 | 27 | 18.51% |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட வானியல் மருத்துவ பரீட்சகர்கள் | 06 | 06 | - |
| சான்றுப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து பாதுகாப்பு திரைப்படுத்துநர்கள் | 470 | - | - |
| **வான் போக்குவரத்து சேவை வழங்குநர்கள்** | | | |
| உலகளாவிய வினியோக சேவை வழங்குநர்கள் | 4 | 4 | - |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர் அனுமதிப்பத்திரம் - வகை A | 425 | 356 | 19.38% |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர் அனுமதிப்பத்திரம் - வகை B | 25 | 49 | -48.97% |
| பொது விற்பனை முகவர்கள் | 32 | 28 | 14.28% |
| **உயர்ந்த நிர்மாணங்கள்** | | | |
| தொலைதொடர்புக் கோபுரங்கள் | 5871 | 5220 | 12.47% |

# வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்

## அதிகாரசபையும் அதன் குழுக்களும்

### பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம், சிவில் விமானப் போக்குவரத்து கௌரவ அமைச்சர் அவர்கள், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினை நியமித்தார். ஜெனரல் றொஹன் தளுவத்த மற்றும் திரு. J.M.S.W. ஜசுந்தர என்போர் முறையே தலைவர், உபதலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

## CAASL கூட்டங்கள்

மீளாய்வின் கீழான காலப்பகுதியில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை பன்னிரண்டு (12) கூட்டங்களை நடாத்தியிருந்ததுடன், அதிகாரசபை ஒழுங்குபடுத்தும் சிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலினதும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினதும் சிறந்த தொழிற்பாட்டின் பொருட்டு, நூற்று அறுபத்தொன்பது (169) தீர்மானங்கள் செயற்பாட்டிற்காக நிறைவேற்றப்பட்டன.

## சிரேஷ்ட முகாமைத்துவம்

இலங்கை விமானப் போக்குவரத்தின் நூற்றாண்டு விழா கடந்த ஆண்டு இலங்கை விமானப் போக்குவரத்தில் நூறு (100) ஆண்டுகளை நிறைவு செய்து வரலாற்று முக்கியத்துவம் மிக்க மைல்கல்லை எட்டியிருந்தது. 12 செப்டெம்பர் 1991 இல் கப்பல் மூலம் இலங்கைக்கு இரண்டு இருக்கைகளைக் கொண்ட "Bleriot Monoplane" எனும் முதலாவது வானூர்தி கொண்டுவரப்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. இவ் வானூர்தியானது முதன் முதலாக டிசம்பர் 1911 இல் சில தடவைகள் பறப்பிக்கப்பட்ட போதிலும் அதன் பின்னர், 07 டிசம்பர் 1912 இல் இரண்டு பிரஞ்சு தேசத்தவர்களால் வெற்றிகரமாக முதலாவது பறப்பு மேற்கொள்ளப்பட்டதனைப் பதிவுகள் காட்டுகின்றன. இலங்கையானது கடந்த நூற்றாண்டு பூராகவும் சிறந்த பாதுகாப்புப் பதிவொன்றுடன் கூடியதாக இன்றுவரை சிறந்ததான அளவீடுகளைக் காட்டும் படியான விமானப் போக்குவரத்து முறைமையினைக் கொண்டுள்ளது.

நூற்றாண்டு பழமை வாய்ந்த விமானப் போக்குவரத்தின் அடைவனவுகள் மற்றும் ஞாபகமூட்டல் நிகழ்வுகள் அனைத்து விமானப் போக்குவரத்து மற்றும் ஏனைய தொடர்புடைய அக்கறைகொண்டோரின் பங்குபற்றலுடன், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களினதும் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சினது வழிகாட்டலின் கீழும் முன்னெடுக்கப்பட்ட ஒரு செயற்றிறன் மிக்க செயற்றிட்டத்தின் மூலம் மீள் நினைவுபடுத்தப்பட்டு கொண்டாடப்பட்டது.

அன்பளிப்பு அடையாளமொன்றாக கப்டன் எல்மோ ஜெயவர்த்தனவால் எழுதப்பட்ட விமானப் போக்குவரத்து வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் மற்றும் திரும்பற் புள்ளிகளினூடான கண்ணோட்டத்தினைக் கொண்ட "A Centenary Sky" எனும் தலைப்பிடப்பட்ட புத்தகமொன்று வெளியிடலையும், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவுடன் கூடியதாக மெல்லிசை ஒன்றின் தயாரிப்பு, மற்றும் விமானப் போக்குவரத்தின் வரலாற்றினை வெளிப்படுத்துவதான காணொளி பதிவு ஒன்றின் உருவாக்கம் என்பனவற்றினையும் குறித்த வேலைத்திட்டமானது உள்ளடக்கியிருந்து. இதற்கு மேலாக, 2000 இற்கும் மேற்பட்ட பங்குபற்றுனர்களுடன் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் பொது மக்களுக்கிடையில் சித்திரப் போட்டி நிகழ்வொன்று நடாத்தப்பட்டது. பிரசித்தப்படுத்தல் வேலைத்திட்டத் தொடர் ஒன்றும் பதிப்பு, ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் மூலம் மும்மொழிகளிலும் நடாத்தப்பட்டது. கொண்டாட்டத்தினை கோடிட்டுக் காட்டும் முக்கிய நிகழ்வாக, 07 டிசம்பர் 2012 அன்று அலரி மாளிகையில் அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அதிதியாக பங்குபற்றி நிகழ்வை சிறப்பித்த வகையில் பிரதான நிகழ்வொன்று இடம்பெற்றது. சிவில் விமானப்போக்குவரத்து கௌரவ

அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர், அமைச்சு ஊழியர்கள், விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய ஊழியர்கள் மற்றும் அத்துறை மீது அக்கறையுடையோர் மற்றும் 1500 இற்கும் மேற்பட்ட ஏனைய விருந்தினர்கள் என இவ்விழாவில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குகொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர்.

நாட்டினுடைய எதிர்காலம் மற்றும் நாட்டினுடைய விமானப் போக்குவரத்தினை முன்னெடுத்துச் செல்லவிருக்கும் 800 பாடசாலை சிறார்களால் இந்நிகழ்வானது அலங்கரிக்கப்பட்டிருந்தது. காணொளிகளின் திரையிடல், பாடசாலைச் சிறார்களின் பேச்சுக்கள், நான்கு நினைவு அஞ்சல் முத்திரைகளின் வெளியிடல், மற்றும் அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் முக்கித்துவம் மிக்க பங்குபற்றல் என்பன நிகழ்விற்கு மெருகூட்டி, அலங்கரிப்பனவாக அமைந்திருந்தன. நிகழ்வை தடம்பதிக்கும் பொருட்டு, பத்திரிகைச் சிறப்பிதழ், கையேடு, மற்றும் குவான்ஷர சஞ்சிகையின் விஷேட பதிவு என்பன வெளியீடு செய்யப்பட்டன.

## வானூர்தி விபத்து விசாரணை அலகு

ஒரு முழுமையான வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் மிக முக்கிமான பல செயற்பாடுகளை விபத்து விசாரணை அலகானது முன்னெடுத்திருந்தது. இச் சென்முறையில் ஒன்றாக கௌரவ அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையின் வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை ஒழுங்கு விதி 2012 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இவ் ஒழுங்குவிதியானது 2010 இன் 14 ஆம் இலக்க புதிய சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியின் முதலாவது தொகுதி ஆகும்.


குறித்த அலகு வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணைப் பயிற்சி நெறியின் மீது சமமான முக்கியத்துவத்தை உணர்ந்தது. எனவே இது தொடர்பில் இத்துறையிலும் அதே போல் உயர் அலுவலக முறைமையிலும் நடைமுறை ரீதியான அனுபவத்தைக் கொண்ட திரு. கஷ் பிறோஸ்ரீல் மற்றும் திரு.கெயிற் மைக்குய ஆகிய இரண்டு சர்வதேச மதிப்புமிகு நிபுணத்துவம் மிக்கோரால் இரண்டு வார வானூர்தி விபத்து விசாரணை வேலைப்பட்டறையொன்று நடாத்தப்பட்டது. இது வானூர்தி விபத்து விசாரணைக்கு தொடர்புடைய நிறுவனக்காரணிகள் மற்றும் முகாமைத்துவ விடயங்களில் ஒரு விளக்கத்தினையும் மற்றும் விசாரணை தொடர்பான நுட்பங்களில் ஆழ்ந்த அறிவை CAASL இன் விசாரணையாளர்களுக்கு அளித்திருந்தது. மேலும் ICAO ஆல் 2010 இல் நடத்தப்பட்ட USOAP ஆய்வில் எழுப்பப்பட்ட கண்டுபிடிப்பிற்கான ஒரு சரி செய்தல் நடவடிக்கையாகவும் இந்த வேலைப்பட்டறையானது அமைந்திருந்தது. இவ் வேலைப்பட்டறையில் CAASL மற்றும் விமானப் போக்குவரத்து கைத்தொழில் ஊழியர்கள் மற்றும் COSCAP-SA அங்கத்துவ நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டோர்கள் எனப்பலரும் பங்கு கொண்டார்கள்.

வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணையுடன் தொடர்புடைய கூட்டிணைவு ஒப்பந்தம் பிரான்ஸ் BET (Bureau d' Enquetes et d'Analyses) க்கும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது. இதையொத்த ஒப்பந்தம் ஒன்று ஐக்கிய இராச்சிய வான் விபத்து விசாரணைக் கிளையுடன் இறுதி வடிவத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு முகவர்களுடன் விளக்கத்திற்கென ஏற்படுத்திக் கொண்ட ஏற்பாடுகளுக்கமைய, நீதிச்சேவை அமைச்சுக்கும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கும் இடையில் விசாரணைச் செயல்முறையில் பயனுறுதி மிக்க கூட்டிணைவின் பொருட்டு ஒப்பந்தமொன்றை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், விபத்து விசாரணையாளர்களதும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குமான அவசர வெளிநாட்டு பிரயாணத்துக்கான விரைவான விஸா செயன்முறைப்படுத்தலுக்கான செயன்முறை ஒன்றின் அமுலாக்கலின் சம்மந்தமான உரையாடல்கள் வெளி விவகார அமைச்சுடன் இடம்பெற்றன.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் எவ்வித விபத்துக்களோ அல்லது அபாயகரமான சம்பவங்களோ பதிவாகவில்லை. எனினும், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்திகள் தொடர்பில் வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புடைய 134 நிகழ்வுகள் பதிவாகியிருந்தன. 09 ஒக்டோபர் 2012 இல் குவைத்திற்கான பறப்பின் போது உயர் காற்று கொந்தளிப்பு காரணமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் இற்குச் சொந்தமான UL 229 இலக்கங் கொண்ட A330 ரக விமானத்தில் ஏற்பட்ட நிகழ்வு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

**2012 இல் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளில் ஏற்பட்ட விமானப் போக்குவரத்துச் சம்பவங்கள் (இலங்கைக்கு உள்ளே மற்றும் வெளியே)**




இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுக்கு ஏற்பட்ட விமானப் போக்குவரத்து சம்பவங்கள் (இலங்கையின் உள்ளும் வெளியிலும்)

சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| F-NR | - | நெருப்பு/ புகை (தாக்கமற்றது) |
| FUEL | - | எரிபொருள் சம்பந்தப்பட்டது |
| RAMP | - | தளக் கையாள்கை |
| SCF – PP | - | வலு இயந்திர பாதிப்பு/ பிழையான தொழிற்பாடு |
| SEC | - | பாதுகாப்பு சம்பந்தப்பட்டது |
| TURB | - | Turbulence encounter |
| LALT | - | குறைந்த நடத்தைச் செயற்பாடு |
| MAC | - | ARRPROX/ hear miss/ midair Collision |
| RE | - | ஓடுபாதை பயணம் |
| SCE-NP | - | முறைமை/உதிரிப்பணி பாதிப்பு/பிழையான தொழிற்பாடு |
| ADRM | - | விமானத்தளங்கள் |
| NOC | - | தொடர்பற்றது |
| CABRN | - | வானறைப் பாதுகாப்பு நிகழ்வுகள் |
| BIRD | - | பறவைத் தாக்கம் |
| OTHER | - | ஏனையவை |


## உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை முகாமையின் ஈடுபாட்டுடன், உள்ளகக் கணக்காய்வுப் பகுதியானது உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையினையும், வினைத்திறனையும் பரிசீலிப்பதற்குரிய படிமுறைகள் எடுத்துள்ளது. இது மேலும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உருவாக்கப்பட்ட கொள்கைகள் செயன்முறைகளுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை இது உறுதி செய்வதாக அமைந்தது. 07 தொழிநுட்ப கணக்காய்வுகள் மற்றும் 10 நிதிக்கணக்காய்வுகள் உள்ளடங்களாக 2012 ஆம் ஆண்டு 34 கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

## பகுதி வெளிப்படுத்தல்கள்

| பகுதிகள் | 2012இல் வழங்கப்பட்ட அறிக்கைகள் | கண்டுபிடிப்புக்கள் | முன்மொழிவுகள் |
|---|---|---|---|
| நிதி முகாமைத்துவம் | 03 | 37 | 2 |
| மனித வளம் மற்றும் அலுவலக முகாமைத்துவம் | 02 | 4 | 4 |
| தனி நபர் அனுமதிப்பத்திரம் | 01 | 4 | 1 |
| வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் | 01 | 3 | - |
| விமானத்தளம் மற்றும் வான் செலவு | 01 | 2 | 1 |
| மொத்தம் | 08 | 50 | 8 |

வரைவு 2 - மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை - 2004-2012




வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்

# வானியல் சேவைகள் பிரிவு


## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி

### ICAO உலகலாவிய பாதுகாப்புச் சோதனை (USAP) சுற்று 2 - ஆய்வு - இலங்கை

ICAO விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பில் SARPS இன் அமுக்கலாக்கல் மட்டத்தினை அளவிட்டுக் கொள்ளும் பொருட்டு, அங்கத்துவ நாடுகளில் வழமையான USAP சோதனையை நடத்துகின்றது. இலங்கைக்கான மிக அண்மிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனையானது மீளாவிற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் மே மாதம் 24 முதல் 31 வரையான காலத்தில் நடாத்தப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 145 நாடுகளின் உலக சராசரியான 67% இற்கு எதிராக இலங்கையானது 85% இற்கும் மேற்பட்டதாக அளவில் பாதுகாப்புடன் தொடர்புடைய SARPS ஐ பின்பற்றி, விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மேற்பார்வைச் செயற்பாடுகளில் கணிசமான அளவுடைய செயற்திறன் ஒன்றை வெளிக்காட்டுவதாக சோதனை முடிவுகள் காட்டுகிறது.

சோதனை முடிவுகளானது "இலங்கையின் வான்பரப்பானது ஆபத்தற்றது" எனும் செய்தியை இவ்வாண்டும் பயணிக்கும் பொதுமக்களுக்கு உறுதி செய்வதாக அமைகின்றது. சோதனைகளின் போது குறிப்பிடப்பட்ட பாதகமான விடயங்கள் மீதான சீராக்கச் செயன்முறைக்கான சீராக்கச் செயற்பாட்டுத் திட்டத்தினை இலங்கை ஏற்கனவே ICAO இற்கு கோவையிட்டுள்ளது என்பதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட சீராக்கச் செயற்பாட்டுத் திட்டங்கள் திருப்திகரத்தன்மையை காண்பிப்பதால் ICAO ஆல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இடர் விடயங்கள் தொடர்பில் ஆய்வு முடிவுகளின் வரைபட வெளிப்படுத்தல்



## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு நிபுணர்களின் நியமனம்

ஜனவரி மற்றும் பெப்ரவரியில் தேசிய மட்டத்தில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு மேற்பார்வை தொழிற்பாடுகள் தொழிநுட்ப நிபுணத்துவத்தினால் அதிக வேலைப்பாட்டினை அடையாளம் கண்டு, விமானப் போக்குவரத்து பாதுகாப்பு பகுதிக்கு விமான நிலைய பாதுகாப்பு, தீ மற்றும் தீயணைப்பு, விமானச் சேவை, சரக்கு மற்றும் உணவிடல் (உபசரணை) அதிக படியான அறிவு மற்றும் அனுபவம் உடைய இரண்டு விமானப் போக்குவரத்து பாதுகாப்பு ஆலோசகர்கள் உள்வாங்கப்பட்டனர். தற்போது குறித்த பகுதியானது நான்கு (4) தொழிநுட்ப உத்தியோகத்தர்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த அடைதலானது இலங்கை மீதான உலகளாவிய பாதுபாப்புச் சோதனை (USAP) சுற்று 2 இன் ICAO சோதனைக் குழுவினரால் பெரிதும் விரும்பப்பட்டது.

## முன்னெடுக்கப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனையிடல் திட்டம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) இலங்கைக்கு மற்றும் இலங்கையிலிருந்து தொழிற்பட்டு வரும் வெளிநாட்டு விமானப் சேவைக்கான வானூர்திப் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளின் அனுசரித்தல் மட்டத்தினை அளவீடு செய்வதற்கு யூன் மற்றும் யூலை மாதங்களில் மேலதிக (அசாதாரண) விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சேவையிடல் திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. இவ் அசாதாரண சோதனையிடல் திட்டம் முன்னெடுக்கப்படுகையில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு பரிசோதனையானது இருபத்தியொரு (21) வெளிநாட்டு விமான சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன், அவ் விமான சேவைகளால் தேவைப்பாடுகள் சரிவர நிறைவேற்றப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

## சர்வதேச அமர்வுகளில் நாட்டினது பிரதிநிதித்துவம்

சிவில் விமானப் போக்குவரத்துப் பணியாளர் நாயகம் (DGCA) மற்றும் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதியின் பிரதிப் பணிப்பாளர் என்போர் 11 - 12 ஜனவரியில் கோலாலம்பூர் - மலேசியாவில் இடம் பெற்ற பிராந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கு கொண்டனர். இதற்கு மேலதிகமாக விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரதிப் பணிப்பாளர் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில் பல விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்குகளில் பங்கு கொண்டுள்ளனர்.

## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மீதான ICAO இன் உயர் மட்ட மாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதித்துவம்

ICAO இன் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு உயர் மட்ட மாநாடு 12-14 செப்ரம்பர் 2012 இல் மொன்றியல் கனடாவில் இடம் பெற்றது. இம் மாநாட்டின் இலக்காக சிவில் விமானப் போக்குவரத்திற்கான நடைமுறை மற்றும் உடனடி ஆபத்துக்களை இனங்காணுவதற்கான விடயங்கள் மற்றும் பிரதானமான விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு விடயங்கள் மீதான அமுலாக்கங்களை பிரேரணைகளின் உருவாக்கம் மற்றும் உலகளாவிய கருத்தொருமைப்பாட்டினை அடைந்து கொள்வதற்கு என சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத்துறையில் அக்கறை உடையோரை ஒருமிக்கச் செய்வதாகவும் இது அமைந்தது.

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பினை தாக்கத்திற்குட்படுத்தும் பிரதான விடயங்களாக, உள்ளார்ந்த தடைகளை எதிர் கொள்ளல், வான் வழியான சரக்கு நகர்த்திலில் பாதுகாப்பை தோற்றுவித்தல், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அளவீடுகள் மற்றும் சமத்துவத்தன்மையில் நிலைத்திருந்தலை உறுதி செய்தல், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனைச் செயன்முறையின் மதிப்பீட்டு வெளிப்படைத்தன்மை, இயலுமை, கட்டுமானம் மற்றும் தொழிநுட்ப உதவிகள், தொழிநுட்ப உயர் பயணிகள் தகவல் (API) மற்றும் பயணிகள் பெயர் பதிவு (PNR) என்பவற்றுடனான அபிவிருத்தி மற்றும் கண்டுபிடிப்புகளை பெற்றுக் கொள்ளல், இயந்திர மூலம் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பில் பிராந்திய நிலைகளின் முயற்சிகள், மற்றும் ICAO உலகளாவிய ஆபத்து சூழ்நிலைக் கூற்று போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் தலைமை வகிக்கப்படும் இலங்கையின் உயர் மட்ட தூதுவர் பங்கேற்றனர். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய இந்த மாநாட்டில் செய்யப்பட்ட யோசனைகளை இலங்கையின் பங்காளர்கள் முழுமையாக பயன்படுத்தியுள்ளனர்.

## வரையறுக்கப்பட்ட எக்போ ஏவியேஷன் (தனியார்) கம்பனி மீதான விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனை

டிசம்பர் 11 முதல் 17 வரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுயகையாள்கை அந்தஸ்தையுடையதும், ஒரேயொரு அனைத்து வகைச் சரக்குகளையும் கையாள்கைக்குட்படுத்தும்

செயற்பாட்டாளரான வரையறுக்கப்பட்ட எக்போ ஏவியேஷன் (தனியார்) கம்பனி மீதான விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் தேவைப்பாடுகள் மீதான ஏற்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் எக்போ ஏவியேஷன் முகாமையுடன் கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கான சீராக்கச் செயற்பாட்டுத் திட்டமானது நடைமுறைக்கு கொண்டுவரப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

எக்போ ஏவியேஷனின் சிரேஷ்ட முகாமையானது சோதனை செயன்முறை நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வமுள்ளோராக இருந்தது அவதானிக்கப்பட்டது.

## எக்போ ஏவியேஷனுக்கான வழிகாட்டுனர்கள் (Instruction) சான்றுபடுத்தல்

எக்போ ஏவியேஷனின் சிரேஷ்ட பாதுகாப்பு முகாமையாளரான திரு.லலீத் வேலரத்ன அவர்கள் கம்பனியின் ஊழியர்களுக்கு விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு பயிற்சியினை முன்னெடுப்பதற்கு 17 டிசம்பர் முதல் "விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு வழிகாட்டுனர்" என்பதான அனுமதியொன்றினைப் பெற்று வெகுமதியளிக்கப்பட்டார். இச் சான்றுபடுத்தலானது தேசிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பயிற்சித் திட்டத்தில் (NCASTP) குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சியளித்தல் பாடத்திட்டம், பாடம், திட்டங்கள், கைக்குறிப்பு, வெளிப்படுத்துகைத்திறன், வெளிப்படுத்துகை விதம் போன்றவற்றின் மதிப்பீட்டுச் செயன்முறையொன்றின் மூலம் பின்பற்றப்பட்டது.

## பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகள்

பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகள் இலங்கைக்கு செயற்பாட்டை மேற்கொள்ளும் விமானச் சேவைகள் மீதும் விமான நிலையத்திலும் அங்கீகரிக்கப்பட்ட சோதனைத் திட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டது.

## விஷேட வேலைத்திட்டப் பகுதி

### COSCAP-SA வேலைத்திட்டத்திற்கு உதவியளித்தல்

COSCAP-SA இன் உருவாக்கலின் போது, அங்கத்துவ நாடுகளால் எட்டப்பட்ட உடன்பாட்டின் நிமிர்த்தம், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் இலங்கைக்கு செயற்பாட்டை முன்னெடுக்கும் விமான சேவைகளில் இலங்கை மற்றும் ஏனைய உறுப்பு நாடுகளுக்கிடையில் இலவச பிரயாண ஏற்பாடுகளை வழங்குவதன் மூலம் வேலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட நிபுணர்களின் உத்தியோக பூர்வ இலக்குகளுக்கு CAASL ஆனது உதவியளிக்கின்றது. இதன் பிரகாரம் விஷேட வேலைத்திட்டம் பகுதியானது COSCAP-SA நிபுணர்களுக்கான மொத்தமாக 10 இலவச விமான சீட்டுகளை பெற்றுக் கொள்ள உதவி புரிந்துள்ளது. அவ்வாறான பயணச்சீட்டுகளின் விபரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

| | |
|---|---|
| சிறிலங்கா விமான சேவை | 04 விமானச் சீட்டுக்கள் |
| மிஹின்லங்கா விமான சேவை | 06 விமானச் சீட்டுக்கள் |

## கண்காட்சி

### தேசத்தின் மகுடம் தேசியக் கண்காட்சி

மீளாய்விற்கு உட்படுத்தப்படும் வருடத்தில் அனுராதபுரம் ஒயாமடுவ எனுமிடத்தில் CAASL ஆனது AN24 வானூர்தியொன்றினைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருந்தது. இந்த வானூர்தியானது தென்னிலங்கை பூராகவும் போலியான பறப்பொன்றிற்கு செயன்முறை விளக்கமளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. வீரவெல விமான நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இலங்கையின் தென்பகுதி பூராகவும் பறப்பினை மேற்கொண்டு இறுதியில் அதே விமான நிலையத்தினை வந்தடைந்த பயணி ஒருவரால் பார்க்க முடியுமான உண்மையான பறப்பொன்றின் காட்சி விமான அறையின் நடுப்பகுதி மற்றும் ஒவ்வொரு ஜன்னல் பகுதியினூடாகவும் காணொளிப் படக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டது.

எதுவித செலவுமின்றி, மாதிரிகை பறப்பு அனுபவமொன்றுடனான இப் பயணிகள் போக்குவரத்துச் செயற்பாட்டினை அருகிலிருந்து அவதானிக்கக் கூடியதான விஷேட சந்தர்ப்பமொன்றினை பெற்றுக் கொள்வதற்கு பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.


### "மொறட்டுவ உதான" வர்த்தகக் கண்காட்சி

CAASL ஆனது 22-26 டிசம்பர் 2012 இல் மொறட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூாயில் இடம் பெற்ற கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியில் தனது காட்சியறை ஒன்றை நிறுவியிருந்தது.

## விமானப் போக்குவரத்து எரிபொருள் விலை கண்காணிப்பு

விஷேட திட்டங்கள் பகுதியானது 2012 காலப்பகுதியிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து விமானப் போக்குவரத்து எரிபொருள் விலை மீதான மாதாந்த அறிக்கைகளை பெற்று விமான கண்காணிப்பை மேற்கொண்டிருந்தது. இச் செயன்முறையானது எதிர்காலத்திலும் தொடரக்கூடும் என்பதுடன் தகவல்கள் அக்கறையுடையோர் மற்றும் தீர்மானங்கள் மேற்கொள்வோருக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**2008 முதல் 2012 வரையில் BIA இல் விமானப் போக்குவரத்து எரிபொருள் (Jet A-I) விலை முரண்பாடுகள் (ஒப்பந்த வாடிக்கையாளருக்கானது)**




*மூலம் : இலங்கைப் பெற்றோலியம்*

## வெளியீடுகள்/ அறிக்கைகள்

பாராளுமன்றத்திற்கும் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களுக்கும் மற்றும் ஏனைய கைத்தொழில் வாடிக்கையாளருக்கும் சமர்ப்பித்துக் கொள்ளும் நோக்குடன், 2002 இல் 34 இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் 2011 ஆண்டுக்கான ஆண்டறிக்கை தொகுக்கப்பட்டது.

விஷேட திட்டங்கள் பகுதியானது அமைச்சுக்கும் மற்றும் மத்திய வங்கிக்கும் பௌதீக மற்றும் அறிக்கைகள், குழு நிலைப் பாதீட்டு அறிக்கை, திட்ட அபிவிருத்தி அறிக்கை போன்றவற்றை சமர்ப்பித்திருந்தது.

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு CADEC

தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி 2012 இற்கு இணைந்ததாக அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனுராதபுரம், கொக்கிராலை, தம்புத்தேகம, ஹலேன் பிடுநுலேவா மற்றும் கெப்பிட்டி கொல்லாவ எனும் ஐந்து கல்வி வலயங்களை உள்ளடக்கியதாக பன்னிரண்டு (12) வேலைத்திட்டங்களை விசேட திட்டப்பகுதியின் கீழ் செயற்பட்டு வரும் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) நடத்தியது. மேலும், 2012 இல் கல்வியமைச்சுடன் இணைந்து, க.பொ.த உ/த வகுப்புக்களை நடத்தி வரும் 2800 பாடசாலைகளுக்கு இலவச அடிப்படையில், விமானப் போக்குவரத்துத் துறையில் பாடசாலை மாணவர்களில் அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் CADEC வேலைத்திட்டத்தின் கீழ் CAASL இன் காலாண்டுச் சஞ்சிகையாக வெளியிடப்பட்டு வரும் "குவான்ஷரு" சஞ்சிகை விநியோகிக்கப்பட்டது.

## விமானத்தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி

### வான்பரப்பு முகாமைத்துவம்

தேசிய வான்பரப்பானது அத் தேசத்திற்கு மதிப்புமிக்கதொரு சொத்தாகும். பாதுகாப்பானதும் வினைத்திறனுமான வான் பரப்பொன்று நாட்டினது நலனுக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான ஆகக் கூடுதலான நன்மையை தொடர்ந்து வழங்கி வரும். தேசத்தின் வேறுபட்ட பாதுகாப்புத் தேவைகளை கருத்திற் கொள்ளும் அதேவேளை, ஏற்கனவேயுள்ள நியதிச்சட்ட ஏற்பாடுகளினுள் அமைந்த வகையில், மீளாய்விற்கு உட்பட்ட காலத்தில் வான் பரப்பின் பயன்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கு அம்மதிப்பு மிக்க சொத்தினது பாதுகாப்பையும் வினைத்திறனையும் முகாமை செய்து கொள்வதனை தொடர்ந்து மேற்கொண்டதுடன், இந்த உண்மையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்திக் கொள்வதற்கு விமானத்தளங்கள் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியால் தேவையான ஒவ்வொரு சாதகமான அளவீடுகளும் எடுக்கப்பட்டது.

உறுப்பு நாடுகளுக்காக, ICAO ஆல் அங்கீகரிக்கப்பட்ட செயற்கைக் கோளை (satellite) அடிப்படையாகக் கொண்ட வான் செலவு முறைமையில் (PBN) அமைந்த செயற்றிறனை அடிப்படையிற் கொண்ட வான்செலவு அமுலாக்கத்திற்கும், வான்வெளியின் பாதுகாப்பு மற்றும்

செயற்றிறன் போன்வற்றை அதிகரிக்கும் பொருட்டும், வான் வெளி மீள் வடிவமைப்பிற்காக வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) நிறுவனத்தின் வான் செலவு சேவை வழங்குனருடன் விமானத்தளங்கள் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியானது இணைந்து செயற்படுகிறது. இதற்கு மேலாக இலங்கையின் வான் பரப்பில் PBN இன் பலாபலன்கள் மற்றும் அதன் அமுலாக்கல் பற்றியதுமான அறிவூட்டலை விமானப் போக்குவரத்தில் அக்கறை கொண்டோருக்கு ஏற்படுத்தும் பொருட்டு, வான் பரப்பில் அக்கறையுடையோருக்கான வேலைப் பட்டறையொன்றையும் ANS பகுதியானது நடத்தியிருந்தது.

## பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமானத்தளச் சான்றுபடுத்தலைப் புதுப்பித்தல்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமானது 01 மார்ச் 2010 இல் சான்றுபடுத்தப்பட்டதுடன், விமானத் தளச் சான்றிதழானது ஏற்கனவேயுள்ள ஒழுக்க விதிகளின் பிரகாரம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது.

விமானத்தள சான்றிதழின் மீதான புதுப்பித்தலுக்கான ஐந்து நாள் சோதனையொன்று பெப்ரவரி 2012 இல் காலாவதியாக்கப்பட்டதுடன், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு விமானத்தள சான்றிதழ் புதிப்பிக்கப்பட்டது.

## "மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்" மீதான கட்டுமான மற்றும் சான்றுப்படுத்தற் பணிகளுக்கான நியதிச்சட்ட உதவிகள்

இவ்வருட காலத்தில், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் சுற்றுப்புறத்தினை பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகப் பிரகடனஞ் செய்யும் பொருட்டு ஒழுக்கவிதிகளை வழங்குவதற்கு குறித்த பகுதியானது தேவையான படிமுறைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், அவ்வாறான பாதுகாக்கப்பட்ட பகுதிகளினுள் கட்டுமானங்களின் உயர்வினை வரையறுத்துக் கொள்வதற்கு விளக்கங்களையும் கொடுத்திருந்தது.

இதற்கு மேலதிகமாக, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் கட்டுமானத்திற்கு தேவையான நிதிச்சட்ட வழிகாட்டல்களையும் வழங்கியிருந்தது. மேலும் விமான நிலையத்தின் விமானத்தளச் சான்றுத்துலை மேற்கொள்வதற்கான சர்வதேச விமான நிலையமானது காணப்படுகின்றதா என்பதனை உறுதி செய்யும் பொருட்டு தேவையான சோதனைகள், ஆய்வுகளை நடத்தும் செய்முறையில் குறித்த பகுதியானது ஈடுபட்டுள்ளது.

## ATC தரப்படுத்தல் மதிப்பீடுகள்

மீளாய்விற்கு உட்படுத்தப்படும் ஆண்டுகாலத்தில் ANS பகுதியானது வேலை செய்யும் போதான பயிற்சியளித்தல் (OJT), தரப்படுத்தல் மதிப்பீகளை முன்னெடுத்தல் மற்றும் வான் நெரிசல் கட்டுப்பாட்டுக் கற்கை நெறிக்கான இறுதி செயன்முறைப் பரீட்சையினை நடாத்துதல் என்பன மீதான மேற்பார்வையினூடாக AASL ஆல் நடாத்தப்படும் வான் நெரிசற் கட்டுப்பாட்டுப் பயிற்சியளித்தலின் நியமனத்தை மதிப்பிட்டுக் கொள்ளும் மிகப்பெரிய பங்கொன்றினை முன்னெடுத்திருந்தது.

குறித்த பகுதியானது, குறித்த ஆண்டு காலத்தில் பின்வரும் விதத்தில் ATC பயிலுநருருக்காக நடத்திய ATC மாதிரிகை மீதான செயன்முறை பயிற்சிகளை மேற்கொண்டிருந்ததுடன் அனைத்து வான் நெரிசல் கட்டுப்பாட்டாளர்களுக்கான ATC தரப்படுத்தலின் வழங்குகையின் பொருட்டு ATC தரப்படுத்தல் பரீட்சையினையும் முன்னெடுத்திருந்தது.

நடாத்தப்பட்ட பரீட்சை - 23
ATC மாதிரியை மீதான சோதனை - 05

மேலதிகமாக பகுதியானது பின்வரும் பரீட்சைகளை வான் நெரிசற் கட்டுப்பாட்டளர்கள் மற்றும் விமானிகளுக்கு நடாத்துதலில் பங்குகெடுத்திருந்தது.

மொழிச் சரளத்தன்மைச் சோதனை - 54
நடாத்தப்பட்ட வானொலித் தொலைபேசி சோதனை - 40

## சோதனை நடவடிக்கைகள்

விமானத்தளங்கள் மற்றும் வான் செலவுகள் சேவைகள் பகுதியின் சோதனை நிகழ்ச்சிதிட்டமானது மாதாந்த ரீதியிலான வான் நெரிசல் கட்டுப்பாட்டு சேவைகள், விமானத் தளங்கள் மற்றும் வானியல் தகவல் சேவையாளரின் மாதாந்த சோதனைகளை வேண்டி நிற்கின்றது. இப்பகுதியானது வான் நெரிசல் கட்டுப்பாட்டு சேவைகள் மீது இருபத்தி நான்கு (24 சோதனைகளையும், விமானத்தளங்கள் மீது பத்தொன்பது (19) சோதனைகளையும், வானியல் தகவற் சேவைகளின் மீது பன்னிரண்டு சோதனைகள் (12) என மொத்தமாக ஐம்பத்தைந்து (55) சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அச் சோதனை நடவடிக்கைகளின் போது அவதானிக்கப்பட்ட வேறுபாடுகள், தேவையான பாதுகாப்பு முன்மொழிவுகளுடன் அச்சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்புடையதாக காணப்படும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது. கண்டறியப்பட்ட குறைபாடுகள் குறித்த காலத்தில் சீர்செய்யப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு தேவையான தொடர் செயன்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## ATC சம்பவங்கள் மீதான விசாரணை

CAASL இற்கு அறிக்கையிடப்பட்ட ATC நிகழ்வுகளின் விசாரணைகளுக்கு விமானத்தளங்கள் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியானது பொறுப்பாகக் காணப்படுவதுடன், சீராக்க நடவடிக்கைகளை சேவை வழங்குனருக்கு முன்மொழிவுகளை மேற்கொள்கின்றது. குறித்த பகுதியானது குறித்த காலப்பகுதியில் இரண்டு (02) வான் நெரிசல் கட்டுப்பாடு சம்மந்தமான சம்பவங்களை விசாரணைக்குட்படுத்தியிருந்ததுடன், எதிர்காலத்தில் அதையொத்த சம்பவங்கள் மீளெழுப்புவதனை தவிர்க்கும் பொருட்டு, வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) கம்பனியின் வான் நெரிசற் கட்டுப்பாட்டு சேவை வழங்குநர்களுக்கு பாதுகாப்பு முன் மொழிவுகளை மேற்கொணடது.

## உயர்வான கோபுர வடிவங்களின் நிர்மாணத்திற்கான அனுமதிகள்

விமானத்தளங்கள் மற்றும் வான் செலவு சேவைகள் பகுதியானது விமானத்தளங்களை சூழவுள்ள பிரகடனப்பட்ட பிரதேசங்களில் கட்டுமானங்களின் உயர்வினை மட்டுப்படுத்திக் கொள்வதற்கென வழங்கப்பட்ட வலய ஒழுக்கவிதிகளின் பிரகாரம், குறித்த ஆண்டு காலப்பகுதியில் அறுநூற்று ஐம்பத்து மூன்று (653) உயர் கோபுர வடிவங்களுக்குக்கான அமைப்பதற்கான அனுமதிகளை வழங்கியிருந்தது.

## ஆட்புலத்தின் மேலான பறத்தல் மற்றும் தரையிறங்கல் அனுமதிகள்

ஆண்டு காலத்தில், விமானத் தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதியானது இலங்கை ஆட்புல நிலப்பரப்பின் மேலான ஆயிரத்து முப்பது (1030) சர்வதேச பறத்தல்களுக்கு அனுமதியளித்திருந்ததுடன், மேலும் அறுநூற்று ஐம்பத்தைந்து அட்டவணைப்படுத்தப்படாத சர்வதேச பறப்புகள் இலங்கையில் தரையிறக்கம் செய்வதற்கும் அனுமதியளித்திருந்தது. எனினும், அலுவலக நேரங்களிற்கு அப்பால் CAA இன் சார்பில், மேற்படி வேண்டுகோள்களுக்கான அனுமதியினை AASL வழங்கி வருவதால், மேற்கூறப்பட்ட எண்ணிக்கையானது இலங்கையின் ஆட்புலத்திற்கு மேலாகப் பறத்தல் மற்றும் அட்புலத்தில் தரையிறக்கல்களில் மொத்த எண்ணிக்கையானது சரியான தொகையை பிரதிபலிக்காது அமையலாம்.

## வானியல் தகவல் சேவைகள்

குறித்த பகுதியானது NOTAMS (விமானிகளுக்கான அறிவித்தல்) வானியற் தகவல் வெளியீடுகளின் திருத்தங்கள், வானியல் தகவல் குறை நிரப்புக்கள் மற்றும் வானியல் தகவல் சுற்றறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கும் வானியல் தகவல் வெளியீட்டுப் பொதியினை விநியோகிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. குறித்த ஆண்டில் பகுதியானது பின்வரும் வானியல் வெளியீடுகளை உருவாக்கி விநியோகித்துள்ளது.

| | |
|---|---|
| NOTAMS (விமானிகளுக்கான அறிவித்தல்) விநியோக அனுமதி | 261 |
| வானியல் தகவல் வெளியீட்டுச் சீரான திருத்தங்கள் | 01 |
| வானியல் தகவல் குரைநிரப்புகள் | 08 |
| வானியல் தகவல் சுற்றறிக்கைகள் | 10 |

## உலங்கு வானூர்தி மூலமான வான்வெளி வேலைகள்

குறித்த ஆண்டில், உலங்கு வானூர்திச் செயற்பாட்டாளர்கள், பயணிகள் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, கூட்டிணைவு உருவாக்கங்களின் விளம்பர நோக்கங்களின் பொருட்டு, புகைப்படமெடுத்தல், காணொளி பதிப்பு, இலத்திரனியல் மீள் ஒலி வழி இயல் நிலை வரைபுகளுக்கான வானியல் மற்றும் வியாபாரக் குறி மேம்படுத்தல் வேலைகள் போன்ற வானியல் வேலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது.

குறித்த பகுதியானது 2012 இல் பாதுகாப்பிற்காக வேண்டப்படும் மட்டத்தினை பேணுவதற்கு வேண்டிய படிமுறைகளை கையாண்ட பின்னர் மேற்படி நடவடிக்கைகளுக்கான இருபது (20) அனுமதிகளை வழங்கியிருந்தது.

# விமானப் பறப்புப் பாதுகாப்புப் பிரிவு

## தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது, வாடிக்கையாளரை திருப்திப்படுத்தல் போன்றதான விமானப் போக்குவரத்துச் சமூகத்தின் தேவைகளில் சிலவற்றினை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 2012 இல் மேலதிக அபிவிருத்திகளை வெளிக்காட்டியிருந்தது. முன்னேற்ற நடவடிக்கைகளின் பிரதான விடயங்கள் கீழே பட்டியலிடப்படுகின்றன.

### 01 ஜனவரி 2012 இலிருந்து மாலைதீவிற்கான பறத்தற் குழு பரீட்சைச் சேவைகளானது விமானச் சேவைப் போக்குவரத்து விமானி உரிமம் (ATPL) வரை விரிவாக்கஞ் செய்யப்பட்டது

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) இரண்டு நாடுகளுக்கும் நன்மைகளை பெற்றுக் கொடுக்கும் முகமாக மாலைதீவுக் குடியரசுக்கான வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம் (CPL) வரையிலான விமான உரிமங்களை வழங்குவதற்கான அறிவுத்திறன் பரீட்சையினை முன்னெடுத்து வருகின்றது. இம் முயற்சியானது கடந்த ஆண்டில் விமான சேவை போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரம் (ATPL) மட்டத்திற்கு விரிவாக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

### சிறிலங்கன் எயார்லைன்ஸின் (SLAL) வகைத்தரப்படுத்தல் பயிற்சி நிறுவனத்தினை சான்றுப்படுத்தல்

சிறிலங்கன் எயார்லைன்ஸின் எயார்பஸ் A320 ரக வானூர்திக்காக முழுமையான பறத்தல் மாதிரிகையின் அறிமுகத்துடன், அனுமதிகள் மீது அல்லது அவற்றிற்கு மேலான வகைத் தரப்படுத்தல்களுடனான விமானி அனுமதிப்பத்திரதாரர்களின் பயிற்சிக்கான அனுமதிப்பத்திரமொன்றினை குறித்த விமான சேவை வேண்டிநின்றதுடன், தனது ஊழியர்களுக்கான பயிற்சியினை அவ் அனுமதிப்பத்திரத்துடன் ஆரம்பித்தது. இவ் அத்தாட்சிப்படுத்துகை இவ்வாண்டு காலத்தில் முன்னெடுக்கப்பட்டு, நிறைவுறுத்தப்பட்டது.

### வெளிநாட்டு பறத்தல் பாடசாலை ஏற்றுக் கொள்ளல் (நியூசிலாந்து இன்ரநெஷனல் ஏவியேஷன் அக்கடமி)

வெளிநாட்டு அனுமதிப்பத்திரங்களை இலங்கை நாட்டிற்குரிய விமானி அனுமதிபத்திரங்களை மாற்றீடு செய்வதற்கான வெளிநாட்டுப் பறத்தல் பாடசாலைகளுக்கான சான்றுபடுத்தல் முறைமையானது இதுவரையிலும் இருக்கவில்லை. அவ்வாறான தேவையினையும் சீராக்கத்தினையும் அடையாளம் காணுதலானது, இந் நோக்கத்திற்கான செயன்முறையினை அறிமுகப்படுத்தலின் மூலம், தனிநபர் அனுமதிப்பத்திரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. ஏற்கனவே, நியூசிலாந்து பறத்தல் பாடசாலையொன்று பயிற்சி வசதியளித்தல்களுக்கான அவர்களது பரம்பலை விரிவுபடுத்தி இரு நாடுகளுக்கும் மற்றும் பறத்தலில் ஈடுபடும் சமூகத்திற்கும் நன்மையளிக்கும் இச் சான்றுபடுத்தலைப் பெற்றுள்ளது.

### தனிநபர் அனுமதிப்பத்திரம் தன்னியக்கப்படுத்தலின் அறிமுகம்

CAASL இற்கு எந்தவொரு செலவுமின்றி, பாதுகாப்பு மேற்பார்வை வசதியளிக்கப்பட்ட, ஒருமைப்படுத்தப்பட்ட செயன்முறை (SOFIA) என அழைக்கப்படும் ஒரு முறைமையுடன், ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவரால் (EASA) முன்மொழியப்பட்ட ஐரோப்பாவிலிருந்தான ஒரு சர்வதேச தொண்டர்வ (Volunteer) நிறுவனமொன்றினூடாக மனித வலுவின் தேவையை குறைத்து, தன்னியக்கப்படுத்தப்பட்ட தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியினூடாக பகுதியின் வேலைகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஏறத்தாழ SOFIA நிகழ்ச்சித்திட்டத்தின் 80% ஆன வேலைகள் முடிவுக்கு வந்துள்ளது.

மற்றுமொரு செயன்முறையானது 2012 காலத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணணிப் பாடசாலையினூடாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஏறத்தாழ இந் நிகழ்ச்சித்திட்டத்தின் 50% வேலைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

## ஐந்தாவது SARI பகுதி 66 (வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திர ஒழுங்குவிதி) /147 (பராமரிப்பு பயிற்சியளித்தல் நிறுவன ஒழுங்குவிதி) வேலைக்குழுக் கூட்டம்

தனிநபர் அனுமதிப்பத்திரம் பகுதியானது, CAASL ஆல் ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பில் 28 பெப்ரவரி முதல் 2 மார்ச் 2012 வரை நடாத்தப்பட்ட ஐந்தாவது தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு (SARI) பகுதி 66 மற்றும் பகுதி 147 வேலைக்குழு கூட்டத்தினை ஒழுங்கு செய்தது. இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், இலங்கை மற்றும் ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவர் (EASA) போன்ற நாடுகளிலிருந்து வேலைக்குழு உறுப்பினர்கள் மற்றும் வேறுபட்ட உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனங்களிலிருந்தான பிரதிநிதியை உள்ளடங்களாக ஏறத்தாழ 30 தூதுவர்கள் இந்த நான்கு கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

SARI இன் முழுமையான நோக்கமாக தெற்காசியாவில் நியதிச் சட்ட தேவைப்பாடுகளின் அதிகரிப்பினை பேணிக் கொள்ள சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான ஒரு அமைப்பொன்றை உருவாக்குவதாக இருக்கின்றது. டிசம்பர் 2012 இன் இறுதிக்கு முன்னராக வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரம் தொடர்பில் முதலாவது வரைபு SARI பகுதி 66 ஐயும் பராமரிப்பு பயிற்சியளித்தல் நிறுவனம் தொடர்பில் SARI பகுதி 147 ஐயும் வெளியிட்டுக் கொள்வதற்கு SARI 66/147 வேலைக்குழு விரைவாக எதிர்பார்க்கப்படுகிறது.

## SARI பகுதி 66 ஒழுங்குவிதிகள் (தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு (SARI) பகுதி 66 - வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகள்)

வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரத்திற்கான ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவர் (EASA) பகுதி 66 ஐ அடிப்படையிற் கொண்ட பொருத்தமான ஒழுங்குவிதியொன்றான SARI பகுதி 66 ஐ இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தோற்றுவித்தது. இந்த ஒழுங்குவிதியானது SARI 66 வேலைக் குழுவால் உருவாக்கப்பட்டதுடன் இதன் முதலாவது வழங்குகையானது டிசம்பர் 2012 இல் வெளியிடப்பட்டது.

2006 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய - தெற்காசிய சிவில் விமானப் போக்குவரத்து கூட்டிணைவுத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட தெற்காசியாவிலிருந்தான அதிகாரசபைகளின் ஒரு குழுமமாக SARI அமைகின்றது. SARI உறுப்பினர்களது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஏனைய உறுப்பு நாடுகளின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உறுப்பு நாடொன்றில் முன்னெடுக்கப்படும் பராமரிப்பு வேலைக்கான அதன் ஒத்தியல்பினைக் கொண்டிருக்கும் நோக்குடன், ஒரு பொதுவான கட்டாயப்படுத்தப்பட்ட, மற்றும் விபரமான விமானப் போக்குவரத்துத் தேவைப்பாடுகளுக்கு இணங்கிக் கொண்டன. EASA மற்றும் ஐரோப்பிய வான்வெளி கைத்தொழிலானது SARI இன் செயற்பாடுகளுக்கு உதவி வழங்குகின்றன.

முதன்மையாகக் கருதப்பட்ட தெற்காசியாவில் பராமரிப்பு ஒழுக்கவிதியின் பேணுகை மீது வேலை செய்வதற்கு 2007 இன் ஆரம்பத்தில் SARI பங்காளர்கள் இணங்கியிருந்தனர். பல்வேறு நாடுகள் ஒரு உசாத்துணையாக EASA பகுதிகளை பயன்படுத்துதலை, பராமரிப்பு ஒழுக்கவிதிகளின் புதியதொரு தொகுதியினை உருவாக்கியோ அல்லது EASA பகுதிகளை ஏற்றுக் கொண்டோ செயற்படுகின்றனர். எனினும் அவர்களது கருதுகோள்கள் அடிப்படையில் ஒத்தவையாக இருக்கின்ற போதிலும், இந்த தேசிய ஒழுங்குவிதிகள் இதுவரை, அவர்களது கட்டமைப்பில் அல்லது அவர்களது கூட்டிணைக்கப்பட்ட வழிகாட்டல் ஆவணங்களில் அல்லது அவர்களது வேலைச் செயன்முறைகளில் வேறுபாடுகளை உள்ளடக்கியுள்ளன. தெற்காசியாவில் அதிகப்படியான ஒழுங்குவிதிகளை முன்நோக்கியதாகக் காணப்படும் இவ்வகையான மீதமாகவுள்ள பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு, SARI நாடுகள், EASA ஐ அடிப்படையில் கொண்ட வானூர்தி பராமரிப்பிற்கான ஒரு பொருத்தமான ஒழுங்குவிதியினை உருவாக்கிக் கொள்ள இணங்கிக் கொண்டன.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரங்களை பகுதி 66 இனை ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவர் (EASA) ஐ அடிப்படையில் கொண்டு ஒரு பொருத்தமான ஒழுக்கவிதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இணங்கின. இந்த ஒழுங்குவிதிகள் SARI வேலைக்குழுவால் உருவாக்கப்பட்டன. SARI 66/147 வேலைக்குழுவானது 7 SARI சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஒவ்வொன்றாலும் நியமிக்கப்பட்ட 7 உறுப்பினர்கள் உள்ளடக்கப்படுகின்றன.

SARI பகுதி-66 ஆனது வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திர வழங்குகைக்கான தேவைப்பாடுகள் பாரிய வானூர்திகளின் பராமரிப்பில் அல்லது வர்த்தக வான் போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்ட வானூர்தியில் அல்லது துணைக்கருவிகளைச் சேர்ப்பதற்கான உதிரிப் பொருட்களில் ஈடுபாடு கொண்டுள்ள தனிநபர்களின் அனுமதிப்பத்திர வழங்குகையை வெளிப்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது.

## பறத்தல் பாடசாலைகள் மற்றும் விமானப் போக்குவரத்து பயிற்சியளித்தல் நிறுவனங்கள் மேலான சோதனைகள்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியானது விமானப் போக்குவரத்து பயற்சியளித்தல் நிறுவனத்தின் மீது பின்வரும் சோதனைகளை முன்னெடுத்திருந்தது.

1. ஏசியன் ஏவியேஷன் சென்ரர் - 1
2. ஸ்கைலன் ஏவியேஷன் - 2
3. ஓபின் ஸ்கைஸ் - 4
4. கொஸ்மொஸ் ஏவியேஷன் - 2
5. SAAS பி (f)லைட் அக்கடமி - 2
6. சிறிலங்கன் எயர்லைன்ஸ் வகைத் தரப்படுத்தல் நிறுவனம் - 1
7. இன்ரநஷனல் ஏவியேஷன் அக்கடமி - 2 (பறப்பு செயற்பாடுகள் உத்தியோகத்தர் பயிற்சி)

## சர்வதேச பயிற்சிகளில் பங்குகொள்ளல்

தனிநபர் அனுமதிப்பத்திரம் பகுதியில் இருந்து இரண்டு பரிசோதகர்கள் ஒக்லகோமா- ஒக்லகோமா சிற்றியிலுள்ள பெ(F)டரல் ஏவிஜேஷன் அட்மினிஸ்ரேசன்ஸ் இனால் முன்னெடுக்கப்பட்ட ICAO புறக்குறிப்பிட்ட அரசாங்க பாதுகாப்பு பரிசோதகர் (தனியார் அனுமதிப்பத்திரம்) கற்கை நெறியில் பங்குகொண்டனர்.

## வான் மருத்துவ அலகுக்கான அழைப்பு முறைமை அமுலாக்கம்

CAASL இன் தலைமையகத்தில் அமையப் பெற்றுள்ள வான் மருத்துவ நிலையத்தில் மருத்துவச் சோதனைகள் நடாத்தப்படும் போது வரவேற்பறையில் தங்களது முறை அழைக்கப்படும் வரை பொது மக்கள் காத்திருக்கும் நிலை காணப்படுகிறது. வரவேற்பறைக்கும் வான் மருத்துவ நிலையத்திற்கும் இடையிலான தொடர்பாடலானது CAASL மீதான பொது மக்களின் அபிப்பிராயத்தை அதிகரிக்கும் பொருட்டு, தனிநபர் அனுமதிப்பத்திர தேவைகளுக்காக தனித்துவம்மிக்க அழைப்பு முறைமை யொன்றின் ஊடாக இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

## வானியல் தகவல் சுற்றறிக்கையொன்றின் வழங்குகைகள் (AIC)

“விமானி அனுமதிப் பத்திரங்களின் மாற்றத்திற்கான அறியியல் தேவைப்பாடு” களுக்கான வானியல் தகவல் சுற்றறிக்கையொன்றினை குறித்த பகுதியானது வழங்கியிருந்தது.

## பல இயந்திர பயிற்சியளித்தல் வேலைத்திட்டத்திற்கான அனுமதி

செயற்பாடுகள் பகுதி பரிசோதகர்களின் தொழில் நுட்ப அனுமதியுடன் மாலைதீவு ஏசியன் அக்கடமி ஒவ் ஏறோ நோரிஸ் இனால் நடாத்தப்பட்ட பல இயந்திர பயிற்சியளித்தல் வேலைத்திட்டத்திற்க்கான அனுமதியினை இப் பகுதியானது வழங்கியிருந்தது.

## வெளிநாட்டு விமானிகளின் ஆட்சேர்ப்பு

சர்வதேச விமானசேவைகள் மற்றும் உள்நாட்டு விமான சேவைகளுக்கான வெளிநாட்டு விமானிகளின் ஆட்சேர்ப்புக்கான 62 அனுமதிகளை குறித்த பகுதியானது வழங்கியிருந்தது, மருத்துவப் பரிசோதனை / மருத்துவ சபைக்கூட்டங்கள் தனிநபர் அனுமதிப்பத்திரம் பகுதியின் வான் நெரிசல் கட்டுப்பாட்டாளர்களுக்கு தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பின்வரும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கிறது.

1. ஆரம்ப மருத்துவ பரிசோதனை - 213
2. மருத்துவப் பரிசோதனைகளை புதிப்பித்தல் - 653

மேலும் வான் மருத்துவ நிலையமானது மருத்துவச் சான்றிதழ்களின் வழக்கமாக எழும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கென இவ் வருடத்தில் 05 மருத்துவச்சபைக் கூட்டங்களை நடத்தியிருக்கின்றது.

## அனுமதியளிக்கப்பட்ட வைத்தியசாலைகளுடனான ஒப்பந்தங்களை புதிப்பித்தல்

குறித்த பகுதியானது விமானிகள் மற்றும் வான் நெரிசற் கட்டுப்பாட்டாளருக்கான மருத்துவ விசாரணைகளை நடத்துவதற்கென ஆசிரி சேயிக்கல் கொஸ்பிட்டல், மற்றும் லங்கா கொஸ்ப்பிட்டல் போன்ற அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுடனான ஒப்பந்தங்களைப் புதுப்பித்துள்ளது.

## செயற்பாட்டுப் பகுதி

### ஒழுங்குவிதிகளின் விருத்தி

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம், செயற்பாட்டுப் பகுதியானது பறப்பு மாதிரிக்கையான அனுமதிகள் மற்றும் தகமைகளை குறிப்பிடும் இணைப்பு 6: பகுதி 1- பாடம் 1 இணைப்பு 6: பகுதி 2, மற்றும் அபாயகரமான பொருட்களை வான்வழியாக நகர்த்துதலினை குறிப்பிடும் இணைப்பு 18 என்பவற்றை நிறைவுறுத்தியுள்ளதுடன், வசதியளித்தலுக்கான இணைப்பு 9 இற்கான பின்பற்றலானது 2012 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### வழிகாட்டல் ஆவண விருத்தி

குறித்த பகுதியானது 2010 இல் பின்வரும் வழிகாட்டல்

ஆவணங்களை விருத்தி செய்வதற்கு முகாமை செய்துள்ளது.

1. SLCAP 4400 ற்கான திருத்தங்கள்
2. SLCAP 4410 ற்கான திருத்தங்கள்
3. சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு மதிப்பீடு (CASA) ரம்ப் சோதனை வழிகாட்டல் ஆவணம்
4. ஆபத்தான பொருட்களை வான் வழியாக நகர்த்துதல் மீதான வேலை வழிகாட்டி.
5. பாதுகாப்பு மற்றும் தீவிர செயன்முறைக்கான (SEP) வழிகாட்டல் ஆவணத்தை மதிப்பிடுவதற்கான சரிபார்த்தற் பட்டியல்
6. இரண்டு இயந்திரச் செயற்பாடுகளுடைய விரிவாக்கங்ளுக்கான (ETOPS) CAT II, III பிரயோகங்களுக்கான புதிய தாய முறையினை விருத்தி செய்தல்.
7. பறப்பு மாதிரிகை பயிற்சி உபகரணங்களிற்கான தரமுயர்த்தப்பட்ட சரிபார்த்தல் பட்டியல் (FSTD)

## தனிநபர்களும், பயிற்சிகளும்

பரிசோதகர்களும் பொது ஊழியர்களும் 2012 இல் விஷேடத்துவப்படுத்தப்பட்ட பயிற்சி நெறிகளைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு உள்நாட்டிலும் அதே போல வெளிநாட்டுகளிலும் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

## வான் செயற்பாட்டாளர்களைச் சான்றுபடுத்தல்

குறித்த பகுதியானது இலங்கையிலும் வெளியிலும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு மேலும் இரண்டு வெளிநாட்டு விமான சேவைகளை (ரைகா் எயார்லைன்ஸ் மற்றும் வின்ட் றோஸ் ஏவியேஷன்) சான்றுபடுத்தியது. இதுவரையில் குறித்த பகுதியால் மொத்தமாக 52 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 36 வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள் வேறுபட்ட பிற நாடுகளிலிருந்து கொழும்பிற்கான சேவையை மேற்கொள்கின்றனா்.

குறித்த பகுதியானது வான் செயற்பாட்டாளர்களை சான்றுப்படுத்துவதற்கென நான்கு (4) விண்ணப்பங்களை (ஷெவ்றோன், ஏவியேஷன், லக்வின் எயார், கைபேட் ஏவியேஷன் மற்றும் பி(f) ளைமின் எயார்லைன்ஸ்) பெற்றுள்ளதுடன், அவை செயன்முறையில் உள்ளன. ஆரம்ப விண்ணப்பக் கூட்டங்கள் மூன்று அனுமதியை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரருக்கு நடாத்தப்படுவதுடன், ஒழுங்குபடுத்தப்பட்ட விண்ணப்ப படிவக் கூட்டமானது வரை ஷவ்ரொன் ஏவியேஷன் (தனியார்) கம்பனிக்கும் 2012 இல் நடாத்தப்பட்டது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஆனது தனது 320 மாதிரிகையினை பயிற்சி நோக்கங்களுக்கான உருவாக்கியுள்ளதுடன், 2012 இல் பரிசோதகர்கள் பயிற்சி நோக்கங்களுக்காக அவர்களது மாதிரிகையின் தகமை பயன்படுத்தப்பட்டனா். மேலும் ஸ்கை லைன்ஸ் நிறுவனத்தின் பறப்பு வான் செலவு செயன்முறை பயிற்றுனா் மதிப்பிடப்பட்டனா் என்பதுடன், பயிற்சியளித்தல் நோக்கங்களின் பயன்பாட்டிற்கான அவற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்து கொள்வதற்காக பகுதியின் பரிசோதகர்களால் அனுமதி வழங்கப்பட்டது.

குறித்த பகுதியானது தளப்பாடசாலையுடன் தொடர்புடைய வரையறுக்கப்பட்ட தெற்காசிய ஏவியேஷன் சேர்வீசஸ் (தனியார்) கம்பனிக்கான (SAAS) கைநூல்களை மதிப்பிடுதலில் ஈடுபட்டிருந்ததுடன், 2012 இல் அதற்கான அனுமதியினையும் வழங்கியிருந்தது.

இதற்கு மேலதிகமாக, பயிற்சியளித்தல், தளச் செயற்பாடுகள், அனைத்து காலநிலைச் செயற்பாடுகள், பறப்புச் செயற்பாடுகள், நிறை மற்றும் சமநிலை மற்றும் பறப்பு அனுப்புகைப் பாதுகாப்பு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட வேறுபட்ட வழிகாட்டல் ஆவணங்கள் திருத்தங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அவற்றிற்கு அனுமதியும் வழங்கப்பட்டன.

விமான சேவையின் இருப்பானது உள்நாட்டு விமானபோக்குவரத்தில் அதிகரிக்கப்பட்டு உள்ளதுடன், பரிசோதனைகள் சான்றுபடுத்தலுக்கான தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு செஸ்னா 208, மற்றும் எம்ஏ 60 என்பன மீதான நிருபணம் நடாத்தினார்கள் மேலும் இதற்கு மேலாக CAA ஆனது வரையறுக்கப்பட்ட சிறிலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உள்நாட்டு மிதப்பு விமான செயற்பாட்டிற்க்காக மகாவில்லாச்சிய, மட்டக்களப்பு, பாசிக்குடா மற்றம் டன்டுகம எனும் இடங்களில் அமைந்துள்ள நீா் விமானத்தளங்களை மேலதிகமாக உள்ளடக்கும் பொருட்டு நிருபணப் பறப்புக்களை மேற்கொண்டிருந்தது.

## சோதனைகள்

குறித்த பகுதியானது தொடர்ச்சியாக செயற்பாட்டாளர்கள் மீது பின்பற்றுகைச் சோதனைகளை நடாத்தியதுடன் விபத்து விசாரணைகளில் வினைத்திறனான வகையில் ஈடுபட்டுள்ளது. சோதனை நடவடிக்கைகளில் வகைகளில் ராம்ப்சோதனை, பிரதான தளச் சோதனைகள், DCP கண்காணிப்பு நியதிச்சட்ட சோதனைகள், பயிற்சியளித்தல், அவதானித்தல் மற்றும் நிலையான வசதி மதிப்பிடற் சோதனைகள் என்பனவற்றினைக் குறிப்பிட முடியும். இவற்றிக்கு மேலதிகமாக, குறித்த பகுதியினது பரிசோதனைகள் முன்னெடுப்பிலும் உள்நாட்டு மிதிப்பு விமான செயற்பாடுகள், உலங்கு வானூர்தி செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் நீா் விமானத் தளங்கள் மற்றும் உலங்கு வானூர்தி தளங்களின் சான்றுபடுத்தல்களில் ஈடுபட்டுள்ளது.

பயிற்சியளித்தல் மற்றும் விமானிகளைப் பரீட்சித்தல் என்பவற்றில் தொடர்ச்சியாக ஏற்படும் அதிகரித்த

கேள்வி தொடர்பில் குறித்த பகுதியானது சிறிய செயற்பாட்டாளருக்கு ஒத்ததாக அமர்த்தப்பட்ட பரிசோதனை பரீட்சகர்களை அறிமுகஞ் செய்துள்ளதுடன், இம் மூன்று அமர்த்தப்பட்ட பரிசோதனைப் பரீட்சகர்களை (DPE) பறப்பு பரிசோதனைகளை நடத்தும் கடமையுடன் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் இதற்கு மேலதிகமாக, 2012 இல் 07 புதிய அனுமதியளிக்கப்பட்ட பரிசோதனை பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், நான்கு பாதுகாப்பு விளக்குரைஞர்கள் வானறைப் பாதுகாப்புத் தேவைகளை முன்னுரிமைப்படுத்தும் விதத்தில் குறித்த பகுதியால் நியமிக்கப்பட்டனர்.

வசதிகளானவை, முறைமைகளை தொடர்ச்சியாக விருத்தி செய்து உயர்ந்த மட்டமொன்றிற்கு சோதனைகளின் இலக்குகள் எட்டப்படுவதற்கு பரிசோதகர்களுக்காக விரிவுபடுத்தப்பட்டன என்பதுடன், அவ் அணுகுமுறையின் உச்ச நிலை என்பது இலத்திரனியல் சரிபார்த்தற் படிவ முறைமையின் தோற்றமாக காணப்பட்டதுடன், நேரக் காரணியைக் குறைத்துக் கொண்டு, உடனடியாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்க பரிசோதகர்களுக்கு அதிகாரத்தினை வழங்குகின்றது.

## வான்தகமைப் பகுதி

### தொடர்ச்சியான வான்தகமை

வான்தகமைப் பகுதியானது ஆறு (6) A-340 ரக வானூர்திகளையும், ஏழு (7) A-330 ரக வானூர்திகளையும், எட்டு (8) A-340 ரக வானூர்திகளையும் உள்ளடக்கிய 21 வானூர்திகளைக் கொண்ட மொத்த வரிசையொன்றுடன் கூடியதான சிறிலங்கன் எயார் லைன்ஸினதும், நான்கு (4) A-320 ரக வானூர்திகளை உள்ளடக்கிய மிஹின் லங்கா விமான சேவை வானூர்திகளினதும் பராமரிப்பு மீது வேண்டப்படும் சோதனை மேற்பார்வை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. CAASL ஆனது எட்டு (08) ஆரம்ப வான்தகமைச் சான்றிதழ்களையும் பதினேழு (17) புதுப்பித்தல் வான்தகமைச் சான்றிழ்களையும் வழங்கியிருந்தது. மேலும் வான் தகமைப் பகுதியானது உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் மீது சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

### வானூர்திப் பராமரிப்பு நிறுவனங்கள்

தேவைப்படும் மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் பத்து (10) வானூர்தி பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆரம்ப அனுமதிகள் வழங்கப்பட்டன. மேலும் 2012 இல் முப்பத்தி நான்கு (34) வெளிநாட்டு தளம் மற்றும் சேவை பராமரிப்பு நிறுவனங்களுக்கும் எட்டு (08) உள்நாட்டு பராமரிப்பு நிறுவனங்களுக்கு அனுமதிகள் புதிப்பிக்கப்பட்டன.

### மூன்றாந் தரப்பினரது பராமரிப்பு வேலைகள்

பராமரிப்பு வசதிகள் சோதனை நடவடிக்கைகளின் பின்னர், CAASL ஆனது இலங்கையிலிருந்தும் மற்றும் இலங்கைக்கும் செயற்படுத்தப்படும் தாய் எயார்வேய்ஸ் மற்றும் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் மீதுமான மூன்றாந் தரப்பு பராமரிப்புச் செயற்பாடுகளை எமிரேற்ஸ் எயார்லைன்ஸ் மேற்கொள்வதற்கு அனுமதியினை வழங்கியிருந்தது.

### வானூர்தி பதிவு

மீளாய்விற்குட்பட்ட காலத்தில், CAASL ஆனது எட்டு (08) வானூர்திகளுக்கான ஆரம்பப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கியிருந்ததுடன், ஐம்பத்தியொரு (51) வானூர்திகளுக்கான பதிவுகளைப் புதுப்பித்திருந்தது. வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் வான் செயற்பாட்டாளார்கள் சான்றிதழின் கீழ் செயற்படுத்த, உரிமையாளரின் வேண்டுகோளின் பிரகாரம், இரண்டு (02) வானூர்தியினதும், ஒரு (01) பலூனினதும் உரிமையும் மாற்றஞ் செய்யப்பட்டது.

### பாதுகாப்பு மேற்பார்வை

அனுமதியளிக்கபட்ட ரம்ப் சோதனை அட்டவணைக்கு இணங்க நூற்று இரண்டு (102) ரம்ப் சோதனைகள் 2012 காலப்பகுதியல் மேற்கொள்ளப்பட்டன. மொத்தமாக இருபத்தி நான்கு (24) முறையீடுகள் ரம்ப் சோதனையின் போது அடையாளங் காணப்பட்டதுடன் அவை உடனடி சீராக்கம் செய்தலின் பொருட்டு குறித்த செயற்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டது.

### விஸாவிற்கான முன்மொழிவுகள்

CAASL ஆனது தளப் பொறியியலாளர்களுக்காக தரையிறங்கலுக்கு ஏற்பிசைவானதும், வதிவிடலுக்குமான முன்மொழிவுகளை வழங்கியிருந்தது. மீளாய்விற்கு உட்பட்ட காலத்தில், CAASL தளப் பொறியியலாளர்களுக்கான நாற்பத்தி மூன்று (43) முன்மொழிவுகளையும், பராமரிப்பு பயிற்சி மாணவர்களுக்காக இருபத்தொன்பது (29) முன்மொழிவுகளையும் வழங்கியது.

### பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரம்

வான்தகமைப் பகுதியானது இரண்டு (02) எம்.ஈ.(பீ.எல்) பரீட்சைகளையும், இரண்டு (02) ஏ.எம்.எல் பரீட்சைகளையும், இரண்டு (02) எம்.ஈ.(பீ.எல்) இருந்து ஏ.எம்.எல் இற்கு மாற்றீடு செய்வதற்கான பரீட்சைகளையும், பதின் மூன்று (13) விஷேட மனிதக் காரணி (Module 9) பரீட்சைகளையும் நடாத்தியிருந்தது. தர நிர்ணயத்திற்க்கென ஒரு (01) றொபின்சன் ஆர்-66 இனை கொஸ்மேஸ் ஏவியேஷனுக்காகவும், ஒரு (01) டீசி 08 இனை எக்போ ஏவியேஷனுக்காகவும், மூன்று (03) செஸ்னா 208 ஐ எக்போ ஏவியேஷனுக்காகவும், ஒரு (01) GA -08 டெக்கான் ஏவியேஷனுக்காகவும் ஒரு (01) ஏஸ் 350 பீ ஐ செனொக் ஏவியேஷனுக்காகவும் பராமரிப்பு நபர்களுக்கு நடாத்தப்பட்டதுடன், தற்காலிக

சான்றுப்படுத்தல் அங்கீகாரத்தையும் வழங்கியிருந்தது.

## உதிரிப் பாகங்களுக்கான அனுமதி

வான்பகுதியின் முன்மொழிவுடன் DGCA வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிளுக்கு அனுமதியளித்தார். குறித்த காலப்பகுதியில் எக்போ ஏவியேஷனின் அனுமதியொன்றின் மீது அறுபத்தியொன்பது (69) விண்ணப்பங்களையும், டெக்கான் ஏவியேஷனின் (15) பதினைந்து விண்ணப்பங்களையும், ஏசியன் ஏவியேஷனின் சென்ரரின் எட்டு (8) விண்ணப்பங்களையும் டயா ஏவியேஷனின் பத்து (10) விண்ணப்பங்களையும், கொஸ்மஸ் ஏவியேஷனின் சேவைகளின் இருபத்தெட்டு (28) விண்ணப்பங்களையும் ஸ்கை லைன் ஏவியேஷனின் ஆறு (06) விண்ணப்பங்களையும், திறந்த வெளி தொடர்பில் நாற்பத்தியேழு (47) விண்ணப்பங்களையும் மற்றும் செனொக் ஏவியேஷனின் பதினாறு (16) விண்ணப்பங்களையும் முன்மொழிந்திருந்தது.

# கூட்டாண்மைப் பிரிவு

## வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி

விமான போக்குவரத்து புள்ளிவிபரவியல்

CAASL ஆனது மீள்பார்வைக்கு உட்படுத்திய காலத்தில் இலங்கையின் சிவில் விமான போக்குவரத்து நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும் தரவுகளையும் உரிய நேரத்திற்கு வழங்கி அதன் கடப்பாட்டினை நிறைவு செய்துள்ளது.

## விமான சேவை செயற்பாடுகள்


2012 இல் தாய் எயார் ஏசியா மற்றும் ரைகர் எயார்வேய்ஸ் தமது செயற்பாடுகளை இலங்கைக்கு விஸ்தரித்திருந்ததுடன், ரைகர் எயார் வேயஸ் ஆனது சிங்கப்புரை மையமாக கொண்டு செயற்படும் செலவுச் சிக்கனம் மிக்க விமான சேவை என்பதுடன், தாய் எயார் ஏசியாவினது மலேசியாவில் இருந்து செயற்படும் பிரபல்யமான செலவுச் சிக்கனம் கொண்ட ஏயார் ஏசியா பேகாட்டின் உபகம்பனியாகவும் காணப்படுகிறது. மேலும் உக்ரையின் நாட்டைச் சேர்ந்த வின்ட் ரோஸ் எனும் புதிய அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாட்டாளர் ஒக்டோபர் 2012 இலிருந்து இலங்கைக்கான செயற்பாடுகளை ஆரம்பித்தது. தாய் கம்பனியில் எழுந்த நிர்வாகச் சிக்கல் காரணமாக 2012 இன் முற்பகுதியின் இலங்கைக்கான தமது சேவைகளை நிறுத்தியிருந்த பின்னர் 2012 ஒக்டோபரில் இந்தியாவின் செலவுச் சிக்கனம் மிக்க விமான சேவையான எயார் இந்தியன் எக்ஸ்பிரஸ் மீண்டும் தனது சேவைகளை ஆரம்பித்தது.

குறித்த வருடத்தில் மிஹின் லங்கா விமானசேவையானது தனது பயணிகள் சேவையினை இந்தோனேசியா மற்றும் பங்களாதேஷிற்கு ஆரம்பித்ததுடன், சிறிலங்கன் ஏயார் லைன்ஸ் தமது செயற்பாட்டு எண்ணிக்கைகளை ஜப்பான் மற்றும் சீனா நாடுகளுக்கு அதிகரித்தது என்பதுடன் தனது சேவைகளை சூரிஷ்ற்கு விஸ்தரிப்பதற்கு முன்மொழிந்துள்ளது.

## பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வு


மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வுகளில் குறிப்பிடதக்கவாறு முன்னேற்றகரமான பதிவுகள் காணப்பட்டது. BIA இற்கு மற்றும் BIA இருந்து புறப்பட்ட பயணிகள் முறையே 3,554,969 மற்றும் 3,590,122 ஆகக் காணப்பட்டது. இப் பயணிகள் தொடர்பின் சிறிலங்கன் ஏயார் லைன்ஸ் சந்தை பங்கானது முறையே 55% கொண்ட 1,948,216 பயணிகள் ஆகவும் 54% கொண்ட 1,946,556 பயணிகளையும் காணப்பட்டது.

2012 இல் BIA இல் ஏற்றுமதி செய்யப்பட்ட 108,043 மெற்றிக் தொன் நிறையுடைய மொத்த சரக்குகளில், சிறிலங்கன் ஏயார் லைன்ஸ் 49% கொண்ட 52,872 மெற்றித்தொன்களை தனது சந்தை பங்காக கொண்டிருந்தது. BIA இல் இறக்குமதிக்கென கையாளப்பட்ட மொத்தமான 66,602 மெற்றிக் தொன் பொருட்களில் சிறிலங்கன் எயார் லைன்ஸ் சந்தை பங்கின் 65% உடைய 42,245 மெற்றிக்தொன் பொருட்களையும் கையாண்டது,




அட்டவணை I

| | பயணிகள் | | | சரக்கு (மெற்றிக் தொன்) | | | வானூர்தி நகர்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | வெளிச் செல்கை | உள்வருகை | மொத்தம் | ஏற்றப் பட்டது | இறக்கப் பட்டது | மொத்தம் | |
| 2009 | 2,136,055 | 2,100,361 | 4,236,416 | 84,242 | 47,392 | 131,634 | 28,602 |
| 2010 | 2,657,532 | 2,609,237 | 5,266,769 | 101,207 | 59,631 | 160,838 | 33,907 |
| 2011 | 3,101,915 | 3,085,768 | 6,187,683 | 95,506 | 63,161 | 158,667 | 43,673 |
| 2012 | 3,590,122 | 3,554,969 | 7,145,091 | 108,043 | 66,602 | 174,645 | 48,734 |




## BIA இல் இடைத்தடங்கற் பயணிகள்

பிராந்தியத்தில் ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் கேந்திர நிலையமான BIA, அதிக எண்ணிக்கையான இடைத்தடங்கல் பயணிகளைத் கையாண்டு வருகிறது. இடைத்தடங்கல் பிரயாணிகளை இலங்கைக்கு கொண்டுவரும் முதல் பத்து விமான சேவைகள் பின்வருமாறு.

| விமான சேவையின் பெயர்கள் | பயணிகள் (%) |
|---|---|
| Sri Lankan Airlines | 88% |
| Mihin Lanka | 8% |
| Chaina Estern | 1% |
| Jet Airways | 1% |
| Royal Jordanian | 1% |
| Other Airlines | 1% |

**2012 இல் BIA இல் இருந்து புறப்பட்ட இடைத் தடங்கற் பயணிகள்**




மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பபகுதியில் BIA இல் தொடர்புபடுத்தப்பட்ட அதிக விருப்பங் கொண்ட நகரங்களில் ஐந்து பின்வருமாறு காணப்படுகிறது.

| நகரம் | புறப்படுகைகள் | வருகைகள் |
|---|---|---|
| MAA | 386,473 | 414,428 |
| DXB | 328,532 | 336,151 |
| SIN | 244,670 | 244,487 |
| MLE | 244,456 | 236,259 |
| DOH | 237,092 | 232,436 |

## உள்நாட்டு விமானப் போக்குவரத்து

எக்போ ஏவியேஷன் ஜனவரி 2012 இலிருந்து அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாடொன்றினை இரத்மலானை மற்றும் யாழ்ப்பாணத்திற்கிடையில் மேற்கொண்டு வருகின்ற அவர்கள் 5334 பயணிகளை இரத்மலானைக்கும் யாழ்ப்பாணத்திற்க்குமிடையில் நகர்த்தி உள்நாட்டு விமான போக்குவரத்தில் அபிவிருத்திக்கு அவர்கள் பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

சிறிலங்கா எயார் லைன்ஸ் சுற்றுலாத்துறை கைத்தொழிலின் அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பொன்றினை வழங்கி 2012 காலப்பகுதியில் அவர்களது எயார் ரக்ஸி (மிதப்பு விமானம்) செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட தயா ஏவியேஷன் கம்பனியானது வருடம் பூராகவும் அவர்களது தனியார் மற்றும் வர்த்தக செயற்பாடுகளை வழங்கி வந்துள்ளது.

*நிலையான இறக்கையுடைய உள்நாட்டுச் செயற்பாடுகள்*

| பிரிவு | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| இரத்மலானை - யாழ்ப்பாணம் | 986 | 88 | 2,734 |
| யாழ்ப்பாணம் - இரத்மலானை | 1,256 | 56 | 2,588 |
| இரத்மலானை - திருகோணமலை | 39 | 83 | 52 |
| திருகோணமலை - இரத்மலானை | 23 | 47 | 62 |

## உலங்கு வானூர்தி மற்றும் பலூன் செயற்பாடுகள்

யூன் 2004 இல் உலங்குவானூர்தி செயற்பாடுகளை ஆரம்பித்தவரை டெக்கான் ஏவியேஷன் கம்பனியானது நாட்டின் பலதரப்பட்ட பயண இலக்குகளுக்கு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தது. கொஸ்மொஸ் ஏவியேஷன் குறித்தவருடத்தில் உலங்குவானூர்திச் செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன் 2011 இன் இறுதியில் உலங்குவானூர்தி செயற்பாடுகளை முன்னெடுத்த செனொக் ஏவியேஷன் தமது செயற்பாடுகளை தொடர்ந்திருந்தது.

பலூன் செயற்பாடுகள் பிரதேசங்களில் சுற்றுலாத்துறையின் மேம்படுத்தலில் பங்களிப்பினை வழங்கும் தம்புள்ள மற்றும் அகுங்கல்ல போன்ற சுற்றுலாத்துறை பிரதேசங்கில் தற்போது நடாத்தப்பட்டு வருகிறது


| வானூர்தியின் வகை | பறப்புக்களின் மொத்த எண்ணிக்கை | | பறப்பு மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை | | பிரயாணித்த பயணிகளின் மொத்த எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 |
| ஹெலிகொப்டர் | 517 | 596 | 738 | 884.2 | 1809 | 2130 |
| பலூன் | 195 | 141 | 190 | 142 | 1274 | 947 |

## பிரயாண முகவர்கள்


1992 இன் 55 ஆம் இலக்க வான்செலவு (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகளின் படி இலங்கையில் உள்ள அனைத்து பிரயாண

முகவர்களும் CAASL வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டப்படுவதுடன், வருடாந்த அடிப்படையில் அவற்றை புதிப்பித்து கொள்ளவும் வேண்டப்படுகின்றனர். 2012 இல் முகவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளது மேலும் முக்கியத்துவம் மிக்க விடயமாக விரைவான கீழ்கட்டுமான வசதிகளுடன் நாட்டின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் பிரயாண முகவர் நிலையங்கள் அதிகரித்துள்ளதுடன், இப் பயண முகவர்களால் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.


**அனைத்து ஊழியர்கள்**




**நிரந்திர ஊழியர்கள்**




**தற்காலிக ஊழியர்கள்**




## இருதரப்பு வான் சேவைகள் பேரம்பேசல்கள்

ஒப்பந்தமொன்று ஜப்பான் மற்றும் இலங்கைக்கு இடையில் நரிரா விமான நிலையத்திற்கு குறித்தொதுக்கப்பட்ட இலங்கை நாட்டு விமான சேவைகள் அதிகபடியான பறப்புக்களை ஏற்படுத்த வாய்ப்புக்களை வழங்குவதனூடான இரு நாடுகளுக்கிடையிலான செயற்பாடுகளில் மேலதிகமான தாராளமயமாக்கலினை ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் கைச்சாத்திட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் இவ் உடன்படிக்கை உள்நாட்டு இணைக்கப்பாட்டின் அடிப்படையிற் கொண்ட விமான சேவைக்கான (Code Sharing) வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

## விமான சேவை ஒதுக்கீடு மற்றும் கட்டணங்கள் கணிப்பீடுகள் கற்கைநெறி

2009 இல் ஆரம்பிக்கப்பட்ட விமான சேவை ஒதுக்கீடு மற்றும் கட்டணங்கள் கணிப்பீட்டுக்கான கற்கை நெறியானது பிரயாணத்தை தொடர்ந்து வழங்குவதில் நிலையான செயல்முறை வகுக்கத்தக்கவாறு, 2012 இல் 5வது மற்றும் 6வது மாணவர்கள் தொகுதிகள் அவர்களது கற்கைநெறியினை வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தன. குறிப்பிடப்பட்ட இரண்டு தொகுதிகளில் இருந்து 29 மாணவர்கள் தமது கற்கைநெறியினை நிறைவுசெய்திருந்தனர்.

## SLOT கூட்டிணைவு

BIA இல் SLOT ஒதுக்கீடு சிவில் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நடாத்தப்படும் SLOT வரையறைகளின் படி இடம்பெறுகின்றது. BIA இல் அமைந்துள்ள கீழ்க் கட்டுமான வசதிகளைக் கருத்திற் கொண்டு, SLOT குழு கொடுக்கப்பட்ட எந்தவொரு மணித்தியாலத்திலும் பத்து (10) வானூர்திப் புறப்பாடுகளையும், பன்னிரண்டு (12) வானூர்தி உள்வருகைகளையும் அனுமதித்துள்ளது.

## பொது விமானப் போக்குவரத்து விருத்தி

பொது விமானப் போக்குவரத்து விருத்தியை கருத்திற் கொண்டதான செயற்பாடுகள் வான் போக்குவரத்து பகுதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெப்ப பலூன் செயற்பாடுகளுக்கு மேலாக, வர்த்தக அடிப்படையிலான ஏனைய பொழுது போக்கு விமானப் போக்குவரத்து செயற்பாடுகளை முன்னெடுக்க விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

மிகக் குறுகிய எதிர்காலத்தில் ஒரு வர்த்தக முயற்சியை விருத்தி செய்யும் நோக்குடன், கொக்கல, சிகிரியா, புத்தளம் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, யாழ்ப்பாணத்திலும் நுவரெலியாவிலும் தனியார் பரா மோட்டோஸ் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் வரையறுக்கப்பட்ட ஸ்கை கிளப் (தனியார்) கம்பனியால் முதன் முதலாக இலங்கைக்கு பரா மோட்டரிங் அறிமுகஞ்செய்யப்பட்டது.

கற்ப்பிட்டி பிரதேசத்தில் செயற்படுத்துவதற்கான புதிய பரா மோட்டோஸ் பிரதேசமொன்று அனுமதிக்கப்பட்டது. உள்நாட்டவருக்குச் சொந்தமான இரண்டு அல்ட்ரா - லைற் வானூர்திகளுடன் தனியார் செயற்பாடுகளுக்கான அனுமதிக்கப்பட்டது. ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட பிரதேசங்களுக்கான நீர்கொழும்பு, களுத்துறை, மற்றும் கட்டுக்கிருந்தக்கு மேலதிகமாக நாவலவில் தன்னியக்க கட்டுப்பாடு உடைய நவீன மாதிரிகை வானூர்திக்கான பறத்தலுக்கான புதிய பிரதேசமொன்று அனுமதிக்கப்பட்டது.

## நுகர்வோர் முறையீடுகளை கையாளல்

முரண்பாட்டினை தீர்ப்பதன் மூலம் கைத்தொழிலுக்கு சேவையாற்றுவதை தொடர்ந்து மேற்கொள்ளும் நுகர்வோர் விவகாரங்களை அதிகாரசபையுடன் இணைந்து 2011 இல் நுகர்வோர் முறையீடுகளை கையாளற் பொறிமுறையானது விருத்தியாக்கப்பட்டது. குறித்த பகுதியால் விமான சேவைகள் மற்றும் பயண முகவர்களுக்கான செய்யப்பட்ட 18 முறையீடுகள் கையாளப்பட்டன. மேலும் CAASL வான் பயணம் தொடர்பில் சுற்றுலா பிரயாணிகளின் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகளை கையாளுவதற்க்கு சுற்றுலாத்துறை பொலிசாருக்கு உதவிசெய்து இருந்தது.

## வான்போக்குவரத்து கைத்தொழில் /வர்த்தகத் திணைக்களத்தில் அக்கறையுடையோருடனான சந்திப்புக்கள்

குறித்த பகுதியானது வான் போக்குவரத்து கைத்தொழிலின் ஒரு சாதகமான விருத்தியினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு வர்த்தக திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனம் IATA முகவர் அமைப்புடன் இலங்கை பயண முகவர் அமைப்பு மற்றும் விமானசேவைப் பிரதிநிதிகளின் இலங்கை அமைப்பு மற்றும் விமானசேவை பிரதி நிதிகளின் சபை போன்ற கைத்தொழிலில் அமைப்புகளுடன் ெதொடர்ச்சியான சந்திப்புக்களை மேற்கொண்டிருந்திருந்தது.

## பட்டதாரி பயிலுநர் மாணவர்களுக்கான உள்ளக பயிற்சி

மீளாய்வுக்கு உட்பட்ட காலத்தில் CAASL இல் ஆறு மாதங்களுக்கான கற்றலின் போதான பயிற்ச்சியளித்தலில் மொரட்டுவை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த தலா ஒரு மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்த பயிற்சியளித்தல் திட்டமானது குறித்த பகுதியில் முன்னெடுக்கப்பட்டதுடன், கல்விச் சுற்றுலாவொன்று ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒருங்கிணைத்ததன் மூலம் அப் பட்டதாரி பயிலுநர் மாணவர்கள் குறித்த கைத்தொழில் தொடர்பாக விழிப்பூட்டல் செய்யப்பட்டனர். வான்போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்களுக்கான பிரதிப்பணிப்பாளர் அவர்களது மேற்பார்வையாளராகத் தொழிற்பட்டார். இதுவரையிலும் CAASL ஆனது மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் பொருட் கையாள்கை முகாமைத்துவத் துறையிலிருந்து எட்டு (8) மாணவர்களையும் கொழும்பு பல்கலைகழகத்தில் இருந்து நான்கு (4) மாணவர்களையும் உள்வாங்கி உள்ளது.

# மனித வளங்கள் மற்றும் அலுவலகத் முகாமைத்துவ பகுதி

## CAA இன் 10வது ஆண்டு நிறைவு

CAA ஸ்தாபிக்கப்பட்டு 27.12.2012 இல் 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதன் தொடர்ச்சியானது அதே ஆண்டு காலத்தில் இலங்கையின் விமானப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டதன் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களும் அமைகின்றன. இவ்விழாவின் பிரதான நிகழ்வானது அதிமேதகு ஜனாதிபதி அவர்களில் பிரசன்னத்துடன் அலரி மாளிகையில் இடம் பெற்றது. அது மட்டுமன்றி CAA இன் சேவா வனிதா அலகானது இரத்ததான நிகழ்வொன்றினையும் ஏற்பாடு செய்திருந்ததுடன், CAA ஆனது கடந்த நூறு ஆண்டு காலப்பகுதியில் இடம் பெற்ற முக்கியத்துவம் மிக்கதான அடைவனவுகளை உள்ளடக்கிய சிறு நூலொன்றினை வெளியிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.


## ஊழியரிடல்

தற்போது ஒரு (01) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், இருபத்தி நான்கு (25) சிரேஷ்ட நிறைவேற்ற உத்தியோகத்தர்கள், முப்பத்தைந்து (35) நிறைவேற்று உத்தியோத்தர்கள், ஜம்பத்து நான்கு (55) செயற்பாட்டு உத்தியோகத்தர்கள், மற்றும் முப்பத்து மூன்று (33) உதவி ஊழியர்கள் உள்ளடக்கிய அதன் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களில் நூற்று அறுபத்தாறு (166) நிலைகளை CAASL தற்போது தன்னகத்தே கொண்டுள்ளது. ஒன்பது (09) புதிய நியமனங்கள் உள்ளடங்கலாக 2012 இறுதியில் மொத்தமாக நூற்றுநாற்பத்தேழு (148) ஊழியர்கள் CAASL இல் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர்.

## ஊழியர் நலன்புரி

CAASL ஆனது ஊழியர்களுக்கும் அவர்களது நெருங்கிய

# தொழிற்பாட்டு பொறுப்புக்கூறல் அட்டவணை இலங்கை சிவில் போக்குவரத்து அதிகாரசபை




கூட்டாண்மைப் பிரிவு

குடும்ப அங்கத்தவருக்கும் வெகுமதிகளுடன் கூடிய ஒரு நலன்புரி வசதியாக மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை முன்னெடுத்திருந்தது. மே 2011 இல் ஆரம்பமாகிய காலப்பகுதியில் ரூபா 1,277,655.71 பெறுமதி மிக்க மருத்துவ காப்பீட்டு உள்ளக வசதிகளையும் மற்றும் ரூபா 2,541,819.04 பெறுமதியான அதன் வெளியக வசதிகளையும் பெற்று மொத்தமான நூற்று இருபத்தி ஆறு (126) ஊழியர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

அந்த மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கு மேலாக CAASL ஆனது வேலையில் இடம் பெறக்கூடிய ஆபத்துக்களை ஈடு செய்து கொள்ளும் பொருட்டு விபத்து காப்புறுதியின் கொள்கையொன்றினை பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தது.

ஊழியர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் பொழுது இருபத்தியேட்டு (28) ஊழியர்களுக்கு கடன்களாக ரூபா 3,705,886.00 இனையும் நான்கு 04 ஊழியர்களுக்கு கடன்களாக 5,145,500.00 இனையும் மீளாய்விற்கு உட்படுத்திய காலத்தில் வழங்கியிருந்தது.

இதன் மறுபக்கத்தில் 2012 இல் மொத்தம் ரூபா 8,794,610.00 தொகை மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிளின் கொள்வனவு செய்வதற்கு கடனாக வழங்கப்பட்டது. மேலும் ஊழியர் ஒருவருக்கு மொத்தமாக ரூபா 380,700.00 தொகை முச்சக்கர வண்டி கொள்வனவிற்கென வழங்கப்பட்டுள்ளது.

## பயிற்சியளித்தல், கருத்தரங்குகள் வேலைப்பட்டறைகள், கூட்டங்கள், மகாநாடுகள்.

CAASL இன் இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டும், தொழில்சார் மற்றும் தகுதிவாய்ந்த ஊழியர்களுடனான பொருத்தமாக வளங்களை வைத்து கொள்ளும் பொருட்டும், குறித்த வருடத்தில் CAASL இன் ஊழியர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் கருத்தரங்குகள் வேலைப்பட்டறைகள் மற்றும் மாநாடுகள் என்பவற்றின் மீது மொத்தமான ரூபா 36,928,683.25 செலவு செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டப் பாதீட்டிலும் 2012 ஆண்டுக்கான பயிற்சியளித்தல் திட்டத்திலும் இனங்காணப்பட்டவாறு பயிற்சியளித்தலின் தேவைப்பாடுகள் குறித்த வருடாந்த பாதீட்டு ஒதுக்கங்களுள் அமையும் வகையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

407 மனித நாட்களை உள்ளடக்கியதாக அனைத்து நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் விமானபோக்குவரத்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சிகள், கருத்தரங்குகள், வேலைப்பட்டறைகள், கூட்டங்கள், மற்றும் மாநாடுகளுக்கான சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய வகையில் மொத்தத்தில் எண்பது (80) மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. 891 மனித நாட்களை உள்ளடக்கியதாக நிறைவேற்று உத்தியோத்தர்கள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி, கருத்தரங்கு, வேலைப்பட்டறைகள், கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கான சந்தர்ப்பங்கள் உள்ளடக்கிய 117 உள்நாட்டு நடவடிக்கைகள் வழங்கப்பட்டன. இதன் பிரகாரம் 1,298 மனித நாட்களை உள்ளடக்கிய 197 பயிற்சிகள், கருத்தரங்குகள், வேலைப்பட்டறைகள், கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கான சந்தர்ப்பங்களை மீளாய்விக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் வழங்கப்பட்டன.

## தொழில்நுட்ப நூலகம்

தொழில்நுட்ப நூலகத்தின் பிரதான நோக்கமாக காணப்படும் விமானப் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட குழுவின் அறிவாற்றல் மேம்பாட்டிக்கு வசதி வழங்கும் பொருட்டு CAASL நிறுவனமானது அதனது ஊழியர்கள் மற்றும் விமானப் போக்குவரத்து கைத்தொழிலில் ஈடுபடும் நபர்கள் என இருதரப்பினர் கொண்ட எண்ணிக்கையுடைய பயணாளிகள் வசதியளித்து வருகின்றன.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் வெளிநபர் பயனாளிகளின் எண்ணிக்கை தொடர்பில் 23% வளர்ச்சி ஒன்றினைப் பதிவாக்கியுள்ளது. இந் நிறுவனமானது ஒரு நிறுவனமாக மட்டுமன்றி அறிவாற்றல் நிறுவனமாகவும் சேவையற்றுகின்றது. 2012 இல் இந் நிறுவனத்திற்கு புதிய வெளியீடுகளை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா 181,147.00 செலவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஊழியர்களிடையே தகவல்களின் பரம்பலை உருவாக்கிக் கொள்ளும் நோக்குடன் பகுதிகளுக்குரிய நிறுவனங்கள் பிரதான தொழில்நுட்ப நிறுவனத்தினால் பராமரிக்கப்படுகின்றது.

## CAASL இணையத்தளம்

CAASL இணையத்தளமானது www.caa.lk இல் மேம்படுத்தி மேற்கொள்ளப்படுவதுடன், புதிய தோற்றத்துடன் கூடிய திருப்திகரமான முகாமைத்துவ முறைமையொன்று புதிய தொழிநுட்ப அறிமுகத்துடன் மேம்படுத்தப்பட்டது. புதிய தேவைபாடுகளை கருத்தில் கொண்டு தகவல்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டதுடன் நடைமுறை தகவல்கள் சேர்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட தகவல்களுடன் முன்னெடுக்கப்பட்டது. இணையத்தளத்தில் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் முன்னேடுக்கப்பட்டன.

## CAASL இன் கூட்டிணைக்கப்பட்ட திட்டம் மற்றும் வேலைத்திட்டம்

2011-2013 ஆண்டுற்கான கூட்டிணைக்கப்பட்ட திட்டமானது தயாரிக்கப்பட்டதுடன், அவற்றை முழுமைப்படுத்துவதற்கான படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. பிரதான செயற்பாடுகளில் சில, அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் CAA

நடைமுறைகள் முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் சிறப்பான பெறுபேற்றினை வெளிப்படுத்தும் பொருட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் பிரிவுகள், பகுதிகள், மற்றும் அலகுகளின் வருடாந்த வேலைத்திட்டங்களானவை செயற்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கான கால வரையறைகள் விருத்தியாக்கப்பட்டன.

## அலுவலகப் பராமரிப்பு தொடர்புபட்ட செயற்பாடுகள்


2012 காலத்திலும் CAA அதே இடத்தில் தனது தலைமையகத்தினை செயற்படுத்தி வந்தது. 2012 காலத்தில் அலுவலக கட்டடமானது சரியான முறையில் பராமரிக்கப்பட்டதுடன், கவர்ச்சிமிக்க வெளித்தோற்றம் ஒன்றினை உருவாக்கி உயர் நிலையில் பேணப்பட்டது. 2012 இன் முதற் காலாண்டு காலத்தில் இரத்மலானையில் அமைந்துள்ள அலுவலகக் கட்டடங்கள் ரூபா 1,768,500.00 + பெறுமதி சேர் வரி (12%) மீள்புனரமைப்பு செய்யப்பட்டது.

## CAASL இன் தன்னியக்கம்

உள்ளக தொடர்பாடலில் MS பரிமாற்றல் முறைமைகள் மீது அதிகளவில் தங்கியிருக்கும் தகவற் தொழிநுட்ப முறைமைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் CAA தொழிற்பட்டு வந்தது. மேலும் CAA அதன் பரிசோதகர்கள் நாட்டிற்கு வெளியில் இருக்கும் போதிலும் கூட தொடர்பு வைத்திருக்கக் கூடியதான பரிசோதகர்களுக்கான இலத்திரனியல் சரிபார்த்தல் பட்டியலினை அறிமுகப்படுத்தியது. தனித்துவம் மிக்க விஷேட நிதி முகாமைத்துவ முறைமையொன்று CAASL இன் நிதி முகாமைத்துவ பகுதியால் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டுள்ளது.

## நிதி முகாமைத்துவப் பகுதி

### செயற்திட்ட பாதீடு




வழிப்படுத்தலும் முகாமைத்துவமும், வான்செலவு சேவைகள், விமானபறப்பு பாதுகாப்பு, மற்றும் கூட்டாண்மை என்னும் நான்கு பிரதான வேலைத்திட்டத்தின் கீழ் உறுதிப்படுத்திய வருடத்திற்கான செலவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் 2012 இற்கான செயற்திட்டப் பாதீட்டினை CAA தயாரித்தது. ரூபா 1,077.9 மில்லியனைக் கொண்ட மதீப்பீட செய்யப்பட்ட செலவுகளுக்கு எதிரானதாக, ரூபா 558 மில்லியன் எதிர்பார்க்கப்படும் வருமானம் அமைந்திருந்தது. மதிப்பிடப்பட்ட செலவுகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 96% குறைவு ஒன்றினை வெளிப்படுத்தியிருந்ததுடன், எதிர்வு கூறப்பட்ட வருமானமானது 2011 இல் எதிர்வு கூறப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 25% குறைவு ஒன்றினை வெளிப்படுத்தியிருந்தது.

## CAA இன் வருமானம்

CAA இன் வருமானமானது முன்னைய வருட உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும் போது 31% அதிகரிப்பொன்றினைக்


காட்டியது. குறிப்பிட்ட அதிகரிப்பானது கடல் கடந்த விற்பனை மிகை கட்டணம், ஏற்றல்வரியின் மீதான சேவைக்கட்டணம், மற்றும் நியதிச்சட்ட சேவைகள் மீது எழுந்த வருமானத்தில் இருந்து காணப்பட முடியும்.


## முகாமைத்துவ தகவல்கள்

CAA வாடிக்கையாளருக்கான இலத்திரனியல் அட்டைக் கொடுப்பனவின் ஏற்றுக் கொள்ளலுக்கு வசதியளித்தல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையின் கிடைப்பனவுத் தன்மையை உறுதி செய்து கொள்ளும் வகையில் 2012 காலப்பகுதியில் முழுமையான முறைமையொன்று வெற்றிகரமாக விருத்திசெய்யப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகின்றது. நிதி முகாமைத்துவ தகவற் கூற்றுகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLAS) இற்கு இணங்க முன்னைய ஆண்டுகளில் தயாரிக்கபட்ட போதிலும், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

## வாகன அணி முகாமைத்துவம்

வாகன அணியில் இரண்டு புத்தம் புதிய க(C)ப்ஸ் ரக வாகனங்களும், மினி பஸ் வண்டியொன்றும் இணைத்துக் கொள்ளப்பட்டதன் மூலம் இவ் ஆண்டு காலத்தில் எந்தவொரு இடையூறும் ஏற்படாத வகையில் நியதிச்சட்டக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான இடையூறற்ற போக்குவரத்து வசதியளிப்புகளின் கிடைப்பனவுத் தேவையுடனான பெரியதொரு வாகன அணி அறிமுகஞ்செய்யப்பட்டது.




கூட்டாண்மைப் பிரிவு

# செயற்சாதனைச் சுருக்கம் - 2012

## CAASL இன் செயற்சாதனை - 2012

| | 2012 | 2011 |
|---|---|---|
| ஆபத்தற்றதன்மை மற்றும் பாதுகாப்பு மேற்பார்வை தொடர்பான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் | | |
| (வினியோகிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள், அறிவித்தல்கள், விதிகளின் எண்ணிக்கை) | | |
| வான் போக்குவரத்து | 05 | - |
| நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான ஆரம்பநிலைச் சான்றுப்படுத்தல்கள் | | |
| விமான சேவை நிறுவனங்கள் | 02 | 01 |
| பராமரிப்பு நிறுவனங்கள் | 10 | 03 |
| பறத்தற் பயிற்சிநெறிப் பாடசாலைகள் | 0 | 01 |
| விமானிகள் | 197 | 273 |
| வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்கள் | 16 | 09 |
| வானூர்தி பராமரிப்புப் பொறியியலாளர்கள் | 0 | 04 |
| வானூர்திப் பராமரிப்பாளர் அனுமதிப்பத்திரம் | 153 | 56 |
| விமானப்பறப்பு அனுப்புநர்கள் | 0 | 01 |
| விமானப்பறப்பு பயிற்றுவிப்பாளர்கள் | 7 | 10 |
| உதவி விமானப்பறப்பு பயிற்றுவிப்பாளர்கள் | 4 | 11 |
| தளப் பயிற்றுவிப்பாளர்கள் | 10 | 25 |
| வானறைக்குழு அங்கத்தவர்கள் | 187 | 252 |
| சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் சோதனைகள் | | |
| ராம்ப் சோதனைகள் - வான்தகைமை | 102 | 65 |
| ராம்ப் சோதனைகள் - செயற்பாடு | 36 | 105 |
| விமானத்தளச் சோதனைகள் | 19 | 20 |
| வான் செலவு சேவை வழங்குநர்களின் சோதனைகள் | 23 | 36 |
| பராமரிப்பு நிறுவன சோதனைகள் | 42 | 10 |
| வானூர்திப் பறத்தற் பாடசாலைகள் சோதனைகள் - தனிநபர் அனுமதிப்பத்திரங்கள் | 14 | 13 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு சோதனைகள் | 42 | 0 |
| பறப்பு மாதிரிகைகள் மீதான சோதனைகள் | 02 | 02 |
| பறத்தலின் போதான சோதனைகள் | 04 | 12 |
| ஆபத்தான பொருட்கள் மீதான சோதனைகள் | 18 | 35 |
| நிலைய வசதிகள் பற்றிய சோதனைகள்- வான்தகைமை | 0 | 10 |

| | | |
|---|---|---|
| நிலைய வசதிகள் பற்றிய சோதனைகள்- செயற்பாடுகள் | 02 | 04 |
| நிறைவு செய்யப்பட்ட கணக்காய்வுகள் | | |
| வான்செலவு சேவைகள் | 01 | 0 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு | 01 | 0 |

## பகுதி தனிச்சிறப்புச் செயற்பாடுகள் - 2012

| வகை | 2012 | 2011 |
|---|---|---|
| **வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவம்** | | |
| நடைபெற்ற அதிகாரசபையின் கூட்டங்கள் | 13 | 09 |
| நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டம் | 08 | 04 |
| நடைபெற்ற ஊழியர் சபைக் குழுக் கூட்டம் | 02 | 09 |
| நடைபெற்ற அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் குழுக் கூட்டங்கள் | 06 | 05 |
| நடைபெற்ற கைத்தொழில் ஆலோசனைக் கூட்டம் | 201 | 169 |
| வெளி நிறுவனங்கள் / நபர்களின் சந்திப்புகள் | 249 | 248 |
| கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை | 5839 | 6216 |
| **விமான போக்குவரத்துப் பாதுகாப்புப் (AV-SEC) பகுதி** | | |
| விமான நிலைய நுழைவு அனுமதிப் பத்திர வழங்குகைக்கான பரிந்துரை | 19 | 11 |
| விமானத்தில் பயணிக்கும் போது / சரக்குப் பொருளினுள் போர்ச் சாதனங்களைக் கையாள்வதற்கான அனுமதி | 171 | 77 |
| விமானத்தில் விமானியுடன் பயணிப்பதற்காக அனுமதி | 01 | 15 |
| தேசிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தினைத் திருத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல். | 29 | - |
| அனுமதியளிக்கப்பட்ட புதிய செயற்பாட்டாளர் வழிகாட்டல் ஆவணங்கள் | 0 | 04 |
| ஏற்கனவேயுள்ள செயற்பாட்டாளர் வழிகாட்டல் ஆவணங்கள் மீளாய்வு /திருத்தங்களுக்கு உட்படுத்துதல் | 29 | 04 |
| ஏற்கனவேயுள்ள விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அறிவித்தல்கள் மீளாய்விற்கு உட்படுத்துதல். | 07 | 0 |
| நடாத்தப்பட்ட பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள் | 36 | 25 |
| கைத்தொழிலுக்காக நடாத்தப்பட்ட பாதுகாப்புப் பயிற்சிப் பாடநெறிகள் | 05 | - |
| பாதுகாப்பு வெளிப்படுத்துனர்களை சான்றுப்படுத்துதல் | 429 | 229 |
| பங்கேற்ற பாதுகாப்புப் பயிற்சிப் கற்கைநெறி / கருத்தரங்கு | 02 | 03 |
| நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரீட்சைகள் | 07 | 35 |
| வழங்கப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் வெளிப்படுத்துகைகள் | 01 | 04 |
| **விசேட செயற்றிட்டங்கள் (SP) பகுதி** | | |
| COSCAP - SA ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகள் | 11 | 46 |
| அமுல்படுத்தப்பட்ட விஷேட செயற்றிட்டங்கள் | 03 | 03 |
| நடாத்தப்பட்ட CADEC வேலைத்திட்டங்கள் | 12 | 18 |
| **வான் செலவுச் சேவைகள் (ANS) பகுதி** | | |
| உயரிய கட்டிடங்களை அமைப்பதற்கான அனுமதி | 653 | 648 |
| NOTAM வழங்குவதற்கான அனுமதிகள் | 264 | 206 |
| வானியற் தகவற் சுற்றறிக்கைகளை வழங்கல் | 09 | 12 |
| AIP குறைநிரப்புக்களை வழங்கல் | 08 | 08 |
| மேலாகப் பறப்பதற்காக அங்கீகாரம் வழங்கல் | 1030 | 940 |
| அட்டவணைப்படுத்தப்படாத விமானங்களுக்காக தரையிறக்கும் அனுமதி | 655 | 630 |
| பங்கேற்ற பயிற்சிப் கற்கைநெறிகள் / கருத்தரங்கு | 34 | 19 |
| வழங்கப்பட்ட புதிய வழிகாட்டல் ஆவணங்கள் | 0 | 0 |
| ஏற்கனவேயுள்ள வழிகாட்டல் ஆவணங்களை மீளாய்விற்குட்படுத்துதல் | 0 | 01 |
| வழங்கப்பட்ட நீர் சார்ந்த விமானத்தளச் சான்றிதழ்கள் | 0 | 15 |

| | | |
|---|---|---|
| நடாத்தப்பட்ட விமானத்தளச் சோதனைப்பணிகள் | 19 | 20 |
| நாடாத்தப்பட்ட வானியல் சேவை (ATS) சோதனைப்பணிகள் | 24 | 36 |
| நடாத்தப் பட்ட ATC தரப்படுத்தற் பரீட்சைகள் | 23 | 06 |
| ATC மாதிரிகை மீதான பரீட்சை | 05 | 17 |
| மொழித் தேர்ச்சிப் பரீட்சை | 54 | 19 |
| விரிவுரைகள் (COSCAP உதவிகள்) | 0 | 05 |
| | | |
| **தனியார் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் பகுதி (PEL)** | | |
| மாணவ விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 155 | 115 |
| தனியார் விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 94 | 98 |
| வர்த்தக விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 264 | 317 |
| விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 414 | 382 |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 44 | 81 |
| வானூர்தியின் பராமரிப்பு பொறியியல் அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 113 | 173 |
| வானூர்தியின் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 397 | 221 |
| வானூர்தியின் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் - வகைத் தரங்கள்- வழங்குகைகள் | 38 | 0 |
| வானூர்தியின் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் - வகைகள்- வழங்குகைகள் | 14 | 0 |
| விமான அறை ஊழியர் சான்றுப் பத்திரம் - வழங்குகைகள் | 225 | 252 |
| விமான அறை ஊழியர் சான்றுப் பத்திரம் - மீள் வழங்குகைகள் | 50 | 0 |
| வானூர்திச் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரம் - வழங்குகைகள் | 00 | 01 |
| வெளிநாட்டு அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியாக்கல்கள் (விமானி) - (வழங்கல் + புதுப்பித்தல்) | 73 | 97 |
| சுதந்திரமான பலூன் விமானி அனுமதிப் பத்திரம்- (வழங்கல் + புதுப்பித்தல்) | 05 | 01 |
| விமானப் பறப்புப் பொறியியலாளர் அனுமதிப் பத்திரம் - (வழங்கல் + புதுப்பித்தல்) | 00 | 01 |
| விமானப் பறப்பு வழிப்படுத்துனர் அனுமதிப் பத்திரம் - (வழங்கல் + புதுப்பித்தல்) | 00 | 01 |
| வெளிநாட்டு அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியாக்கல்கள் (AME) - (வழங்கல் + புதுப்பித்தல்) | 11 | 19 |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம் மற்றும் விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரம் வழங்குகைகள் மீதான விமான வகைத் தரப்படுத்தல்கள் | 140 | 146 |
| பறத்தல் பயிற்றுவிப்பாளர்கள்/உதவிப் பறத்தல் பயிற்றுவிப்பாளர்கள் தரப்படுத்தல்கள் (வழங்கல் + புதுப்பித்தல்) | 28 | 21 |
| விமான பறப்புப் உபகரணத் தரப்படுத்தல்கள் | 02 | 21 |
| பறத்தற் பாடசாலை அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் | 06 | 04 |
| தளப் பயிற்றுனர்அனுமதிப் பத்திரம் | 00 | 06 |
| தளப் பயிற்றுனருக்கான அனுமதிகள் | 12 | 24 |
| வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் தரப்படுத்தல் | 100 | 103 |
| பறத்தற் பாடசாலை அனுமதிப் பத்திரம் | 00 | 01 |
| AME அனுமதிப்பத்திர வகை - வழங்குகைகள் | 01 | 07 |
| வெளிநாட்டு விமானிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான அனுமதிகள் | 62 | 56 |
| வீசாவுக்கான பரிந்துரை வழங்கல் | 92 | 92 |
| வெளிநாட்டு நிறுவனத்திலிருந்தான தனிநபர் அனுமதிப் பத்திரங்களை வழங்கல் | 349 | 125 |
| NIB அனுமதிகளை வழங்குதல் | 359 | 373 |
| வைத்தியப் பரிசோதனை | 866 | 1350 |
| பரீட்சைகள் | | |
| 1. தனிநபர் விமானி அனுமதிப்பத்திரப் பரீட்சை | 89 | 120 |
| 2. விசேட வான் சட்டப் பரீட்சை | 06 | 10 |

| | | | |
|---|---|---|---|
| 3. | AME பரீட்சை | 00 | 02 |
| 4. | AML பரீட்சை | 02 | 03 |
| | | 411 விண்ணப்பதாரி | 762 விண்ணப்பதாரி |
| 5. | CPL/IR (விமானம்) பரீட்சை | 06 | 15 |
| 6. | CPL (ஹெலிகொப்டர்) பரீட்சை | 00 | 01 |
| 7. | விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரப் பரீட்சை | 56 | 13 |
| 8. | விமானப் போக்குவரத்து விமானி (ஹெலிகொப்டர்) அனுமதிப்பத்திரப் பரீட்சை | 06 | 20 |
| 9. | விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரப் பரீட்சை (CAAUK) | 00 | 00 |
| 10. | வெளிநாட்டு அனுமதிப் பத்திர மாற்றீட்டுப் பரீட்சை | 04 | 57 |
| 11. | ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை | 117 | 124 |
| 12. | காலங்கடந்த அனுமதிப் பத்திரத்தை மீள்செய்முறைப்படுத்தலுக்கான பரீட்சை (CPL/IR) | 12 | 02 |
| 13. | ரேடியோ தொலைபேசி செய்முறைப் பரீட்சை | 55 | 31 |
| 14. | உதவி விமானப் பறப்புப் பயிற்றுவிப்பாளர் பரீட்சை | 00 | 04 |
| 15. | விமானப் பறப்புத் தேர்ச்சி பரீட்சகர் பரீட்சை | 00 | 03 |
| 16. | பரீட்சைக்கான PPL பரீட்சை | 02 | 02 |
| | | 411 விண்ணப்பதாரி | 762 விண்ணப்பதாரி |

## செயற்பாடுகள் (OPS)

| | | |
|---|---|---|
| பங்குபற்றிய பயிற்சிப் கற்கைநெறி / கருத்தரங்குகள் | 13 | 07 |
| வழங்கப்பட்ட புதிய வழிகாட்டல் ஆவணம் | 03 | - |
| விசேட செயற்பாடுகள் | 11 | 10 |
| விமான அறை ஊழியர்கள் அதிகாரமளித்தல் | 266 | 252 |
| வெளிநாட்டு வான் செயற்பாட்டுச் சான்றிதழ் - வழங்கல் | 2 | 05 |
| வெளிநாட்டு வான் செயற்பாட்டுச் சான்றிதழ் - புதுப்பித்தல்கள் | 26 | 27 |
| அபாயகரப் பொருட்களை நகர்த்துவதற்கான அனுமதி - வழங்கல் | 0 | 01 |
| அபயாகரப் பொருள் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள்- புதுப்பித்தல் | 13 | 10 |
| DCP - வழங்கல் | 09 | 05 |
| DCP - புதுப்பித்தல் | 23 | 22 |
| வான் செயற்பாட்டுச் சான்றிதழ் - வழங்கல் | 0 | 01 |
| வான் செயற்பாட்டுச் சான்றிதழ் - புதுப்பித்தல். | 08 | 07 |
| விமான மாதிரிகைகள் நிலையத்தின் வசதிகளை மேம்படுத்துவதற்கான அனுமதி வழங்கல் | | 01 |
| விமான மாதிரிகைகளைப் புதுப்பித்தல் | 05 | 10 |
| பரீட்சார்த்த அதிகாரமளித்தல் | 220 | 244 |
| முன்னெடுக்கப்பட்ட சோதனைச் செயற்பாடுகள் | 92 | 181 |
| பாதுகாப்பு நிகழ்வுகளுக்கான மறுதீர்வு | 02 | 0 |

## வான்தகைமை பகுதி (AW)

| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்ட புதிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அறிவித்தல்கள் | 0 | 01 |
| பங்குபற்றிய பயிற்சிப் கற்கைநெறி / கருத்தரங்கு | 06 | 05 |
| முன்னெடுக்கப்பட்ட சோதனைச் செயற்பாடுகள் | 102 | 56 |
| வானூர்திகளின் வான்தகைமைச் சான்றிதழ் - வழங்கல் | 08 | 16 |
| வானூர்திகளின் வான்தகைமைச் சான்றிதழ் - புதுப்பித்தல் | 40 | 28 |
| வானூர்தி பராமரிப்பு ஒழுங்கமைப்பு வேலைத்தள அங்கீகாரம் | 10 | 09 |
| வானூர்திகளைப் பதிவுசெய்யும் சான்றுப்பத்திரம் - வழங்கல் | 06 | 22 |
| வானூர்திகளைப் பதிவுசெய்யும் சான்றுப்பத்திரம் - புதுப்பித்தல் | 51 | 34 |

| | | |
|---|---|---|
| வசதிகள் பரிசோதனையுடன் கூடிய பராமரிப்பு ஒழுங்கமைப்பு அங்கீகாரம் | 42 | 57 |
| விமான சேவை நிகழ்வுகளைத் தீர்த்தல் | 32 | 38 |
| **விமான போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி (AT & LA)** | | |
| புதிய ஒழுங்குக் கோவை சட்ட வரைவு | 01 | 02 |
| பங்கேற்ற பயிற்சிக் கற்கைநெறி / கருத்தரங்கு | 02 | 02 |
| புதிய வழிகாட்டல் ஆவண உருவாக்கம் | 01 | 01 |
| ஏற்கனவேயுள்ள வழிகாட்டல் ஆவண மீளாய்வு | 01 | 01 |
| உள்நாட்டு பறப்பு அட்டவணை | 03 | 00 |
| மேற்கொள்ளப்பட்ட வான் போக்குவரத்து போக்குவரத்து வழங்குனா் மீதான சோதனைகள் | 18 | 04 |
| சா்வதேச வானூா்தி பறப்பு அங்கீகாரம் | 25 | 32 |
| தொழிநுட்பம் அல்லாத நிபுணத்துவ ஊழியா்களுக்கு வீசாப் பரிந்துரை | 16 | 11 |
| இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட விமானப் போக்குவரத்துக் கம்பனிக்காக வாடகை அனுமதிப் பத்திரம் | 08 | 06 |
| இலங்கையில் பதிவுசெய்துள்ள விமானப் போக்குவரத்துக் கம்பனிகளுக்கான அனுமதிப் பத்திரம் | 03 | 03 |
| வாடகை அனுமதிப் பத்திரம் - சா்வதேச செயற்பாடுகள் | 04 | 03 |
| வாடகை அனுமதிப் பத்திரம் - உள்நாட்டு நிரந்தரச் செயற்பாடுகள் | 06 | 05 |
| வான் போக்குவரத்து வழங்குநா்களுக்கான அனுமதிப் பத்திரம் | 450 | 405 |
| தனிநபா் செயற்பாட்டு அனுமதிப் பத்திரம் | 02 | 02 |
| கையொப்பமிடப்பட்ட புதிய வான் போக்குவரத்து உடன்படிக்கை | 00 | 01 |
| ஏற்கனவேயுள்ள வான் போக்குவரத்து உடன்படிக்கைகளின் மீள்பாா்வை | 02 | 14 |
| ஆண்டு இறுதியில் காணப்பட்ட “திறந்த ஆகாயம்” வான் சேவை உடன்படிக்கை | 06 | 06 |
| **மனிதவள மற்றும் அவலக முகாமைத்துவப் பகுதி (HROM)** | | |
| HROM தொடா்பாக வெளியிடப்பட்ட புதிய விழுமியங்கள் | 06 (அமுலாக்கல் நியமங்கள்) | 05 (அமுலாக்கல் நியமங்கள்) |
| HROM தொடா்பான சீா்திருத்தப்பட்ட விழுமியங்கள் | 02 | 03 |
| ஊழியா் / ஆட்சோ்ப்பு | 09 | 36 |
| மொத்தமாக ஒழுங்கு செய்த வெளிநாட்டு பயிற்சிகள் | 80 (407 மனித நாட்கள்) | 90 (486 மனித நாட்கள்) |
| மொத்தமாக ஒழுங்கு செய்த உள்நாட்டுப் பயிற்சிகள் | 117 (891 மனித நாட்கள்) | 135 (மனித நாட்கள்) |
| மொத்த ஊழியா்களின் எண்ணிக்கை | 147 | 148 |
| நடாத்தப்பட்ட பொது ஊழியா் கூட்டம் | 0 | 01 |
| நடாத்தப்பட்ட செயற்சாதனைக் மதிப்பீடுகள் | 70 | 68 |
| ஊழியா்களை ஓய்வுறுத்தல்கள் | 01 | 03 |
| வழங்கப்பட்ட ஊழியா் கடன்கள் வசதிகள் | ரூபா 18.02 மில். | ரூபா 23.9 மில். |
| நடாத்தப்பட்ட உள்நாட்டு வேலைப் பட்டறைகள் | 0 | 03 |
| தொழிநுட்ப நூலகங்களுக்கு சோ்க்கப்பட்ட புதிய ஆவணங்கள் | 137 | 117 |
| இணையத்தள மீளாய்வு | 13 | 12 (sent HROM) |
| மென்பொருள் மேம்பாடுகள் (இயந்திரங்கள்) | 08 | 460 |
| **நிதி முகாமைத்துவம் (FM)** | | |

| | | |
|---|---|---|
| சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் | ரூபா 977 மில். | ரூபா 744 மில். |
| மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் | ரூபா 606. மில். | ரூபா 315 மில். |
| ஊழியர் சம்பளத்தின் மொத்த நிதி | ரூபா 144. மில். | ரூபா 125 மில். |
| கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் | 03 | 05 |
| கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் | 09 | 74 |
| **உள்ளகக் கணக்காய்வு (IA)** | | |
| நடாத்தப்பட்ட கணக்காய்வுகள் | 34 | 15 |
| சமர்ப்பிக்கப்பட்ட கண்டுபிடிப்புக்கள் | 66 | 95 |
| **விமான விபத்து மற்றும் நிகழ்வு விசாரணை அலகு (AIU)** | | |
| அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் | 06 | 01 |
| அறிக்கையிடப்பட்ட விபத்துக்கள் | 00 | 00 |
| அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் | 137 | 114 |
| பிரயாணிகளுக்கு அல்லது ஊழியருக்கு கெடுதியான காயம் ஏற்பட்டமை | 00 | 00 |
| பிரயாணிகளுக்கு அல்லது ஊழியருக்கு இலகுவான காயம் ஏற்பட்டமை | 19 | 00 |
| வரைவு புதிய ஒழுங்குவிதிகள் உருவாக்கம் | 01 | 01 |
| பங்கேற்ற பயிற்சிக் கற்கைநெறி / கருத்தரங்கு | 01 | 01 |
| வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டல் ஆவணங்கள் | 00 | 01 |
| ஏற்கனவேயுள்ள வழிகாட்டல் ஆவணங்களின் மீளாய்வு | 01 | 01 |

## கைத்தொழிலின் செயற்சாதனை - 2012

| விமானப் போக்குவரத்து விபரங்கள் | 2012 | 2011 |
|---|---|---|
| சர்வதேச விமானப் போக்குவரத்து | | |
| பயணிகள் | 8,290,668 | 6,885,082 |
| புறப்பட்ட | 3,554,969 | 3,095,089 |
| தரையிறங்கிய | 3,590,122 | 3,079,126 |
| இடைத்தங்கல் | 1,145,577 | 710,867 |
| சரக்கு (மெற்றிக் தொன்கள்) | 174,645 | 158,572 |
| தருவிக்கப்பட்ட | 66,602 | 63,161 |
| அனுப்பப்பட்ட | 108,043 | 95,411 |
| வானூர்தி நகர்வுகள் | 48,734 | 43,673 |
| அட்டவணைப்படுத்தப்பட்ட பறப்புகள் | 46,616 | 41,891 |
| அட்டவணைப்படுத்தப்படாத பறப்புகள் | 2,118 | 1,782 |
| செயற்பாடுகளில் ஈடுபட்ட விமான சேவைக் கம்பனிகளின் எண்ணிக்கை | 40 | 36 |
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் | 30 | 28 |
| அட்டவணைப்படுத்தப்படாத சேவைகள் | 07 | 04 |
| அனைத்து சரக்கு | 03 | 04 |
| உள்நாட்டு விமானப் போக்குவரத்து | | |
| பயணிகளின் காவுகை | 8,421 | 2,047 |
| சரக்கு (மெற்றிக் தொன்கள்) | 0 | 0 |
| வானூர்தி நகர்வுகள் | 1,715 | 392 |
| செயற்பாடுகளில் ஈடுபட்ட விமான சேவைக் கம்பனிகளின் எண்ணிக்கை | | |
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் | 01 | 01 |
| அட்டவணைப்படுத்தப்படாத சேவைகள் | 02 | 02 |

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

*2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற வருடத்திற்கான*

## முழுமையான வருமானக் கூற்று

| | குறிப்பு | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| வருமானம் | | 988,991,622.16 | 746,974,839.73 | 744,057,943.73 |
| வருமானம் | (4) | 918,524,428.11 | 687,539,179.30 | 687,539,179.30 |
| ஏனைய வருமானம் | (5) | 70,467,194.05 | 59,435,660.43 | 56,518,764.43 |
| செலவீனம் | | (370,804,177.77) | (518,077,112.69) | (515,160,216.69) |
| ஊழியர் செலவுகள் | (6) | (148,638,658.02) | (131,741,781.67) | (128,824,885.67) |
| கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் செயற்பட்டறைகள் | (7) | (26,794,066.10) | (18,970,807.98) | (18,970,807.98) |
| பயிற்சியளித்தற் செலவுகள் | (8) | (20,106,117.69) | (22,380,262.52) | (22,380,262.52) |
| நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் | (9) | (148,764,416.90) | (120,735,518.27) | (120,735,518.27) |
| | | (26,500,919.06) | (24,248,742.25) | (24,248,742.25) |
| பெறுமானத் தேய்வு | | | | |
| விசாரணை நிதியத்திற்கான ஏற்பாடு | | - | (200,000,000.00) | (200,000,000.00) |
| வருமான வரிக்கு முன்னரான சாதாரண நடவடிக்கையிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | 618,187,444.39 | 228,897,727.04 | 228,897,727.04 |
| வருமான வரி | (10) | (94,722,505.91) | (199,054,612.09) | (197,292,954.44) |
| வருடத்திற்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | | 523,464,938.48 | 29,843,114.95 | 31,604,772.60 |
| ஏனைய விரிவான வருமானம் | | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் மீதான மறுமதிப்பீட்டு மிகை | | - | - | - |
| தீர்மானிக்கப்பட்ட நன்மைத் திட்டத்தின் மீதான சாத்தியமான மிகை/ (நட்டம்) | | - | - | - |
| வெளிநாட்டுச் செயற்பாடொன்றின் நிதிக் கூற்று மாற்றீட்டின் மீதான மிகை/ (நட்டம்) | | - | - | - |
| நிதிச் சொத்து விற்பனை மீது கிடைக்கக் கூடியதான மிகை/ (நட்டம்) | | - | - | - |
| மிகை/ (நட்டம்) விடயத்துடன் தொடர்புடைய வருமான வரி | | - | - | - |
| வருடத்திற்கான மொத்த முழுமையான வருமானம் | | 523,464,938.48 | 515,329,686.44 | 29,843,114.95 |

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

*2012 டிசம்பர் 31 இல்*

## நிதி நிலமைக்கூற்று

| | குறிப்பு | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | 1,202,805,871.50 | 1,086,262,271.26 | 1,086,262,271.26 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | 114,891,490.00 | 110,099,478.51 | 110,099,478.51 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | (11) | 114,891,490.00 | 110,099,478.51 | 110,099,478.51 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 1,087,914,381.50 | 976,162,792.75 | 976,162,792.75 |
| நுகர்வுப் பொருட்கள் | (12) | 6,934,256.43 | 1,586,231.16 | 1,586,231.16 |
| வியாபார வருமதிகள் மற்றும் ஊழியர் கடன்கள் | (13) | 180,555,880.06 | 138,910,733.59 | 151,575,041.59 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | (14) | 543,528,106.43 | 502,513,280.00 | 502,513,280.00 |
| முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய வருமதிகள் | (15) | 136,448,863.07 | 124,274,758.74 | 111,610,450.74 |
| காசும் காசுக்குச் சமமானதும் | (16) | 220,447,275.51 | 208,877,789.26 | 208,877,789.26 |
| உரிமை மற்றும் பொறுப்புக்கள் | | 1,202,805,871.50 | 1,086,262,271.26 | 1,086,262,271.26 |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | 511,349,053.86 | 442,135,945.87 | 448,066,527.96 |
| அரசாங்க நன்கொடை | (17) | 8,562,380.05 | 9,168,434.05 | 9,168,434.05 |
| மீள் மதிப்பீட்டு மிகை | (18) | 13,485,465.44 | 13,485,465.44 | 13,485,465.44 |
| இலாப நட்டக் கணக்கு | | 489,301,208.37 | 419,482,046.38 | 425,412,628.47 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | 274,709,426.94 | 274,584,323.09 | 268,653,741.00 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | (19) | 4,762,194.44 | 5,930,582.09 | - |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | (20) | 259,676,305.00 | 259,413,871.00 | 259,413,871.00 |
| ஓய்வூதிய நன்மைகளுக்கான கடமைப்பொறுப்பு | (21) | 10,270,927.50 | 9,239,870.00 | 9,239,870.00 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | 416,747,390.70 | 369,542,002.30 | 369,542,002.30 |
| வியாபாரச் சென்மதிகள் | (22) | 282,872,312.57 | 254,868,404.05 | 254,868,404.05 |
| ஏனைய சென்மதிகள் | (23) | 43,274,312.31 | 8,513,660.54 | 8,513,660.54 |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | (24) | 90,566,586.22 | 106,159,937.71 | 106,159,937.71 |

இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வெளிப்படுத்துகை தொடர்பான பொறுப்புக்கள் அதிகாரசபை உறுப்பினர்களையே சாரும். அதிகாரசபையின் பேரிலும் அதன் சார்பாகவும் கையொப்பமிடப்படுகின்றன.

ஜெனரல் றொஹான் டி சில்வா தளுவத்த,
தலைவர்.
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

எச்.எம்.சீ. நிமல்சிறி,
சிவில் விமானப்
போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமும்
பிரதான நிறைவேற்று
உத்தியோகத்தரும்.

## உரிமை மாற்றற் கூற்று

*31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான*

| | குறிப்பு | அரசாங்க நன்கொடை | மீள்மதிப்பீட்டு மிகை | திரண்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 01 ஜனவரி 2011 இல் மீதி | | 9,774,488.05 | 13,652,001.91 | 629,983,379.77 | 653,409,869.73 |
| குறித்த காலத்திற்கான இலாபம் | | - | - | 29,843,114.95 | 29,843,114.95 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | | - | - | 9,855,551.66 | 9,855,551.66 |
| தேறிய மிகைப் பங்கீடு | | - | - | (250,000,000.00) | (250,000,000.00) |
| வருடத்திற்கான கடன் தீர்ப்பனவு | | (606,054.00) | - | - | (606,054.00) |
| வருடம் 2009 இற்கான அறவீடுகள் | | - | (166,536.47) | - | (166,536.47) |
| 31 ஜனவரி 2012 இல் மீதி | | 9,168,434.05 | 13,485,465.44 | 419,482,046.38 | 442,135,945.87 |
| குறித்த காலத்திற்கான இலாபம் | | - | - | 523,464,938.48 | 523,464,938.48 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | (25) | - | - | (103,645,776.49) | (103,645,776.49) |
| தேறிய மிகைப் பங்கீடு | (26) | - | - | (350,000,000.00) | (350,000,000.00) |
| வருடத்திற்கான கடன் தீர்ப்பனவு | | (606,054.00) | - | - | (606,054.00) |
| 31 டிசம்பர் 2012 இல் மீதி | | 8,562,380.05 | 13,485,465.44 | 489,301,208.37 | 511,345,053.86 |

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

*31 டிசம்பர் 2011 இல் முடிவுற்ற ஆண்டிற்கான*

## காசுப்பாய்ச்சற் கூற்று

| விபரம் | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான/ பயன்படுத்தப்பட்ட காசோட்டம் | | |
| வரிக்கு முன் சாதாரண நடவடிக்கைகளில் இருந்தான தேறிய இலாபம் / நட்டம் | 618,187,444.39 | 428,897,727.04 |
| சீராக்கங்கள் | | |
| பெறுமானத் தேய்வு | 26,500,919.06 | 24,248,742.25 |
| அரச நன்கொடை மீதான தீர்ப்பனவு | (606,054.00) | - |
| முதலீட்டின் மீதான வருமானம் | (64,756,055.37) | (55,832,002.10) |
| காப்புறுதி நிதியத்திற்கான ஏற்பாடு | 67,450.00 | 66,150.00 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | 6,986,497.51 | 9,911,534.70 |
| ஆதனம், பொறிகள், உபகரணங்களின் விற்பனையின் மீதான இலபபம்/ நட்டம் | 225,842.59 | (440,519.25) |
| நிலையான சொத்துகளின் கொள்வனவு மீதான அனுமதிக்கப்படாத VAT | (3,030,221.66) | - |
| குறிப்பிட்ட நன்மைத் திட்டத்திற்காக ஏற்பாடுகள் | 1,767,642.50 | 1,390,920.00 |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/ நட்டம். | 585,343,465.02 | 408,242,552.64 |
| இருப்புக்களிலான அதிகரிப்பு | (5,348,025.27) | (392,933.84) |
| வியாபார வருமதிகள் மற்றும் ஊழியர் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | (41,645,146.47) | (100,651,627.63) |
| முற்பணங்கள் முற் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய வருமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு | (12,872,922.05) | |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புகளில் ஏற்பட்ட குறைவு | 262,434.00 | - |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு | 62,764,560.29 | (11,088,530.04) |
| செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்தான காசு உருவாக்கம் | 588,504,365.52 | 296,109,461.13 |
| செலுத்தப்பட்ட விவரிக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவீனங்கள் | (736,585.00) | - |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (222,082,339.45) | (164,317,513.17) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசோட்டம் | 365,685,441.07 | 131,791,947.96 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) காசோட்டம் | | |
| ஆதனம், பொறி, உபகரணக் கொள்வனவு | (28,926,051.48) | (86,221,947.76) |
| ஆதனம், பொறி, உபகரண விற்பனையிலிருந்தான விளைவு | 437,500.00 | 1,735,335.00 |
| ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | (210,303,036.52) | 184,822,750.44 |
| ஏனைய முதலீடுகளின் விற்பனையிலிருந்தான விளைவு | 169,402,178.19 | (1,593,570.57) |
| பெற்ற வட்டிகள் | 65,135,454.99 | 54,869,651.40 |
| வங்கி உத்தரவாதம் | 138,000.00 | 4,278,936.00 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | (4,115,954.82) | 157,891,154.51 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட)காசோட்டம் | | |
| திறைசேரிக்கு வழங்கப்பட்ட தொகை | (350,000,000.00) | (250,000,000.00) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | (350,000,000.00) | (250,000,000.00) |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ குறைவு | 11,569,486.25 | 39,683,102.47 |
| வருட ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 208,877,789.26 | 169,194,686.80 |
| வருட இறுதிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 220,447,275.51 | 208,877,789.27 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை மீதான ஆய்வு | | |
| வங்கியிலுள்ள காசு | 40,447,275.51 | 18,883,655.94 |
| குறுங்கால முதலீடுகள் | 180,000,000.00 | 189,994,133.32 |
| | 220,447,275.51 | 208,877,789.27 |

# நிதி அறிக்கைகள் - 2012

## நிதி அறிக்கையிடலுக்கான அதிகாரசபை முகாமையின் பொறுப்புக் கூறல் கூற்று

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 14 மற்றும் 15 ஆவது பிரிவுகளின் பிரகாரம், அதிகாரசபையின் உறுப்பினர்கள் கீழ்க்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர்.

i. அதிகாரசபையின் வருமானம், செலவீனங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் ஆகியன தொடர்பில் உரிய கணக்கேடுகள் பேணப்படுதல்.

ii. அதிகாரசபையின் நிதிச் செயற்பாடுகளினதும் நிதி நிலமையினதும் உண்மையானதும், செம்மையானதுமானதுமான நோக்கினை பிரதிபலிக்கும் முகமாக 1995 இன் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பின்பற்றப்படும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்குகளைத் தயாரிக்கப்பட்டிருத்தல்.

iii. அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்கும் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கும் என பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை உருவாக்குவதற்கும் பொருத்தமான படிமுறைகளை கொண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல்.

ஜெனரல் றொஹான் டி சில்வா தளுவத்த,
தலைவர்.
இலங்கை சிவில் விமானப்
போக்குவரத்து அதிகாரசபை

எச்.எம்.சீ. நிமல்சிறி,
சிவில் விமானப்
போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமும்
பிரதான நிறைவேற்று
உத்தியோகத்தரும்.

## முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. பொதுவான கொள்கைகள்

உடன்பாட்டுக்கான கூற்று

சர்வதேச கணக்கியல் நியமம் சபையினால் வழங்கப்பட்டவாறு சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களை (IFRS) பிரதிநித்துவப்படுத்தி, இலங்கை பட்டயக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்டவாறு இலங்கை நீதியறிக்கையிடல் நியமங்களின் (SLFRS) பிரகாரம், அதிகாரசபையின் நிதி நிலமைக் கூற்று, முழுமையான வருமானம், உரிமை மாற்றங்கள், காசுப்பாய்ச்சல் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கத்துடன் கூடியதான குறிப்புக்கள் (நிதிக்கூற்றுக்கள்) தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2 நிதிக் கூற்றுக்கான பொறுப்புக்கூறல்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையானது நிதிக்கூற்றுகளின் தயாரிப்பு மற்றும் அறிக்கையிடல்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

1.3 தொடர்ந்து செயற்படல்

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது முகாமையானது தொடர்ந்தியங்குதலை பேணிவருவதற்கான அதிகாரசபையின் இயலுமைத் தன்மை மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரசபையானது அதனது சட்டப்படியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கு போதுமான வளங்களை கொண்டுள்ளது என்பதுடன், முன்னுணர முடியாத எதிர்காலத்திற்கான செயற்பாட்டு நிலையில் தொடர்ந்தியங்கும் என்னும் நியாயமான எதிர்பார்ப்பொன்றினை முகாமை கொண்டுள்ளது. அதிகாரசபை எதிர்காலம் பற்றிய அனைத்து கிடைக்கக் கூடிய தகவல்களை கவனத்திற் கொண்டு திரவத்தன்மைக்கான தேவையொன்றை அல்லது செயற்பாடுகளின் நீக்கங்களை முன்னுணர்வதில்லை. இதன் பிரகாரம், அதிகாரசபை நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் தொடர்ந்து செயற்படல் எண்ணக்கரு அடிப்படையை உள்வாங்க முயற்சி செய்கின்றது.

1.4 **SLFRS/ LKAS** இனை முதன்முறையாக உள்வாங்கல்

இந் நிதிக் கூற்றுகள் LKAS இன் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளவாறு இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (SLFRS) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது. அவைகள் வரலாற்றுக் கிரய கருதுகோளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

31 டிசம்பர் 2011 இல் முடிவுற்ற வருடம் உள்ளடங்கலாக அனைத்துக் காலப் பகுதிகளுக்காகவும் அதிகாரசபையானது உள்நாட்டு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் செய்முறைக்கு (SLAS) இணங்க, நிதிக்கூற்றுக்களை தயாரித்து 31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கமைய SLFRS இற்கிணங்கியதாக அதிகாரசபை தயாரித்துள்ள முதலாவது நிதிக்கூற்று இதுவாகும். இதன் பிரகாரம், அதிகாரசபையானது கணக்கியல் கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 31 டிசம்பர் 2011 இல் முடிவுற்ற வருடத்திற்காகவும், அத்திகதியில் முடிவுற்ற முழுமையான காலப்பகுதிகளுக்கும் SLFRS பிரயோகங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றினை தயாரித்துள்ளது. இந்த நிதிக்கூற்றின் தயாரிப்பில் நிதி நிலமையின் மீதான அதிகாரசபையின் ஆரம்பக் கூற்றானது SLFRS க்கு மாற்றீடு செய்யப்பட்ட அதிகாரசபையின் தேதியான 01 ஜனவரி 2011 இல் தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பு 26 ஆனது 01 ஜனவரி 2011 இல் உள்ள அதிகாரசபையின் SLAS அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதி நிலமை கூற்றினையும், அதன் முன்னர் வெளியிடப்பட்ட 31 டிசம்பர் 2011 இல் உள்ளவாறான மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டுகான SLAS அடிப்படையிலான நிதிக் கூற்றுக்களையும் மீள எடுத்துக் கூறுவதில் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட பிரதான சீராக்கங்களை விபரிக்கின்றது.

முன்னைய காலப்பகுதிகளுக்கான நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தலானது சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களினை முதற் தடவையாக ஏற்றுக்கொள்ளும் SLFRS-1 இல் வேண்டப்பட்டவாறு சீராக்கஞ் செய்யப்பட்டுள்ளது.

1.5 **SLFRS** இற்கு முன்னைய **GAAP (SLAS)** ஐ இணங்கச் செய்தல்.

SLFRS-I ஆனது, 2011 இற்கான முழுமையான வருமானம் மற்றும் முறையே 1 ஜனவரி 2011 மற்றும் 31 டிசம்பர் 2011 காணப்படும் இறுதிக் காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட நிறுவனத்தின் மிக அண்மைய ஆண்டு நிதிக்கூற்றுக்கள், மாற்றீட்டுத் திகதியில் SLFRS இற்கிணங்க அறிக்கையிடப்பட்ட உரிமை, மற்றும் முன்னைய SLAS இற்கிணங்க அறிக்கையிடப்பட்ட உரிமை என்பவற்றிற்காக இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அதிகாரசபையினை வேண்டி நிற்கின்றது. இதற்கு மேலதிகமாக, குறிப்பிட்டுக் கூறக்கூடியவாறு சீராக்கம் இருப்பின், SLFRS-I ஆனது காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு ஒரு மேலதிக இணக்கப்பாட்டினைக் ஏற்படுத்துவதற்கு வேண்டி நிற்கின்றது. SLFRS இன் உள்வாங்காதவாறு

அதிகாரசபையானது உண்மையான காசோட்டத்தினை மாற்றத்திற்கு உட்படுத்தவில்லை. இருந்த போதிலும் இது அறிக்கையிடப்பட்ட நிதி நிலமை மற்றும் செயற்பாட்டு முடிவுகளால் குறிப்பிடத்தக்கவாறு மாறுதல்களைத் தோற்றுவித்துள்ளது. மேலும், SLFRS ஆனது அதிகாரசபையின் நிதிக்கூற்றுகளின் முகத்தோற்றத்தில் குறிப்பிடத்தக்கவாறான வெளிப்படுத்தல் மாற்றங்களை விளைவாகக் கொண்டுள்ளது.

1.6 புதிய கணக்கீட்டு நியமங்கள் வழங்கப்பட்ட போதும் ஐந்தொகைத் திகதியில் இதுவரை அமுலாக்கப்படவில்லை

ஏற்கவேயுள்ள நியமங்களுக்கான பின்வரும் புதிய நியமங்கள், சீராக்கங்கள் மற்றும் விளக்கங்கள் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அவை இந் நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரத்திற்கான திகதி வரை அமுலாக்கலுக்கு வரவில்லை. மேற்கூறப்பட்ட புதிய நியமங்களின் பிரயோகங்களின் நிதிக் கூற்று மீதான சாத்தியமான தாக்கமானது இதுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதுடன், அதிகாரசபையானது ஏற்கவேயுள்ள நியமங்களுக்கான புதிய நியமங்கள், சீராக்கங்கள், மற்றும் விளக்கங்கள் நடைமுறைக்கு வரும் போது அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கு தொடர்புறுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

SLFRS 9 - நிதி ஆவணங்கள்

SLFRS 12 - ஏனைய அலகுகளில் அக்கறையை வெளிப்படுத்தல்

SLFRS 13 - சந்தைப் பெறுமதி அளவீடுகள்

1.7 முக்கியமான கணக்கியல் நடுநிலமைகள், மதிப்பீடுகள், மற்றும் எடுகோள்கள்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு, அறிக்கையிடல் திகதியில் சார்ந்த பொறுப்புக்களின் வெளிப்பாடுகள், வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் பாதிக்கும் நடு நிலமைகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றை முகாமை மேற்கொள்ளவேண்டுகின்றது எனினும் இவ் எடுகோளினதும் மதிப்பீடுகளினதும் எதிர்வு கூறமுடியாத தன்மை எதிர் காலத்தில் தாக்கத்திற்குட்படுத்தப்படும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் கொண்டுவரப்பபட்ட தொகைக்கு கணிசமான அளவு நடுநிலமையினை வேண்டி நிற்கின்றது. இக்காரணிகள் நடுநிலமை மதிப்பீடு மற்றும் எதிர்வு கூறல்களை உள்ளடக்க கூடும்.

நடுநிலைமை

அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில் நிதிக் கூற்றுக்களில் அடையாளங் காணப்பட்ட தொகைகள் மீதான மிக முக்கியமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் ஈடுபாட்டிற்கு அப்பால் முகாமையானது பின்வரும் நடு நிலைமைகளை மேற்கொண்டுள்ளது.

குத்தகைகள்

குத்தகைகள் தொடர்பில், அதிகாரசபையானது ஏறத்தாழ அனைத்து ஆபத்துக்களையும் கொண்டுள்ளதுடன், உரிமைக்கான வெகுமதிகள் நிதிக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகை தொடர்பில், ஆபத்துக்களில் மற்றும் உரிமைக்கான வெகுமதிகளில் ஒரு குறிபிடத்தக்களவு பகுதியானது குத்தகைதாரரால் ஏற்றுக்கொள்ப்படுமிடத்து அது செயற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மதீப்பீட்டுகள் மற்றும் எடுகோள்கள்

அடுத்த நிதி வருடத்தினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கீழ் கொண்டு வரப்பட்ட தொகைகளுக்கு கணிசமானதொரு சீராக்கத்தை தோற்றுவித்த குறிப்பிடத்தக்கலான ஆபத்தினைக் கொண்டுள்ளதான அறிக்கையிடல் திகதியில் மதிப்பிடப்பட்ட எதிர்பாராத தன்மையின் ஏனைய பிரதான காரணிகள் மற்றும் எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளும் பிரதான எடுகோள்கள் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது.

அ. நிதி ஆவணங்களின் சந்தைப் பெறுமதி

நிதி நிலமைகளின் கூற்றின் மீது பதிவு செய்யபட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் சந்தைப் பெறுமதியானது செயலாற்றல் மிக்க சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாதவிடத்து அவை கழிவு செய்யபட்ட காசுப்பாய்ச்சல் மாதிரிகை அல்லது/ அத்துடன் கணித ரீதியான மாதிரிகைகளின் பயன்பாட்டினை உள்ளடக்கியதான மதிப்பீட்டு நுட்பங்களின் வகைப்படுத்தலினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. அவ்வாறான மாதிரிகைகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமேற்படுமிடத்து, அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகள் பெறப்படுகின்றன என்பதுடன், அவதானிக்கக்கூடியதான சந்தைத்

தரவுகள் கிடைக்கப் பெறாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளை நிர்ணயம் செய்து கொள்வதற்கு நடுநிலமையானது தேவைப்படுகின்றது. இக் காரணிகள் பற்றிய எடுகோள்களின் மாற்றங்களானவை நிதி ஆவணங்களின் பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியினை தாக்கும் நிதிச் சொத்துக்களின் ஐந்தொகைத் திகதியில் கீழ் கொண்டு செல்லும் பெறுமதியானது ரூபா 953,093,212.00 ஆக அமைந்துள்ளது. (2011 இல் ரூபா 960,408,130.00)

ஆ. குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் பெறுமதி மதிப்பீடு

குறித்துரைக்கப்பட்ட நன்மை ஓய்வூதிய திட்டங்களின் கிரயமானது சமன்பாட்டு முறைமைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றன.

குறித்துரைக்கப்பட்ட நன்மை கடப்பாடு இன் ஐந்தொகைத் திகதியில் கீழ் கொணரப்பட்ட பெறுமதி ரூபா 10,270,928.00 ஆக காணப்படுகின்றது. (2011 இல் ரூபா 9,239,870.00)

இ. சந்தைப் பெறுமதி

சந்தைப் பெறுமதி என்பது செயற்படுவதற்கு கட்டாயப்படுத்தப்படாதவர்களாய் இருக்கின்ற, அறிவாற்றல் கொண்ட விருப்பந்தெரிவிக்கும் பகுதியினரிடையில் கையாலான கொடுக்கல் வாங்கல்களின் கீழ் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கருத்திற் கொள்ளப்பட்டதான தொகையாகும். நிதி ஆவணமொன்று ஆரம்பத்தில் அடையாளம் காணப்படும் போது, அதன் சந்தைப் பெறுமதியானது பொதுவாக செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட கருத்திற் கொள்ளப்பட்ட பெறுமதியாக அமைகின்றது. ஆரம்ப அடையாளங் காணலுக்கான தொடராக, செயற்பாட்டுச் சந்தையொன்றில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி பொதுவாக கேள்விப் பத்திர விலையாக இருக்கும் என்பதுடன், செயற்பாட்டுச் சந்தையொன்றில் குறிப்பிடப்பட்ட நிதிப் பொறுப்பொன்றில் சந்தைப் பெறுமதியானது பொதுவாக கேட்கப்பட்டதாக அமைகின்றது. குறுகிய காலமொன்றைக் கொண்டதான காசுக்குச் சமமானவை மற்றும் குறுங்கால முதலீடுகளை போன்ற நிதி ஆவணங்களுக்கு அவ்வாறான ஆவணங்களின் கீழ் கொண்டு செல்லப்பட்ட பெறுமதி ஏறத்தாழ சந்தைப் பெறுமதியாக காணப்படுகின்றது.

வருமான வரி

அதிகாரசபையானது வருமானவரிக்குப் பொறுப்புடையது என்பதுடன் வருமான வரிக்கான முழுமையான ஏற்பாடுகளை தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்கதான நடுநிலை வேண்டப்படுகின்றது.

1.8 தொழிற்பாடு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

அதிகாரசபையின் தொழிற்பாட்டு நாணயம் இலங்கை ரூபாவாக இருக்கக் தீர்மானிக்கப்பட்டதுடன், மேலும் நிதிக் கூற்றிலுள்ள இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2. விஷேட கணக்கியற் கொள்கைகள்

2.1 நிதிச் சொத்துக்கள்

அதிகாரசபையானது அதன் நிதிச் சொத்துக்களை பின்வரும் வகைகளினுள் வகைப்படுத்துகின்றது. விற்பனைக்காக கிடைக்கப் பெறும் மற்றும் முதிர்வு வரை வைத்திருக்கப்படும் கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுமாகும். இவ் வகைப்படுத்தலானது ஆரம்ப இனங்காணலில் முகாமையினால் தீர்மானிக்கப்படுவதுடன் முதலீடுகள் கொள்வனவு செய்யப்படுகின்ற நோக்கிலும் தங்கியுள்ளது.

2.1.1 வகைப்படுத்தல்

அ. கடன்களும், பெறவேண்டியவையும்

கடன்களும் பெறவேண்டிவைகளும் செயற்பாட்டுச் சந்தையொன்றில் குறிப்பிடப்படாதுள்ள அல்லது நிலையான கொடுப்பனவுகளுடனான ஒன்றிலொன்று தங்கியிராத நிதிச் சொத்துக்களாக காணப்படுகின்றது. மேலும் சாதாரண நடவடிக்கையிலிருந்து எழும் பெறவேண்டியவைகள் இந்த வகையினுள் வகைப்படுத்தப்படுகின்றன என்பதுடன் அவை வலுவிழப்பிற்காக மீள் பார்வைக்குட்படுத்தப்படுகின்றன.

ஆ. முதிர்வு நிதிச் சொத்துக்களை வைத்திருத்தல்

முதிர்வுக்கான முதலீடுகளை வைத்திருத்தல் என்பது பின்வருவன தவிர்ந்ததாக, அதிகாரசபையின் முகாமையானது சாதகமான விருப்பத்தினை அல்லது முதிர்வு வரை வைத்திருக்கும் திறனைக் கொண்டுள்ளதான நிலையான முதிர்வினையும் நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடியதான கொடுப்பனவுகளுடனான ஒன்றிலொன்று தங்கியிராத நிதிச் சொத்துக்களாக காணப்படுகின்றது.

- ❖ ஆரம்ப இனங்காணலின் கீழ் அதிகாரசபையானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் ஒதுக்கீடு செய்கின்றது அல்லது
- ❖ விற்பனைகள் கிடைக்கக் கூடியதாக அதிகாரசபையானது ஒதுக்கீடு செய்கின்றது மற்றும்
- ❖ கடன்கள் மற்றும் பெறவேண்டிவைகளின் வரைவிலக்கணக்கத்தினை சந்திக்கின்றது.

முதிர்வு முதலீடுகளை வைத்திருத்தல் மீதான வட்டியானது வருமானக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றதுடன், "முதலீடு வருமானம்" அறிக்கையிடப்படுகின்றது.

இ. விற்பனை நிதிச் சொத்துக்களின் கிடைப்பனவு

விற்பனை முதலீடுகளுக்கான கிடைப்பனவு என்பது இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், முதிர்வு முதலீடுகளை வைத்திருத்தல் அல்லது நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தப்படாத அல்லது வட்டி வீதங்கள், நாணயமாற்று வீதங்கள் அல்லது உரிமை விலைகளில் அல்லது மாற்றத்திற்கான தேவைகளுக்கு பதிலளித்தலில் விற்கப்படக் கூடிதான எதிர்வு கூறமுடியாத கால எல்லையொன்றை வைத்திருப்பதற்கு விருப்பப்படும் நிதிச் சொத்துக்களாக அமைகின்றன.

### 2.1.2 அடையாளப்படுத்தல்களும், அளவீடுகளும்

நிதிச் சொத்துக்களானவை சந்தைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அடையாளங்காணப்படுவதுடன், சந்தைப் பெறுமதியில் கீழ் கொண்டு செல்லப்படாத அனைத்து நிதிச் சொத்துக்கள் தொடர்பில் சந்தைப் பெறுமதியுடன், அவற்றினை கொள்வனவுக்கு நேரடியாக உடமையாக்கத்தக்கதாக இருக்கும் இலாபம் அல்லது நட்டம் அத்துடன், கொடுக்கல் வாங்கல் கிரயம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டு அடையாளப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் கீழ் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அடையாளங்காணப்படுவதுடன், கொடுக்கல் வாங்கல் கிரயங்களான நிதிக் கூற்றுக்களில் செலவு வைக்கப்படுகின்றன. அவற்றிலிருந்தான காசோட்டத்தை பெறுவதாக உரிமையானது காலாவதியாகும் போது அல்லது அவை மீது அனைத்து ஆபத்துகளையும் இதன் தொடர்ச்சியாக மாற்றீடு செய்யப்படும் போது நிதிச் சொத்துக்களை மீள இனங்காணப்படுகின்றன. விற்பனை நிதிச் சொத்துக்கான கிடைப்பனவானது பின்னராக சந்தைப் பெறுமதியில் கீழ் கொண்டு செல்லப்படுகின்றது. கடன்களும் பெறவேண்டிவைகளும் மற்றும் முதிர்வு நிதிச் சொத்தாக வைத்திருந்தவாறு பயனுறுதிகொண்ட வட்டி முறைமையைப் பயன்படுத்தி பகிர்ந்தளிக்கப்படும் கிரயத்தில் கீழ்க் கொண்டு செல்லப்படுகின்றன.

விற்பனைக்கு கிடைக்கக் கூடியதான வகைப்படுத்தப்ட்ட பணரீதியான முதிர்வு மற்றும் பணரீதியானவற்றின் சந்தைப்பெறுமதிகள் ஏனைய முழுமையான வருமானமாக இணங்காணப்படுகின்றது.

விற்பனைக்கு கிடைக்கக் கூடியதாக வகைப்படுத்தப்பட்ட முறிகள் விற்கப்படும் போது அல்லது வலுவிழப்புச் செய்யப்படும் போது, நிதிச் சொத்துக்களின் மீது எழும் தேறிய உணரப்பட்ட வருமானம் அல்லது நட்டங்களான வருமானக் கூற்றில், ஏனைய முழுமையான வருமானமாக அடையாளப்படுத்தப்பட்ட திரட்டிய சந்தை பெறுமதிச் சீராக்கங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

செயற்றிறனான வட்டி முறைமையினைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதான முறிகள் மீதான வட்டியானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

### 2.1.3 சந்தைப் பெறுமதியின் தீர்மானம்

கடன்கள் மற்றும் முற்பணங்கள் அவ்வாறே வங்கிகள் மற்றும் வாடிக்கையாளருக்கான பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியானவை கடன்களின் தரம், திரவத்தன்மை மற்றும் கிரயங்கள் போன்றவற்றை கவனத்திற் கொண்டு ஒப்பந்தத்தால் இணங்கிக் கொள்ளப்பட்ட காசோட்டங்களின் அடிப்படையில் ஒரு தற்போதைய பெறுமதி முறைமையை பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றன.

வியாபார பெறவேண்டியவைகள் மற்றும் கொடுக்க வேண்டியவையின் வலுவிழப்பு ஏற்பாட்டினை கழித்த கீழ்கொண்டு செல்லும் பெறுமதி அவைகளின் சந்தைப் பெறுமதி அண்ணளவாக கொள்ள எடுகோள் எடுக்கப்படுகின்றது.

### 2.1.6 இனங்காணப்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச் சொத்தானது இனங்காணப்படாது விடப்படுகின்றது. (நிதிச்சொத்தொன்றின் ஒரு பகுதிக்கு பிரயோகிக்கப்படுமிடத்து அல்லது அதையொத்த நிதிச்சொத்தொன்றின் ஒரு பகுதிக்கு பிரயோகிக்கப்படுமிடத்து)

- ❖ குறித்த சொத்திலிருந்து காசோட்டத்தினைப் பெறுவதற்குரிய காலாவதியாகும் போது
- ❖ குறித்த சொத்திலிருந்து காசேட்டத்தினை பெறுவதற்குரிய உரிமையை அதிகாரசபையானது மாற்றீடு செய்யும் போது அல்லது "pass – thorough" ஒழுங்குபடுத்திலின் கீழ் மூன்றாம் நபரொருவருக்கு அதிகளவிலான தாமதமின்றி முழுமையாக பெறப்பட்ட காசோட்டத்தினை செலுத்துவதற்கான ஒரு கடப்பாடாக எடுகோளாகக் கொள்ளும் போது

அ. குறித்த சொத்தின் வெகுமதிகள் மற்றும் அனைத்து ஆபத்துக்களையும் கணிசமான அளவில் அதிகாரசபையானது மாற்றீடு செய்யும் போது அல்லது

ஆ. குறித்த சொத்தின் வெகுமதிகள் மற்றும் அனைத்து ஆபத்துக்களையும் அதிகாரசபையானது மாற்றீடு செய்யவில்லையோ அல்லது வைத்திருக்கின்றதோ, ஆனால் குறித்த சொத்தினுடைய கட்டுப்பாட்டினை மாற்றீடு செய்திருக்கும் போது

அதிகாரசபையானது சொத்தொன்றிலிருந்தான காசோட்டத்தினைப் பெறுவதற்கான அதன் உரிமையான மாற்றீடு செய்யும் போது அல்லது pass- through ஒழுங்கொன்றினுள் நுளைந்துள்ள போது அத்துடன், அச்சொத்துக்களின் கட்டுப்பாட்டினை மாற்றீடு செய்தோ அல்லது அச் சொத்தின் வெகுமதி மற்றும் ஆபத்துக்கள் அனைத்தினையும் கணிசமான அளவில் மாற்றீடு செய்யாது வைத்திருக்கும் போது அல்லது தன்னகத்தே கொண்டிராத போது அச்சொத்தானது அதிகாரசபையின் தொடர்ச்சியான அச்சொத்தின் மீதான ஈடுபாட்டினை நீடிப்பதற்கு அடையாளப்படுத்துகின்றது. இந்நிலமையில், அதிகாரசபையும் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பொன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது. மாற்றீடு செய்யப்பட்ட சொத்தும், கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பும் அதிகாரசபையிடமுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையாக அளவிடப்படுகின்றது. மாற்றீடு செய்யப்பட்ட சொத்தின் மீதான பிணையாளியொருவரின் வடிவில் எடுக்கப்பட்ட தொடர்ச்சியான ஈடுபாடானது அச்சொத்தின் உண்மையான கீழ் கொண்டு வந்த கொகையின் குறைந்த பெறுமதியில் மட்டுமன்றி, அதிகாரசபை மீளச்செலுத்தும்படி வேண்டப்பட்டிருக்கக் கருத்திற் கொள்ளும் ஆக்கக்கூடிய தொகையாகவும் அளவிட்டுக் கொள்ளப்படுகின்றது.

## 3. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### 3.1 கிரயம்/ மறுமதிப்பு

உரிமையாளர் வதியும் ஆதனம் உள்ளடக்கிய ஆதனங்கள் மற்றும் திரட்டிய வலுவிழப்பு நட்டங்களைக் கழித்து நாளாந்த சேமிப்பின் செலவினை உள்ளடக்காத கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. மாற்றீட்டு அவ்வாறு முக்கிய சோதனைச் செலவுகள் அவை ஏற்படும் போது மூலதனமாக்கப்படுவதுடன், குறித்த சொத்துடன் சேர்க்கப்பட்டதான எதிர்கால பொருளாதார நன்மைக்கான சாத்தியம் காணப்படின் உரிமையுடன் சேர்க்கப்படும் என்பதுடன் குறித்த சொத்தின் கிரயம் நம்பகமாக அளவிடப்படும்.

ஆதன மற்றும் உபகரணத்தின் கிரயம் என்பது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட கிரயத்துடன் அதனைப் பயன்படுத்தக்கூடியதான அதன் நிலைக்கு அச்சொத்தினை கொண்டுவருதில் ஏற்பட்ட ஏதாவது செலவையும் சேர்க்க வருவதாகும். ஆதனம் மற்றம் உபகரணமானது சில சந்தர்ப்பங்களில் மறுமதிப்பீட்டிற்கு உட்படும் போது, அவ்வாறான சொத்துகளின் முழுமையான தொகுதியும் மறுமதிப்பீடு செய்யப்படுகின்றது. அதிகாரசபையானது ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும் சொத்துக்களை மறுமதிப்பீடு எனும் கொள்கைகொன்றை உள்வாங்கியுள்ளது. எனினும் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட வேண்டிய சொத்துக்களின் சந்தைப் பெறுமதியானது கீழ் கொண்டுள்ளதை தொகையிலிருந்து கணிசமான அளவில் வேறுபடும் போது மேலதிய மறுமதிப்பீடொன்று செய்யப்படுகின்றது.

சொத்தொன்றானது மறுமதிப்பீடு செய்யப்படும் போது, ஏதாவது கீழ் கொண்டு செல்லும் தொகையில் ஏதாவது அதிகரிப்பானது, வருமானக் கூற்றில் ஏற்கனவே இனங்காணப்பட்ட அதே சொத்தினுடைய மறுமதிப்புக் குறைவொன்றிற்கு அச்சொத்து ஒதுக்கீடு செய்யப்படும் அளவினைத் தவிர மறுமதிப்பீட்டு ஒதுக்கீடானது செலவு வைக்கப்படுகின்றது. இந்நிலையில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. ஒரே வகையான சொத்தின் ஏற்கவேயுள்ள மிகையொன்றாக பதிவளித்திருந்தால் ஏதாவது மறுமதியீட்டு குறைவானது (நட்டமாக) நேரடியாக மறுமதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மிகைக்கு எதிராக பதிலளிக்கப்படுவதுடன், ஏதாவது மிகையானது வேறொன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது. விற்பனையின் பிரகாரம், விற்பனை செய்யப்பட்ட சொத்து தொடர்பில் ஏதாவது மறுமதிப்பீட்டு ஒதுக்கீடானது பகிரப்படாத இலாபத்திற்கு மாற்றீடு செய்யப்படும்.

3.2 பொதுத்தினசேரி அல்லது அரசாங்கத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சொத்துகள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்த சந்தைப் பெறுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்த சந்தைப் பெறுமதியில் வெளிப்படுத்தப்படுகின்றது. (மறுமதிப்பீடானது 2003 இல் மேற்கொள்ளப்பட்டது) IFRS மாற்றீட்டு நோக்கத்திற்காக, கூறப்பட்ட சொத்துகளின் மறுமதிப்பீடு தொகையான 01 ஜனவரி 2011 இல் Deemed கிரயமாகக் கருதப்பட்டுள்ளன.

3.3 பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடானது ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களில் கிரயம்/ மதிப்பிடப்பட்ட பெறுமதியின் (சொத்தின் கிரயம் /மதிப்பிடப்பட்ட பெறுமதியினது இருப்புப் பெறுமதியில் 10% கழித்து) மீது நேர்கோட்டு முறையில் கணிப்பிடப்படுகின்றது. நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களும் அவற்றின் பயனுள்ள வாழ்க்கை காலத்தின் மீது அவ்வாறான தொகையான பதிலளித்துக் கொள்ளும் பொருட்டு வருடாந்தம் பின்வரும் வீதங்களில் பெறுமானத் தேர்வு இடப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 6 2/3% |
| மோட்டார் வாகனங்கள் | 12.5% |
| பொறிகள், இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் | 25% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் | 25% |
| IT மென்பொருள் | 50% |

பெறுமானத்தேர்வு கொள்வனவு செய்யப்பட்ட தேதியில் ஆரம்பித்து கணிப்பிடப்படுகின்றது என்பதுடன் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட தொகையில் 10% ஆனது தனிப்பட்ட சொத்துகளின் பெறுமதியிடக்கூடிய தொகையினை தீர்மானிப்பதில் இருப்புப் பெறுமதியாக பேணப்படுகின்றது.

மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொருளாதார ஆயுட்காலமானது கிடைப்பனவின் சிறப்பான தன்மையின் அடிப்படையில் LKAS 16 இல் வேண்டப்பட்டவாறு மீள்மதிப்பிற்குட்படுத்தப்பட்டது. இதன் விளைவாக பெறுமானத்தேய்வு வீதமானது சில ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களும் மாற்றப்பட்டுள்ளது. அச்சொத்துகளின் பொருளாதார வாழ்க்கைகளை மாற்றத்தின் பெறுபேற்றுத் தாக்கமானது 2012 இலிருந்து ஆரம்பமாகும் நிதிக் கூற்றுக்களின் சீராக்கம் செய்யப்படும். மோட்டார் வாகனங்களுக்கு பயனுள்ள ஆயுட்காலம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், 2008 இன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமான தேய்வு வீதமானது 25% இருந்து 12.5% மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது. 2008 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான பெறுமானத் தேய்வானது, அவ் வாகனங்கள் பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதுடன், அவை விற்பனை செய்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையினால் மாற்றம் எதுவுமின்றி அவ்வாறே விடப்பட்டுள்ளது.

3.4 மீள இனங்காணல்

ஆதனம் மற்றும் உபகரணங்களினது விற்பனையின் போது அல்லது அச் சொத்துக்களின் பயன்பாட்டிலிருந்து எவ்வாறானதொரு எதிர்மறை பொருளாதார நன்மையும் எதிர்பார்க்கப்படாத போது மீள இனங்காணப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள இனங்காணலின் மீது எழுந்த ஏதாவது இலாபம் அல்லது நட்டமானது சொத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட தொகைக்கும் விற்பனை செய்யப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக தீர்மானிக்கப்படுகின்றதுடன் வருமானக் கூற்றில் காண்பிக்கப்படுகின்றது.

3.5 தொட்டுணரக் கூடிய சொத்துக்களின் வலுவிழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும், அதிகாரசபையானது தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் வலுவிழப்பு நட்டமொன்றினை அனுபவிப்பதான ஏதாவது அறிகுறி இருக்கின்றதா என்பதனை தீர்மானித்துக் கொள்வதற்கு அந் நிறுவனத்தின் தொட்டுணரக்கூடிய சொத்துக்களின் கீழ் கொண்டுவரப்படும் தொகையினை மீள் பார்வைக்குட்படுத்துகின்றது. ஏதாவது அவ்வாறான அறிகுறிகள் தென்படுமிடத்து வலுவிழப்பு நட்டத்தின் (ஏதாவது) எல்லையினைத் தீர்மானித்துக் கொள்ளும் பிரகாரம், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகை மதிப்பிடப்படுகின்றது. தனிப்பட்ட ஒவ்வொரு சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுவது சாத்தியமற்றிருக்குமிடத்து, அக் குறித்த சொத்தை உரித்தாகக் கொண்டுள்ள காசினை உருவாக்கிக் கொள்ளும் அலகிற்கென மீளப்பெறக்கூடிய தொகையானது தீர்மானிக்கப்படுகின்றது. ஒதுக்கீட்டின் நியாயமான மற்றும் நிலையான அடிப்படை அடையாளங்காணப்படுமிடத்து, தனிப்பட்ட காசு உருவாக்கிக் கொள்ளும் அளவிற்கு சொத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன அல்லது அவ்வாறு அல்லாதுவிடின், நியாயமானதும் நிலையானதுமான ஒதுக்கீட்டு அடிப்படை அடையாளங்காணப்படக் கூடியதான காசு உருவாக்கிக் கொள்ளும்

அலகுகளின் சிறிய குழுக்களிற்கு அவை ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

மீளப் பெறக்கூடிய தொகை என்பது விற்பதற்கான செலவுகள் அல்லது பயன்பாட்டின் பெறுமதியை சந்தை பெறுமதியின் கூடிய தொகையிலிருந்து கழித்து பெறுவதாக அமைகின்றது. பயன்பாட்டின் பெறுமதி மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர் கால காசோட்டங்களின் மதிப்பீடுகள் எவ்வாறான சொத்துக்களிற்கு ஆபத்துக்களை குறித்து நிற்கின்றதோ அவை சீராக்கப்படுவதில்லை.

ஒரு சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையானது (அல்லது காசு உருவாக்கி கொள்ளும் அலகு) அதன் கீழ் கொண்டு செல்லும் தொகையிலும் குறைவாக இருக்க மதிப்பிடப்படுமாயின், அச்சொத்தின் கீழ் கொண்டு செல்லும் தொகையானது. (காசு உருவாக்கி கொள்ளும் அலகு) அதன் மீளப் பெறக்கூடியாதான தொகைக்கு குறைக்கப்படுகின்றது. வருமான தொகை ஒன்றில் தொடர்புடைய சொத்து கொண்டுவரப்பட்டாலன்றி வருமானக்கூற்றில் வலுவிழப்பு நட்டமொன்றானது உடனடியாக இணங்காணப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் வலுவிழப்பு நட்டமானது மீள்மதிப்பீட்டில் ஏற்பட்ட குறைவாக கருதப்படுகிறது.

## 4. இருப்புக்கள்

அனைத்து இருப்புக்களும் குறைத்தெழுதப்பட்ட பெறுமதியில் அல்லது தேறிய உணரப்பட்ட பெறுமதியில் பெறுமதியிடப்படுவதுடன், செலவானது முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் தீர்மானித்துக் கொள்ளப்படுகின்றது.

## 5. ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் என்பது ஏனைய கடன்பட்டோரில் பெறவேண்டியவைகள், முற்பணங்கள் வைப்புக்கள், முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் பெறவேண்டிய வசதிகளை உள்ளடக்குகின்றது.

அ. முற்பணங்கள், வைப்புக்கள், முற்பணச்செலவுகள்

ஒரு நிதிவருடத்திலும் கூடிய தொடர்பு அல்லது நன்மை ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கென காணப்படும் செலவு முற்பணங்களாகவும், வைப்புக்களாகவும், முற்பண செலவுகளாகவும் வகைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான செலவுகள் நேர விகிதசார அடிப்படையில் அவை தொடர்புடையதாக காணப்படும் காலங்களின் மீது பதிவளிக்கப்படுகின்றது.

ஆ. ஏனைய கடன்பட்டோர்கள்

ஏனைய கடன்பட்டோர்கள் கிரயத்திலிருந்து வலுவிழப்பு நட்டத்தினை கழித்து இனங்காணப்படுகின்றது.

இ. பெறவேண்டிய வரிகள்

பெறவேண்டிய வரிகள் கிரயத்தில் இனங்காணப்படுகின்றது.

ஈ. முற்பணமாகச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவுகள்

இவை அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நியாயமான வீதத்தில் கொடுக்கப்பட்ட ஊழியர் கடன்களிலிருந்து எழும் மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

## 6. காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும் என்பது கையிலுள்ள காசினையும் காசுத்தொகையாக உடனடியாக மாற்றக்கூடியதாக இருக்கும் அதிகளவு திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகளையும் உள்ளடங்குகின்றதுடன், இவைகள் பெறுமதியாக மாற்றப்படும் போது முக்கியத்துவமற்றதொரு ஆபத்துத்தன்மைக்கு உட்பட்டனவாக காணப்படும் இவைகள் குறுங்கால காசுத் தேவைகளை ஈடுசெய்து கொள்ளும் நோக்குடன் வைத்திருக்கப்படுகின்றன.

காசுப் பாய்ச்சற் கூற்றின் நோக்கத்திற்கென, காசும் காசுற்கும் சமமானவைகள் என்பது கையிலுள்ள காசு மற்றும் வங்கி மேலதிகப்பற்றுக்களின் தேறியதான வங்கியிலுள்ள வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது. மேலும், குறுகிய கால முதலீடுகள் அதாவது மூன்று மாதங்கள் அல்லது கொள்வனவுத் திகதியிலிருந்து கழித்து காசுக்குச் சமமானதாகக் கருதப்படுகின்றது. கூட்டிணைக்கப்பட்ட ஐந்தொகையில், வங்கி மேலதிகப்பற்றானது நடப்புப் பொறுப்புகளில் கடன் கொடுத்தவர்களினுள் காட்டப்படுகின்றது.

## 7. ஏற்பாடுகள்

கடப்பாடுகளைத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தும் வளங்களின் வெளிச் செல்கையொன்றிற்கு சாத்தியமாக இருக்குமிடத்து மற்றும் நம்பகரமான மதிப்பீடொன்று கடப்பாட்டுத் தொகைக்கு மேற்கொள்ளப்பட முடியுமிடத்து, ஒரு கடந்தகால பெறுபேறாக அதிகாரசபை ஒரு நடைமுறை கடப்பாடுகளை வைத்திருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. பணத்தினுடைய காலப்பெறுமதியின் தாக்கம் முக்கியத்துவம் மிக்கதொன்றாக காணப்படுமிடத்து, ஏற்பாடுகள்

பணத்தினை காலப்பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும்.

ஒரு முற்கூட்டிய வரி வீதத்தில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசோட்டங்களை கழிவு வழங்கலின் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன் பொருத்தமானவிடத்து ஆபத்துக்கள் பொறுப்புக்களுக்கு குறித்து நிற்கின்றது.

7.1 ஊழியர் நன்மைகள்

தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

ஊழியர்கள் குறித்த நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்கும் (EPF) ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் (ETF) உரித்துடையவர்கள் ஆவார். அதிகாரசபையானது ஊழியர் சேமலாப நிதிப்பங்களிப்புக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தின் நிலையான பங்களிப்பொன்றினை செலுத்துகின்றதுடன், மேலதிக தொகையினை செலுத்துவதற்கு அதிகாரசபைக்கு சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.

தீர்மானிக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள்

தீர்மானிக்கப்பட்ட நன்மைத்திட்டங்களானவை தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பத் திட்டங்களுக்கு மேலானதான பிந்திய வேலைவாய்ப்புத் திட்டங்களாகும். அதிகாரசபையானது 1983 இல் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடையை செலுத்த வேண்டிய பொறுப்பினையும் கொண்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழுள்ள இக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடொன்று, சேவைக்கான வருடங்களை மாதச் சம்பளத்தின் அரைப்பங்கினை பெருக்குவதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

7.2 விபத்து விசாரணை நிதியம்

வான் விபத்து தொடர்பான விபத்து விசாரணையின், நாட்டினது கடமைப்பாடு தேடுதல் மற்றும் காப்பாற்றல் என்பன சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இந் நோக்களுக்காக 250 மில்லியன் ரூபா ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஏற்பாடுகளின் பெறுமதியானது அதிகாரசபையின் முகாமையின் நடுநிலமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

7.3 ஊழியர் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம்

ஊழியர் நலன்புரி மற்றும் சமூகம் பாதுகாப்பு நிதியமானது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் இணைந்து கொண்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தில் பந்தி 20 (5) இன் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. திரட்டிய வட்டியுடனான ஒவ்வொரு இளைப்பாறும் ஊழியர் பெயரிலும் இத்தொகையானது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெறும் தருணத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

## 8. நிதிப்பொறுப்புக்கள்

8.1 ஆரம்ப இனங்காணலும், அளவீடும்

LKAS 39 இன் வரையறையினுள் நிதிப் பொறுப்புக்களானவை பொருத்தமான வகையில் கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. அதிகாரசபையானது ஆரம்ப இனங்காணலில் அதன் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலைத் தீர்மானிக்கின்றன.

அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் இனங்காணப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் தொடர்பில் பகிர்வு செய்யப்பட்ட செலவாக கீழ்க் கொணரப்படுகின்றன. இது நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கற் செலவாக உள்ளடக்கப்படுகின்றது.

அதிகாரசபையின் நிதிப் பொறுப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகளையும் உள்ளடக்குகின்றது.

## 9. ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்களானவை அட்டுறு செலவு உள்ளடங்கிய ஏனைய கடன் கொடுத்தோரை உள்ளடக்குகின்றது. இவைகள் அவற்றின் சந்தைப் பெறுமதியில் இருக்க ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதான அவற்றின் வரலாற்றுப் பெறுமதியில் எடுத்துரைக்கப்படுகின்றது.

## 10. வருமானத்தினை இனங்காணல்

10.1 கடல் கடந்த விற்பனை மிகைக்கட்டணம்/ விமான மேறல் வரி மீதான சேவைக் கட்டணம்/ அனுமதிப்பத்திரங்களின் ஆரம்ப வழங்குகைகள் மற்றும் புதுப்பித்தல்கள் / விமான சேவை அனுமதிப்பத்திரத்தின் மீதான திருத்தங்கள்/ நியதிச் சட்ட சேவைக் கட்டணம் / பரீட்சைக் கட்டணங்கள்

மேற்கூறப்பட்ட சேவைகள் கட்டணங்களிலிருந்தான வருமானமானது எக்காலத்தில் தொடர்புடைய சேவைகள் வழங்கப்படுகின்றவோ அக்காலத்தில் காணப்படும் சந்தைப் பெறுமதியில் இனங்காட்டப்படுகின்றது.

10.2 வட்டி வருமானம்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி ஆவணங்கள் உள்ளடங்கலாக அனைத்து வட்டியுடன் கூடிய நிதி ஆவணங்களுக்கான வட்டி வருமானமானது நடப்பு வட்டி வீத முறைமையினால் வருமானம் என்பதனுள் இனங்காட்டப்படுகிறது. பெறவேண்டிய ஒன்று இழக்கப்படும் போது அதிகாரசபையானது ஆவணத்தின் மூல நடப்பு வீதத்தில் கழிவு செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசோட்டத்தினை கொண்டதாக அதன் மீளப்பெறக்கூடியதான அதன் கீழ் கொண்டு வரப்படும் தொகையினை குறைக்கின்றதுடன், வட்டி வருமானமாக கழிவிவானது முன்னெடுக்கின்றது.

10.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது அட்டுறு அடிப்படையில் இனங்காட்டப்படுகின்றது.

## 11. செலவுகளை இனங்காணல்

அனைத்து செலவுகளும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்துடன், சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுவதுடன், எந்தக் காலப்பகுதிக்கு அச்செலவுகள் தொடரப்படுகின்றவோ அக்காலப்பகுதிக்குரியதான இனங்காட்டப்படுகின்றன.

எதிர்பார்க்கும் பயனுள்ள ஆயுட்காலத்தின் மாற்றங்கள் அல்லது குறித்த சொத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மையின் பயன்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட மாதிரிகை ஆனது பெறுமானத் தேங்வு காலத்தினை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுவதுடன், கணக்கியல் மதிப்பீடொனறில் ஏற்பட்ட மாற்றமொன்றாகக் கருதப்படுகின்றது.

## 12. கடன் பெறலுக்கான செலவுகள்

கடன் பெறற் செலவுகள் என்பது நிதியின் கடன் பெறலுடன் தொடர்புடைய அதிகாரசபையால் ஏற்ப்படுத்திக் கொள்ளப்பட்ட வட்டி மற்றும் ஏனைய செலவுகளைக் குறிக்கும் கடன் பெறலுக்கான செலவுகள் அச்செலவு இடம்பெற்ற காலப்பகுதிக்குரியதான செலவொன்றாக இனங்காணப்படகின்றது,

## 13. நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி

குறித்த காலத்திற்கான வரிச்செலவானது நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை உள்ளடக்குகின்றது. உரிமையில் நேரடியாக அல்லது ஏனைய முழுமையான வருமானத்தில் அடையாளப்படுத்தப்பட்ட விடயங்களிற்கு வரியானது தொடர்புபட்டு இருக்கும் அளவு தவிர, வரியானது வருமானக்கூற்றில் இனங்காட்டப்படுகின்றது. இந்நிலையில் மேலும், வரியானது முறையே ஏனைய முழுமையான வருமானம் அல்லது உரிமையில் நேரடியாக இனங்காட்டப்படுகின்றது.

நடப்பு வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் நடப்பு அதே போல முன்னைய வருடங்கள் தொடர்பில் வரி நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனிடமிருந்து பெறப்பட்ட எதிர்பார்க்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது. தொகையினை நிர்ணயித்து பயன்படுத்தப்படும் விரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களை நிதி நிலமை திகதியிலுள்ள கூற்றினால் சட்டவாக்கம் செய்யப்படுகிறது அல்லது பின்னராக சட்டவாக்கஞ் செய்யப்படுகின்றது. இதன் பிரகாரம், வரிக்கான ஏற்பாடானது 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பின்னர் அச்சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கிணங்க வரியிடல் நோக்கங்களுக்காக சீராக்கப்பட்ட வருடத்திற்கான இலாபத்தினை அடிப்படையில் கொண்டதாக மேற்கொள்ளப்படுகிறது.

பிற்போடப்பட்ட வருமான வரியானது நிதிக் கூற்றுக்களில் அவற்றின் கீழ் கொண்டு வரப்பட்ட தொகை மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் என்பவற்றின் வரி அடிப்படைகளுக்கிடையில் எழும் தற்காலிக வேறுபாடுகள் மீதான பொறுப்பு முறைமையைப் பயன்படுத்தி அடையாளப்படுத்துகின்றது. இருந்த போதிலும் கணக்கீடோ அல்லது வரியிடக்கூடிய வருமானமோ அல்லது தாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்ற தருணத்தில் வியாபார சேர்மானம் தவிர்ந்த நடவடிக்கையொன்றில் சொத்து அல்லது பொறுப்பொன்று ஆரம்பத்தில் இனங்காணப்படுதலிலிருந்து பிற்போடப்பட்ட வரியானது ஏற்படின், அதற்கு கணக்கீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. பிற்போடப்பபட்ட வருமான வரியானது அறிக்கையிடல் காலத்தின் முடிவில் சட்டவாக்கப்படுத்தப்பட்ட அல்லது பின்னராக சட்டவாக்கப்படுத்தப்பட்ட வரி வீதங்களை (மற்றும் சட்டங்களை) பயன்படுத்தி தீர்மானிக்கப்படுவதுடன், பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படும் போது அல்லது தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமான வரி சொத்து உணரப்படும் போது உபயோகப்படுத்த எதிப்பார்க்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்களை எதிராக எதிர்காலத்தில் வரிவிதிக்கக் கூடிய இலாபம்

கிடைக்கக் கூடியதான சாத்தியத் தன்மைக்கெதிராக தற்காலிகமான வேறுபாடுகள் பயன்படுத்தப்பட முடியுமான வரைக்கும் இணங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரியானது அதிகாரசபை தற்காலிக வேறுபாடுகளின் திருப்பங்களுக்கான தருணங்களை கட்டுப்படுத்தும் சந்தர்ப்பம் தவிர துணை மற்றும் கூட்டிணைக்கப்பட்டவைகளின் முதலீடுகள் மீது எழும் தற்காலிக வேறுபாடுகளின் மீது வழங்கப்படுகின்றதுடன், முன்னுணரப்படும் எதிர்காலத்தில் தற்காலிக வேறுபாடானது அநேகமான வகையில் திரும்புதலுக்குட்படமாட்டாது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை நடப்பு வரிச் சொத்துக்களை நடப்பு வரிச் சொத்துக்கெதிராக பதிவளிக்கும் உரிமையினை சட்டரீதியாக ஏற்படுத்திக் கொள்ளுமிடத்திலும் மற்றும் தேறிய அடிப்படையொன்றில் தீர்த்துக் கொள்ள விருப்பமொன்றை தெரிவிக்குமிடத்தில், வரியிடக்கூடிய அலகு அல்லது வேறுபட்ட வரியிடக் கூடிய அலகுகளின் மீது வரி நிறுவனங்களில் விதிக்கப்பட்ட வருமான வரியுடன் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்புபடும் போது பதிவளிப்புச் செய்யப்படுகின்றது.

பயன்படுத்தப்படாத நட்டங்களின் அல்லது பயன்படுத்தப்படாத வரிச் செலவுகளின் கீழ் கொண்டு வரப்பட்டதற்கான வரித் தாக்கங்களை எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைப்பதற்கான சாத்தியத்தன்மைக்கெதிராக இவ்வாறான நட்டங்கள் பயன்படுத்தப்பட முடிகின்ற போது அது ஒரு சொத்தாக இனங்காட்டப்படுகின்றது.

## 14. வெளிநாட்டு நாணய மாற்றம் அல்லது கொடுக்கல் வாங்கல்கள்

தொழிற்பாட்டு நாணயம் தவிர்ந்த நாணயங்களிலான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும், கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட தருணத்தில் வழக்கமான பரிமாற்று வீதங்களைப் பயன்படுத்தி, இலங்கை ரூபாய்களில் பதிவு செய்யப்படுகின்றது. நிதி நிலமை திகதியினை ஒவ்வொரு கூற்றிலும், வெளிநாட்டு நாணயங்களின் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணரீதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை ஐந்தொகைத் திகதியில் நடப்பிலுள்ள பரிமாற்று வீதத்தில் சமமான இலங்கை ரூபாய்க்கு மாற்றீடு செய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வெளிப்படுத்தப்படும் பணரீதியற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடவடிக்கைத் திகதியில் பொதுவாவுள்ள பரிமாற்று வீதத்தினை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. பணரீதியான விடயத்தின் தீர்ப்பனவு மற்றும் பணரீதியான விடயங்களின் மீள் பரிமாற்றத்தின் மீது எழும் பரிமாற்று வேறுபாடுகள் அவை எவ்வருடத்தில் ஏற்படுகின்றனவோ அவ்வருடத்தில் வருமானக் கூற்றில் இனங்காட்டப்படுகின்றது.

## 15. ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய சம்பவங்கள்

பணிப்பாளர்கள் விடயங்களை நெருக்கமான முறையில் அவதானிக்கின்றனர் என்பதுடன், தேவைப்படுமிடத்து சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் பொருத்தமான வகையில் குறிப்பிடக் கூடியதான ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள் தொடர்பில் நடப்பு நிதிக் கூற்றுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

## 16. சார்ந்த பொறுப்புக்கள்

கடந்த காலச் சம்பவமொன்றின் பெறுபேறு ஒன்றாக சாத்தியமான எதிர்கால கடமைப்பாடு காணப்படுமெனில் அல்லது கொடுப்பனவு ஒன்று சாத்தியமற்று அல்லது தொகையானது நியாயமற்று மதிப்பிடப்பட்டதொன்றாக இருக்குமிடத்து கடந்த கால நிகழ்வொன்றில் பெறுபேறொன்றாக தற்போதைய கடப்பாடு இருக்குமெனில் சார்ந்த பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 17. காசுப் பாய்ச்சற் கூற்று

காசுப் பாய்ச்சற் கூற்றானது காசுப் பாச்சற் கூற்றின் மீதான இலங்கை கணக்கியல் நியமம் இலக்கம் 9 இற்கிணங்க நேரில் முறையினைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றது.

நேரில் முறைமையானது காசு சாராத விடயங்கள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தால் அல்லது ஏதாவது வேறுபட்டால் அல்லது கடந்த காலத்தில் கெடுக்க வேண்டியவையால் அல்லது எதிர்கால செயற்பாட்டு காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளால் மற்றும் நிதி விடயங்களில் அல்லது முதலீடு அல்லது நிதி காசோட்டத்துடன் தொடர்புபட்டதான செலவுகளால் சீராக்கப்பட்ட இலாப மற்றும் நட்டங்களை வெளிக் காட்டப்படுகின்றன.

## 18. அரச நன்கொடைகள்

ஆரச நன்கொடைகளின் பெறுமதியானது, அதிகாரசபை தோற்றம் பெற்ற தருணத்தில் சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து கடன் தீர்ப்பனவுகள் கழித்ததாக வெளிப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 01.01.2011 இல் அரச நன்கொடைகள் | - | ரூபா | 9,774,488.05 |
| கழி 2011 இல் கடன் தீர்ப்புகள் | - | ரூபா | 606,054.00 |
| 31.12.2012 இல் அரசாங்க நன்கொடை | - | ரூபா | 9,168,434.05 |
| கழி 2012 இல் கடன் தீர்ப்புகள் | - | ரூபா | 606,054.00 |
| 31.12.2012 இல் அரசாங்க நன்கொடை | - | ரூபா | 8,562,380.00 |

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

*31 டிசம்பர் 2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான*

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 01. ஊழியர் கடன்கள்

LKAS 39 இற்கு அமைய, ஊழியர் கடன்கள் ஏதாவது இழப்பீட்டு நட்டங்கள் கழித்ததான நடைமுறை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி பகிர்ந்தளிக்கப்பட்டதான கிரயத்தில் இனங்காட்டப்படுகின்றது. 01 ஜனவரி 2011 இல் வெளிநின்ற ஊழியர் கடன்களின் பிரகாரம், பகிர்ந்தளிக்கப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்பட்டன. இதன் விளைவாக முன்கூட்டிச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவு மற்றும் IFRS சீராக்கற் கணக்குத் தொகையான ரூபா 7,314,918.00 அதிகாரசபையின் கணக்குப் புத்தகங்களில் உருவாக்கப்பட்டிருந்தது.

பின்வருமாறு நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய மீதிகள் காட்டப்படுகின்றன.

1.1. IFRS சீராக்கற் கணக்கு மீதி ஊழியர் கடன் கணக்கிலிருந்து கழிக்கப்படுகின்றது. இதன் விளைவாக, ஐந்தொகையில் ஊழியர் கடன்கள் சந்தை விலையில் தற்போது காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| ஊழியர் கடன்கள் | 29,303,171.13 |
| IFRS சீராக்கங்கள் | (7,314,918.00) |
| | 21,988,253.13 |

1.2. மேற்கூறப்பட்ட சீராக்கம் காரணமாக எழும் முற்கூட்டிச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவுகள் நடப்புச் சொத்துக்களின் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முற்கூட்டிச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவு | 7,314,918.00 |

### 02. 01 ஜனவரி 2011 இல் திரட்டிய இலாபம்

பின்வரும் சீராக்கம் 01 ஜனவரி 2011 இல் திரட்டிய இலாபத்திற்கு செய்து கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| SLAS படி 01 ஜனவரி 2011 இல் திரட்டிய இலாபம் | 634,152,304.21 |
| குறிப்பு இலக்கம் 03 இன் படி பிற்போடப்பட்ட வரி | (4,168,924.44) |
| 01 ஜனவரி 2011 இல் IFRS சீராக்கத்தின் பின்னரான திரட்டிய இலாபம் | 629,983,379.77 |

### 03. பிற்போடப்பட்ட வரி

| | |
|---|---|
| 31 டிசம்பர் 2010 இல் பீ.பீ.ஈ இன் கணக்கீட்டுக் குறைத்தெழுதப்பட்ட பெறுமதி | 50,449,662.26 |
| 31 டிசம்பர் 2010 இல் பீ.பீ.ஈ இன் வரி குறைத்தெழுதப்பட்ட பெறுமதி | 38,538,449.57 |
| வேறுபாடுகள் | (11,911,212.69) |
| 35% இல் பிற்போடப்பட்ட வரி | (4,168,924.44) |

மேலுள்ளவை 01 ஜனவரி 2011 இல் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்களுக்கு சீராக்கப்பட்டவை.

| குறிப்பு இல. | விபரம் | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| 04. | வருமானங்கள் | 918,524,428.11 | 687,539,179.30 | 687,539,179.30 |
| | வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் (OSS) | 777,079,501.28 | 559,570,672.40 | 559,570,672.40 |
| | விமானமேற்றல் வரி மீதான சேவைக் கட்டணங்கள் | 92,897,230.67 | 84,632,690.14 | 84,632,690.14 |
| | அனுமதிப் பத்திரங்களின் ஆரம்ப வழங்குகைகள் மற்றும் புதுப்பித்தல்கள் | 17,118,445.73 | 15,896,296.50 | 15,896,296.50 |

| | | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| | பரீட்சைக் கட்டணங்கள் | 4,546,056.19 | 2,532,726.75 | 2,532,726.75 |
| | ஏனைய நியதிச் சேவைக் கட்டணங்கள் | 19,510,535.24 | 17,994,188.00 | 17,994,188.00 |
| | ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 7,372,659.00 | 6,912,605.51 | 6,912,605.51 |
| 05. | ஏனைய வருமானங்கள் | 70,467,194.05 | 59,435,660.43 | 56,518,764.43 |
| | பல்வேறு வகையுடைய வருமானங்கள் | 879,972.43 | 165,959.33 | 165,959.33 |
| | வாடகை வருமானங்கள் | 115,503.25 | 80,283.75 | 80,283.75 |
| | நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபங்கள் | - | 440,519.25 | 440,519.25 |
| | ஊழியர் கடன்களின் மீதான வட்டி வருமானம் (IFRS) | 4,109,609.00 | 2,916,896.00 | - |
| | அரசாங்க நன்கொடைத் தீர்ப்பனவு | 606,054.00 | - | - |
| | வட்டி வருமானங்கள் | | | |
| | ஊழியர் கடன்களிலிருந்தான வட்டி | 2,928,507.31 | 2,153,770.85 | 2,153,770.85 |
| | அரச முறிகளிலிருந்தான வட்டி | 20,433,433.92 | 43,505,705.82 | 43,505,705.82 |
| | நிலையான வைப்புக்களிலிருந்தான கடன் வட்டி | 31,142,884.22 | 831,276.71 | 831,276.71 |
| | அழைப்பு வைப்புக்களிலிருந்தான கடன் வட்டி | 8,842,495.67 | 9,341,248.72 | 9,341,248.72 |
| | விமானமேறல் வரியிலிருந்தான வட்டி | 1,408,734.25 | - | - |
| 06. | ஊழியர் செலவீனங்கள் | 148,638,658.02 | 131,741,781.67 | 128,824,885.67 |
| | சம்பளங்களும் கூலிகளும் | 59,821,258.92 | 53,145,019.80 | 53,145,019.80 |
| | ஏனைய படிகள் | 46,761,582.30 | 37,533,224.62 | 37,533,224.62 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 14,963,426.50 | 12,133,292.52 | 12,133,292.52 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 2,991,966.01 | 2,427,978.38 | 2,427,978.38 |
| | PAYE வரி | 2,324,857.76 | 2,967,595.83 | 2,967,595.83 |
| | மிகையூதியம் | 3,543,736.03 | 3,685,959.32 | 3,685,959.32 |
| | நலன்புரிச் செலவுகள் | 8,993,452.88 | 11,191,509.98 | 11,191,509.98 |
| | பணிக்கொடை | 1,767,642.50 | 1,781,080.00 | 1,781,080.00 |
| | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 3,361,126.12 | 3,959,225.22 | 3,959,225.22 |
| | கடன் நன்மைகள் மீதான ஊழியர் செலவுகள் (IFRS சீராக்கங்கள்) | 4,109,609.00 | 2,916,896.00 | - |
| 07. | கூட்டங்கள், கருத்தரங்குகள், மற்றும் வேலைப்பட்டறைகள் | 26,794,066.10 | 18,970,807.98 | 18,970,807.98 |
| | வேலைப்பட்டறைகளும் கருத்தரங்குச் செலவுகளும் | | | |
| | உள்நாடு | 6,384,027.94 | 2,781,417.45 | 2,781,417.45 |
| | வெளிநாடு | 20,410,038.16 | 16,189,390.53 | 16,189,390.53 |
| 08. | பயிற்சியளித்தற் செலவுகள் | 20,106,117.69 | 22,380,262.52 | 22,380,262.52 |
| | பயிற்சியளித்தற் செலவுகள் | | | |
| | உள்நாடு | 2,955,351.00 | 968,788.48 | 968,788.48 |

| | | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| | வெளிநாடு | 16,914,549.50 | 20,172,546.78 | 20,172,546.78 |
| | சிவில் விமானப் போக்குவரத்துப் பயிற்சியளித்தற் கல்லூரிச் செலவுகள் | 236,217.19 | 1,238,927.26 | 1,238,927.26 |
| 09. | நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் | 148,764,416.90 | 120,735,518.27 | 120,735,518.27 |
| | இயக்குனர் சபைக் கொடுப்பனவுகள் | 1,556,250.00 | 617,500.00 | 617,500.00 |
| | காகிதாதிகள் மற்றும் நுகர்வுப் பொருட் செலவுகள் | 5,006,745.34 | 4,757,560.74 | 4,757,560.74 |
| | ஏனைய வினியோகங்களுக்கான செலவுகள் | 501,358.59 | 650,560.18 | 650,560.18 |
| | தொலைதொடர்பு | 4,260,690.86 | 3,889,075.73 | 3,889,075.73 |
| | தபாற் செலவுகள் | 216,215.23 | 157,056.22 | 157,056.22 |
| | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கான அங்கத்துவ மற்றும் பங்களிப்புச் செலவுகள் | 16,280,565.63 | 15,486,426.19 | 15,486,426.19 |
| | பரீட்சைக் கட்டணங்கள் | 216,308.43 | 579,209.57 | 579,209.57 |
| | பதிப்புச் செலவுகள் | 2,201,553.24 | 1,362,503.46 | 1,362,503.46 |
| | வான் கட்டண மற்றும் அனுமதிச் சீட்டு கற்கைநெறிச் செலவுகள் | 361,031.89 | 380,268.09 | 380,268.09 |
| | உள்ளக மற்றும் வெளியக கூட்டங்களுக்கான செலவுகள் | 1,190,651.48 | 1,217,637.80 | 1,217,637.80 |
| | மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பேற்றற் செலவுகள் | 106,991.11 | - | - |
| | ஆதனங்கள், பொறி, மற்றும் உபகரணங்களின் பராமரிப்புச் செலவுகள் | 1,160,536.65 | 1,401,512.36 | 1,401,512.36 |
| | எரிபொருள் செலவுகள் | 7,595,356.24 | 4,791,129.40 | 4,791,129.40 |
| | வாகன பராமரிப்பு | 6,904,174.63 | 4,811,114.27 | 4,811,114.27 |
| | வாடகை மற்றும் குத்தகைக் கட்டணங்கள் | 1,055,532.26 | 1,462,288.08 | 1,462,288.08 |
| | அலுவலகக் கட்டடம் மற்றும் விடுதிகள் மீதான செலவுகள் | 47,657,085.98 | 55,116,397.34 | 55,116,397.34 |
| | தேச நிர்மாண வரி | 569,702.00 | 595,128.00 | 595,128.00 |
| | தேசத்தின் மகுடம் கண்காட்சி | 6,309,271.99 | 5,473,873.16 | 5,473,873.16 |
| | விமானப் போக்குவரத்து அபிவிருத்தி | 4,583,246.91 | 5,802,932.19 | 5,802,932.19 |
| | தகவற் தொழிநுட்ப விருத்தி | 273,558.85 | 6,986,497.51 | 6,986,497.51 |
| | நன்கொடைகள் | 350,000.00 | - | - |
| | விமானப் போக்குவரத்துக் கொண்டாட்டங்கள் | 11,385,293.44 | - | - |
| | ஒழுங்குவிதி விருத்தியாக்கல் | 27,752,849.25 | - | - |
| | நானாவிதச் செலவுகள் | 1,043,604.31 | 5,196,847.98 | 5,196,847.98 |
| | நிலையான சொத்து விற்பனை மீதான நட்டம் | 225,842.59 | - | - |
| 10. | வரியியல் | 94,705,416.11 | 199,054,612.09 | 197,292,954.44 |
| | வருமானவரி | 173,075,394.63 | 197,292,954.44 | 197,292,954.44 |
| | வருமானவரி- முன்னைய ஆண்டு மிகை ஏற்பாடு | (77,201,590.87) | - | - |
| | பிற்போடப்பட்ட வரி | (1,168,387.65) | 1,761,657.65 | - |

## 11. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | 01.01.2012 இல் மீதி | சேர்ப்புக்கள்/ மாற்றங்கள் | விற்பனைகள் | 31.12.2012 இல் மீதி | 31.12.2011 இல் மீதி |
|---|---|---|---|---|---|
| கிரயம்/ மறுமதிப்பு | | | | | |
| காணி | 5,359,200.00 | - | - | 5,359,200.00 | 5,359,200.00 |
| கட்டடம் | 11,382,182.05 | 1,883,500.00 | - | 13,265,682.05 | 11,382,182.05 |
| வாகனங்கள் | 69,551,758.49 | 18,376,874.66 | - | 87,928,633.15 | 69,551,758.49 |
| பொறி, இயந்திரம் | 50,831,115.44 | 2,861,002.28 | (1,547,614.00) | 52,144,503.72 | 50,831,115.44 |
| தகவற் தொழிநுட்ப மென்பொருள் | - | 8,680,747.51 | - | 8,680,747.51 | - |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 28,573,765.62 | 157,148.69 | (2,314,296.01) | 26,416,618.30 | 28,573,765.62 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 999,079.00 | - | - | 999,079.00 | 999,079.00 |
| | 166,697,100.60 | 31,959,273.14 | (3,861,910.01) | 194,794,463.73 | 166,697,100.60 |

| | 01.01.2012 இல் மீதி | வருடத்திற்கான பெறுமானத்தேய்வு | விற்பனைகளின் மீதான பெறுமானத்தேய்வு | 31.12.2012 இல் மீதி | 31.12.2011 இல் மீதி |
|---|---|---|---|---|---|
| பெறுமானத்தேய்வு | | | | | |
| கட்டடம் | 5,594,057.74 | 715,854.13 | - | 6,345,911.87 | 5,594,057.74 |
| வாகனங்கள் | 18,940,155.35 | 10,314,192.61 | - | 29,254,347.96 | 18,940,155.35 |
| பொறி, இயந்திரம் | 22,895,982.42 | 5,948,971.47 | (1,346,211.25) | 27,498,742.64 | 22,895,982.42 |
| தகவற் தொழிநுட்ப மென்பொருள் | - | 3,835,088.51 | - | 3,835,088.51 | - |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 8,218,390.58 | 5,650,812.34 | (1,849,356.17) | 12,019,846.75 | 8,218,390.58 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 949,036.00 | - | - | 949,036.00 | 949,036.00 |
| | 56,597,622.09 | 26,500,919.06 | (3,195,567.42) | 79,902,973.73 | 56,597,622.09 |
| குறைத்து எழுதப்பட்ட பெறுமதி | - | - | - | 114,891,490.00 | 110,099,478.51 |

| | | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| 12. | இருப்புக்கள் | 6,934,256.43 | 1,586,231.16 | 1,586,231.16 |
| | நுகரத்தக்க இருப்புக்கள் | 2,104,256.43 | 1,586,231.16 | 1,586,231.16 |
| | நடைபெறும் வேலைகள் | 4,830,000.00 | - | - |
| 13. | வியாபாரப் பெறுவனவுகள் மற்றும் ஊழியர் கடன்கள் | 180,555,880.06 | 138,910,733.59 | 151,575,041.59 |
| | ஓ.எஸ்.எஸ் மற்றும் நியதிச் சேவை வருமானப் பெறுவனவுகள் | 144,073,407.09 | 101,053,047.85 | 101,053,047.85 |
| | ஏனைய கடன்பட்டோர்கள் | 1,013,855.11 | 5,039,897.72 | 5,039,897.72 |
| | ஊழியர் கடன்கள் | 53,176,212.86 | 45,482,096.02 | 45,482,096.02 |
| | கழி-பிற்போடப்பட்ட ஊழியர் செலவுகள் | (17,707,595.00) | (12,664,308.00) | - |
| 14. | நிதிச் சொத்துக்கள் | 543,528,106.43 | 502,513,280.00 | 502,513,280.00 |
| | நிலையான வைப்புக்கள் | 84,657,875.00 | 8,289,242.00 | 8,289,242.00 |
| | திறைசேரி உண்டியல்கள் | 458,870,231.43 | 494,224,038.00 | 494,224,038.00 |
| 15. | முற்பணங்கள், முன்கூட்டிய கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 136,448,863.07 | 124,274,758.74 | 111,610,450.74 |
| | முற்பணங்கள் | 4,357,584.24 | 2,675,560.86 | 2,675,560.86 |
| | முன்கூட்டிய கொடுப்பனவுகள் | 46,378,640.19 | 41,546,415.51 | 41,546,415.51 |
| | VAT பெறுவனவுகள் | 32,688,455.07 | 31,692,486.18 | 31,692,486.18 |
| | வட்டி வருமானப் பெறுவனவுகள் | 35,316,588.57 | 35,695,988.19 | 35,695,988.19 |
| | முற்கூட்டிச் செலுத்தப்பட்ட ஊழியர் செலவுகள். | 17,707,595.00 | 12,664,308.00 | - |
| 16. | காசும் காசுக்குச் சமமானவையும் | 220,447,275.51 | 208,877,789.26 | 208,877,789.26 |
| | வங்கியில் காசு | 40,447,275.51 | 61,877,789.26 | 61,877,789.26 |
| | குறுங்கால முதலீடுகள் | 180,000,000.00 | 147,000,000.00 | 147,000,000.00 |
| 17. | பெறப்பட்ட நன்கொடைகள் | 8,562,380.05 | 9,168,434.05 | 9,168,434.05 |
| | காணி | 5,359,200.00 | 5,359,200.00 | 5,359,200.00 |
| | கட்டடம் | 3,620,539.95 | 4,226,593.95 | 4,226,593.95 |
| | ஏனைய நிலையான சொத்துகள் | 188,694.10 | 188,694.10 | 188,694.10 |
| | மொத்தம் | 9,168,434.05 | 9,774,488.05 | 9,774,488.05 |
| | குறித்த வருடத்தில் தீர்ப்பனவு | (606,054.00) | (606,054.00) | (606,054.00) |
| | 31.12.2012 இல் மீதி | 8,562,380.05 | 9,168,434.05 | 9,168,434.05 |
| 18. | மீள்மதிப்பீட்டு மிகை | 13,485,465.44 | 13,485,465.44 | 13,485,465.44 |
| | வாகனங்கள் | 4,720,625.00 | 4,720,625.00 | 4,720,625.00 |
| | பொறி, இயந்திரம், மற்றும் உபகரணங்கள் | 3,855,992.93 | 3,855,992.93 | 3,855,992.93 |
| | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 4,908,847.51 | 4,908,847.51 | 4,908,847.51 |

| | | SLFRS 31.12.2012 (ரூபா) | SLFRS 31.12.2011 (ரூபா) | SLAS 31.12.2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| 19. | பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 4,762,194.44 | 5,930,582.09 | - |
| | 01.01.2012 இல் மீதி | 5,930,582.09 | 4,168,924.44 | - |
| | வருடத்திற்கான புறமாற்றல் | (1,168,387.65) | 1,761,657.65 | - |
| | 31.12.2012 இல் மீதி | | | |
| 20. | ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 259,676,305.00 | 259,413,871.00 | 259,413,871.00 |
| | காப்பீட்டுக்கான ஏற்பாடு | 630,300.00 | 562,850.00 | 562,850.00 |
| | ஊழியர் நலன்புரி நிதியம் | 418,005.00 | 361,021.00 | 361,021.00 |
| | விபத்து விசாரணை நிதியத்திற்கான ஏற்பாடு | 250,000,000.00 | 250,000,000.00 | 250,000,000.00 |
| | பெறப்பட்ட வைப்புக்கள் | 8,628,000.00 | 8,490,000.00 | 8,490,000.00 |
| 21. | இளைப்பாற்று நன்மைகளுக்கான கடப்பாடுகள் | 10,270,927.50 | 9,239,870.00 | 9,239,870.00 |
| | 01.01.2012 இல் மீதி | 9,239,870.00 | 7,848,950.00 | 7,848,950.00 |
| | வருடத்திற்கான ஏற்பாடுகள் | 1,767,642.50 | 1,781,080.00 | 1,781,080.00 |
| | குறித்த வருடத்திற் செலுத்தப்பட்டது | (736,585.00) | (390,160.00) | (390,160.00) |
| 22. | வியாபார சென்மதிகள் | 282,872,312.57 | 254,868,404.05 | 254,868,404.05 |
| | சோதனை கட்டணங்கள் மற்றும் செயற்பாடுகள் மீதான வைப்புக்கள் | 8,418,271.41 | 8,853,968.31 | 8,853,968.31 |
| | விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் அரச பொதுத்தினசேரி | 270,521,941.16 | 246,014,435.74 | 246,014,435.74 |
| | ஏனைய சென்மதிகள் | 3,932,100.00 | - | - |
| 23. | ஏனைய சென்மதிகள் | 43,274,312.31 | 8,513,660.64 | 8,513,660.64 |
| | சென்மதிச் செலவுகள் | | | |
| | - ஊழியர் செலவுகள் | 4,070,880.75 | 3,744,960.52 | 3,744,960.52 |
| | - பொதுச் செலவுகள் | 39,203,431.56 | 4,768,700.12 | 4,768,700.12 |
| 24. | வருமானவரிப் பொறுப்புக்கள் | 90,600,765.82 | 106,159,937.71 | 106,159,937.71 |
| | 01.01.2012 இல் மீதி | 106,159,937.71 | 73,184,496.45 | 73,184,496.45 |
| | வருடத்திற்கான ஏற்பாடுகள் | 95,890,893.56 | 197,292,954.44 | 197,292,954.44 |
| | வருடத்தில் செலுத்தப்பட்டவைகள் | (111,450,065.45) | (164,317,513.18) | (164,317,513.18) |
| | 31.12.2012 இல் மீதி | | | |

25. முன்னைய வருடச் சீராக்கங்கள்

முன்னைய வருட சீராக்கங்களின் தொகுப்பு பின்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட வரி | (25.1) | 110,632,274.00 |
| மூலதனப்படுத்தப்பட்ட செலவுகள் | (25.2) | 6,986,497.51 |

25.1. இது 2009 மற்றும் 2010 நிதி வருடங்களுக்காக வருமானவரிச் சட்டத்தின் பிரிவு 62.C இன் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட தொகையினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

25.2. 2010 இல் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் கணக்கீடு மீதான ரூபா 6 மில்லியன் பெறுமதியில் ஏற்பட்ட மூலதனச் செலவுகள் அதிகாரசபையின் 2011 நிதிவருடத்தில் செலவுசெய்யப்பட்டது. இந்த தவறு நடப்பு நிதிவருடத்தில் திருத்தப்பட்டது.

26. இது 1978 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) இல் குறிப்பிட்டது போன்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தேறிய மிகை வருமானத்தின் பங்கீட்டிகை வெளிப்படுத்துகின்றது.

## 26. IFRS சீராக்கங்கள்

| | | |
|---|---|---|
| 01.01.2011 இல் SLAS ஐந்தொகையின் படி நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 634,152,304.21 |
| 2010 இல் IFRS சீராக்கங்கள் (பிற்போடப்பட்ட வரி) | (3) | (4,168,924.44) |
| 01.01.2011 இல் SLFRS ஐந்தொகையின் படி நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 629,983,379.77 |
| வருடத்திற்கான இலாபம் | | 29,843,114.95 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | | 9,855,551.66 |
| தேறிய மிகையின் பகிர்தல்கள் | | (250,000,000.00) |
| 01.01.2012 இல் SLFRS ஐந்தொகையின் படி நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 419,482,046.38 |
| வருடத்திற்கான இலாபம் | | 523,464,938.48 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்கள் | | (103,645,776.49) |
| தேறிய மிகையின் பகிர்தல்கள் | | (350,000,000.00) |
| 31.12.2012 இல் SLFRS ஐந்தொகையின் படி நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 489,301,208.57 |

26.1 1 ஜனவரி 2011 இல் ஆரம்ப ஐந்தொகை

| | குறிப்பு | **SLFRS 01.01.2011** (ரூபா) | சீராக்கங்கள் (ரூபா) | **SLAS 01.01.2011** (ரூபா) |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | 1,068,151,620.35 | | 1,068,151,620.35 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | 50,449,662.26 | | 50,449,662.26 |
| ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்கள் | | 50,449,662.26 | | 50,449,662.26 |
| நடப்புச் சொத்துக்கள் | | 1,017,701,958.09 | | 1,017,701,958.09 |
| இருப்புக்கள் | | 1,193,297.32 | | 1,193,297.32 |
| வியாபார பெறவேண்டியவையும் ஊழியர் கடன்களும் | (1.1) | 98,156,065.13 | (7,314,918.00) | 105,470,983.13 |
| நடப்பு முதலீடுகள் | | 685,742,459.97 | | 685,742,459.97 |
| முற்பணங்கள், முன்கூட்டிச் செலுத்தியவைகள் மற்றும் பெறவேண்டியவைகள் | (1.2) | 63,415,448.87 | 7,314,918.00 | 56,100,530.87 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | | 169,194,686.80 | | 169,194,686.80 |
| உரிமை மற்றும் பொறுப்புக்கள் | | 1,068,151,620.35 | | 1,068,151,620.35 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | 653,409,869.73 | | 657,578,794.17 |
| அரச நன்கொடைகள் | | 9,774,488.05 | | 9,774,488.05 |
| ஒதுக்க மிகைகள் | | 13,652,001.91 | | 13,652,001.91 |
| திரட்டிய இலாபங்கள் | (2) | 629,983,379.77 | (4,168,924.44) | 634,152,304.21 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | 67,086,659.44 | | 62,917,735.00 |
| ஏற்பாடுகளும் ஏனைய பொறுப்புக்களும் | | 55,068,785.00 | | 55,068,785.00 |
| இளைப்பாற்று நன்மைகள் கடப்பாடு | | 7,848,950.00 | | 7,848,950.00 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | (3) | 4,168,924.44 | 4,168,924.44 | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 347,655,091.18 | | 347,655,091.18 |
| வியாபாரச் சென்மதிகள் | | 268,312,766.87 | | 268,312,766.87 |
| ஏனைய சென்மதிகள் | | 6,157,827.86 | | 6,157,827.86 |
| வருமானவரிப் பொறுப்புக்கள் | | 73,184,496.45 | | 73,184,496.45 |

உரிமைமாற்ற இணக்கக் கூற்று

| | |
|---|---|
| 01 ஜனவரி 2011 இல் திரட்டப்பட்ட இலாபம் | 634,152,304.21 |
| கழி: பிற்போடப்பட்ட வரி | (4,168,924.44) |
| 01 ஜனவரி 2011 இல் ஐ.எவ்.ஆர்.எஸ் செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்ட பின்னரான நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | 629,983,379.77 |

26.2 பின்வரும் **IFRS** சீராக்கங்கள் 31 டிசம்பர் 2011 இல் முடிவுற்ற ஆண்டிற்காகச் செய்யப்பட்டன.

அ. ஊழியர் கடன்கள்

31 டிசம்பர் 2011 இல் வெளிநின்ற ஊழியர் கடன்கள் தீர்க்கப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்பட்டதுடன், இதன் விளைவாக, பிற்போடப்பட்ட வரிச் செலவு மீதி மற்றும் IFRS சீராக்கற் கணக்கு மீதி 31 டிசம்பர் 2011 இல் வெளியீட்டுச் சீராக்கத்தினை பிரதிநிதித்துவஞ் செய்ய அதிகரித்தது.

அதிக தாக்கத்திற்கு உள்ளாக்காத வீதங்களில் கொடுக்கப்பட்ட ஊழியர் கடன்களின் கணக்குகள் மீது கொடுக்கப்பட்ட ஊழியர் நன்மையானது ரூபா 2,916,896.00 என மதிப்பிடப்பட்டதுடன், 2011 இல் ஊழியர் செலவாக அறவிடப்பட்டது. மேலும், அதே தொகை 2011 இல் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் ஏனைய வருமானம்- IFRS சீராக்கம் என இனங்காட்டப்பட்டது.

ஆ. 2011 கான பிற்போடப்பட்ட வரி கணிப்பீடு செய்யப்பட்டது. 2011 காக ரூபா 1,761,657.65 தொகையுடைய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பின் எதிர்வடிவமொன்றைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

ரீசீ/பி/சீஏஏஎஸ்எல்/எப்ஏ/2012 2012.12.07

தலைவர்,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2013 நவெம்பர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை நிதிக்கூற்றுக்கள் அறிக்கையிடல் நியமம் 01 இன் 24 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட உரிமைத்துவம் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு மாற்றப்படும் போது ஏற்பட்ட தாக்கங்களுடன் ஒப்பிடப்பட்டு இணக்கக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடனின் அளவு பதவியணியினரின் கடன் பதிவேடு மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 175,742 ஆன விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் இருந்தன.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| கடன்பட்டோர் | 259,470,945 | மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்களும் காலப்பகுப்பாய்வும் |
| கடன்கொடுத்தோர் | 322,075,745 | - மேற்படி – |
| முன்னைய ஆண்டின் சீராக்கம் | 103,646,766 | விரிவான பட்டோலைகள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்களும் |

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | |
| (i) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் 10(5) ஆம் பிரிவு | பகிர்விற்குப் பின்னர் எஞ்சியிருக்கும் வருமான மிகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2003 ஆம் ஆண்டிலிருந்து 2012 திசெம்பர் 31 வரை ரூபா 489,967,146 தொகையான திரண்ட இலாபத்தை முறைப்படி திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 111 (அ) பிரிவு | சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் அவர்களின் சம்பளத்திற்கும் ஏனைய உழைப்புக்களுக்காகவும் உழைக்கும் போதே செலுத்தும் வரியை தனிப்பட்ட சம்பளத்திலிருந்து செலுத்த வேண்டிய போதிலும், 2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 06 ஆண்டுகளுக்காக ரூபா 14,241,598 கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

-----------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் அந்த நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும், 04 வாகனங்களுக்கு அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) (ii) | 2008 யூன் 26 ஆம் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துப் பெறாத உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 20,000 உம் அலுவலக உதவியாளர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மாத மொன்றிற்கு ரூபா 13,250 மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவொன்றும் செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் சுற்றறிக்கைக்கு முரணாக அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை முறையே ரூபா 20,967,837 மற்றும் ரூபா 28,348,259 ஆக இருந்தன. |

(ii) சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோக பூர்வ வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்து இல்லாத இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 20,860 வீதம் ரூபா 500,640 தொகையும் மேலும் 8 பேருக்கு மாதமொன்றிற்கு ரூபா 17,880 வீதம் ரூபா 1,716,480 தொகையுமாக ரூபா 2,217,120 தொகை எரிபொருள் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டி

அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்களுக்காக அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்கு ரூபா 106,021,080 ஆன கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

---

(i) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை

(i) மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 05 உத்தியோகத்தர்களுக்கு துறைசார் கொடுப்பனவாக ரூபா 10,000 முதல் 25,000 வரையான கொடுப்பனவுகளும் மேலும் 4 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 750 முதல் ரூபா 5,000 வரையான விசேட கொடுப்பனவொன்றும் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த கொடுப்பனவு ரூபா 1,912,880 ஆக இருந்தது.

(ii) அப்போதைய பணிப்பாளர் நாயகத்தின் பதவியில் பதில் கடமை புரிவதற்காக சிரேஷ்ட பணிப்பாளர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 17,625 ஆன பதில் கடமைக் கொடுப்பனவு 2010 மே முதல் அவர் பதில் கடமை புரிவதிலிருந்து விலகியதன் பின்னரும் விசேட

| | | |
|---|---|---|
| | | கொடுப்பனவாக சம்பளத்துடன் சேர்த்துக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2010 மே மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்தக் கொடுப்பனவுகள் ரூபா 528,750 ஆக இருந்தது. |
| (ii) 2003 யூன் 02 ஆம் திகதிய பீசீடி/12 ஆம் இலக்கு சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவு | | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் அவர்களின் சகல குடும்ப அங்கத்தவர்களுக்கும் வைத்தியசாலை மற்றும் சத்திரசிகிச்சை என்பவற்றிற்காக முழுமையான காப்புறுதி மேவுகை யொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,494,638 ஆன பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் காப்புறுதி மேவுகைக்காக ஒரு ஊழியருக்காக வருடாந்த காப்புறுதி தவணையாக ரூபா 38,400 முதல் 60,600 வரையான அளவில் காணப்பட்டது. |
| (iii) 2006 ஒக்தோபர் 9 ஆம் திகதிய பீசீடி 39 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையைக் கருத்திற் கொள்ளாமல் அதிகாரசபையின் நான்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு வரையறையொன்று இல்லாமல் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன. கூடுதலாக வழங்கப்பட்ட எரிபொருளின் பெறுமதி ரூபா 1,598,004 ஆக இருந்தது. |
| | (ii) | மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிக மாக பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக இன்னுமோர் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ் வாகனத்திற்கு மீளாய்வாண்டில் எரிபொருளுக்காக ரூபா 464,850 செலவிடப்பட்டிருந்தது. |

(உ) முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை

2012 திசெம்பர் 24 ஆம் திகதிய 49 ஆம் இலக்க சுற்றறிக்கை

சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளில் ஆகக்கூடுதலாக ரூபா 10,000 இற்குச் சமமான உபகாரக் கொடுப்பனவொன்று செலுத்த முடியுமான போதிலும், அதனைக் கருத்திற் கொள்ளாமல் மாதத்தின் ஆரம்ப சம்பளத்திற்குச் சமமான தொகை யொன்றை உபகாரக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்திற்கு உபகாரக் கொடுப்பனவாக ரூபா 79,750 ஆக இருந்தது. எவ்வாறாயினும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்த உபகாரக் கொடுப்பனவு 3,543,736 ஆக இருந்தது.

(ஊ) திறைசேரிச் சுற்றறிக்கை

2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை

கணனி மற்றும் உப பாகங்கள் என்பன உள்ளடக்கப்பட்ட வேறான பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 618,187,444 இலாபமாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 228,897,727 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 389,289,717 தொகையான சாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானமும் சேவைகளை வழங்குவதால்

கிடைத்த வருமானமும் அதிகரித்தமையே மீளாய்வாண்டில் நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வுடன் கூடிய நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் விமானப் பயணிகள் அசைவு அதிகரித்தமையும் வெளிநாட்டு விற்பனை மிகை அறவீடு வருமானம் அதிகரித்தமையால் திரட்டிய வருமானம் 32.40 சதவீதத்தாலும் பதவியணியினருக்கான செலவினம், வெளிநாட்டு கருத்தரங்கு பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றிற்கான செலவினம் மற்றும் நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினம் 16.57 சதவீதத்தாலும் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது விபத்து புலனாய்வு நிதியத்திற்கு எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டின் திரண்ட செலவினம் 28.43 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

ஆகையால் மீளாய்வாண்டின் வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த இலாபமும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 170.07 ஆல் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் தொடர்பான பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | விடயம் | விபரம் | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| (அ) | விமான நகர்வுகள் | (i) வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் - மணித்தியாலம் | 1,782 | 1,782 | 1,317 |
| | | (ii) நிரந்தர விமானப் போக்கு வரத்து மணித்தியாலம் | 46,616 | 41,891 | 32,590 |
| (ஆ) | பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வு (எண்ணிக்கை) | (i) விமான தகைமை | -- | 01 | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (ii) செயற்பாடு | | | 01 |
| | | (iii) ஒன்றிணைந்த (செயற்பாடும் தகைமையும்) | -- | -- | -- |
| | | (iv) உலங்கு வானூர்தி | -- | -- | -- |
| | | (v) விமான அசைவு சேவைகள் | 01 | 01 | -- |
| (இ) | நிறைவேற்றப்பட்ட வசதிகள் / பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாடுகள் (எண்ணிக்கை) | (i) ரேம்ப் ஆராய்ச்சி எண்ணிக்கை (விமானங்களின் தகைமை) | -- | 65 | 30 |
| | | (ii) ரேம்ப் ஆராய்ச்சி எண்ணிக்கை (ஒன்றிணைந்த) | --- | -- | -- |
| | | (iii) உலங்கு வானூர்தி | -- | 20 | 09 |
| | | (iv) அபாயகரமான பொருட்கள் | -- | 35 | 08 |
| | | (v) பராமரிப்பு பாடசாலை பரிசோதனை (விமான தகைமை) | -- | -- | -- |

விமான செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது ஏற்படும் விமான விபத்து நிகழ்வுகள் மற்றும் அது தொடர்பான அறிக்கையிடல் பரிசோதனைகளை நடாத்துதல், உரிய கோவைகள் மற்றும் அந்த சம்பவங்களை குறைப்பதற்காக அதிகாரசபை எடுத்துள்ள நடவடிக்கைகள் வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வினால் கோரப்பட்ட அது தொடர்பான எந்தவொரு விபரத்தையும் கணக்காய்விற்கு வழங்கப்படாமையால் அதிகாரசபையின் செயலாற்றல் தொடர்பான விரிவான பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள முடியவில்லை.

விமான விபத்துக்களை பரீட்சிப்பது தொடர்பாக உரிய தகவல்கள் தொடர்பில் காணப்படும் 2010 இன் 14 ஆம் ஆண்டின் சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 57 மற்றும் 61 ஆம் பிரிவின் பிரகாரமும் அச்சட்டத்தின் இரண்டாம் பிரிவினால் அமுலாக்கப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 19 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான பரிசீலனையின் மற்றும் தரவுகளுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்காக கோரப்பட்டிருந்தது. அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல் சட்டத்தினால் தடை செய்யப்பட்டி ருப்பதாகவும் அத்தகவல்களை வழங்குவது தொடர்பான வேண்டுகோளுக்கான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின்

செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் எனக்கு தெரிவித்திருந்தார்.

## 4.2 சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளுக்கான கட்டணங்களை திருத்தம் செய்யாமை

அதிகாரசபையால் விமான ஓட்டுனர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், உயரமான கட்டிடங்களுக்காக அங்கீகாரம் வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் கடந்த 07 ஆறு ஆண்டுகளில் எவ்வித திருத்தங்களுக்கும் உட்படாமல் இருந்தன. இறுதியாக 2006 ஆம் ஆண்டில் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டிருந்தன.

கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) கட்டண அறவீடுகள்

| அனுமதிப்பத்திர வகை | ஆரம்ப அனுமதிப்பத்திரக் கட்டணம் | மதிப்பீட்டுக் கட்டணம் | புதுப்பித்தல் | புதுப்பித்தல் மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஓட்டுனர் - மாணவர் | 690 | 500 | 345 | 250 |
| ஓட்டுனர் - தனிப்பட்ட | 1,380 | 500 | 690 | 250 |
| ஓட்டுனர் - வர்த்தகம் | 4,140 | 1,500 | 1,035 | 750 |
| ஓட்டுனர் - விமானப் போக்குவரத்து | 6,900 | 2,000 | 1,725 | 1,000 |
| விமான சமிக்ஞை கட்டுப்பாடு | 1,380 | 500 | 345 | 750 |
| விமான செயற்பாட்டு பொறியியலாளர் | 2,070 | 1,500 | -- | -- |

### (ஆ) அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

| **அனுமதிப்பத்திரங்கள் வகை** | **2012 எண்ணிக்கை** | **2011 எண்ணிக்கை** | **2010 எண்ணிக்கை** |
|---|---|---|---|
| ஓட்டுனர் - மாணவர் | 155 | 115 | 142 |
| ஓட்டுனர் - தனிப்பட்ட | 94 | 98 | 76 |

| | | | |
|---|---|---|---|
| ஓட்டுனர் - வர்த்தகம் | 264 | 317 | 300 |
| ஓட்டுனர் - விமானப் போக்குவரத்து | 414 | 382 | 359 |
| விமான சமிக்ஞை கட்டுப்பாடு | 44 | 81 | 91 |
| விமான செயற்பாட்டு பொறியியலாளர்கள் | 113 | 173 | 283 |

**4.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

----------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபைக்கு உரித்தில்லாத வாடகைக்கு பெற்றுக்கொண்ட கட்டிடத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக ரூபா 3.5 மில்லியனுக்கு அதிகமான தொகையொன்று அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினம் உரிய கட்டிட வாடகையிலிருந்து எதிரீடு செய்வது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடமொன்றின் வாடகை ஒப்பந்தத்தில் வருடாந்தம் அதிகரிக்கும் வீதவரிக் கட்டணம் அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற பாதகமான நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது மேலதிகமாக ரூபா 317,100 தொகையான வீதவரிகள் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) 3 ஆண்டு குறுகிய காலப்பகுதிக்காக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் களஞ்சிய அறை மற்றும் சாரதிகள் இளைப்பாறும் அறை என்பவற்றை நிர்மாணித்தல், முதலாம் மூன்றாம் மாடிகளில் நுழைவு கதவுகளைப் பொருத்துதல் போன்ற நிர்மாணங்களுக்காக மொத்தம் ரூபா 28,214,123 தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) விமானசேவை பரிசோதகர்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ஒன்று ரூபா 475 வீதம் 525 கழுத்துப்பட்டிகள் ரூபா 249,375 இற்கு கொள்வனவு

செய்யப்பட்டிருந்ததுடன், அக்கழுத்துப்பட்டிகள் குறித்த தரத்திற்கு பொருந்தாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் பதவியணிக்கு உரித்தாகாத வெளிநபர்களுக்காக வருகை அட்டை (Visiting Card) அச்சிடுவதற்காக ரூபா 11,000 அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) 2011 ஆம் ஆண்டின் போது இலங்கையின் சிவில் விமான சேவைக்கு நூறு வருட நிறைவு விழா அவ்வாண்டின் போது நடாத்தப்படாமல் அதனை வரிசை அமைச்சினதும் ஏனைய இணை நிறுவனங்களின் ஒத்துழைப்பு இல்லாமல் 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தியமையால் ரூபா 14,000,000 இற்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) சிவில் விமான சேவை பிரதிப் பணிப்பாளர் (உலங்கு வானூர்தி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (விமானம் பறத்தல்) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் (SOR) விமானப் பயணக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் (ATC) கண்டிப்பாக இருக்க வேண்டிய போதிலும், அந்த தகைமை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 25,000 துறைசார் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், வருடாந்தம் புதுப்பிக்க வேண்டிய இந்த அனுமதிப்பத்திரம் வருடக் கணக்காக புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னால் இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் விமானப் போக்குவரத்து ஓட்டுனர் அனுமதிப்பத்திரத்தை (ATPL) வைத்திருப்பதன் அடிப்படையில் மாதமொன்றிற்கு ரூபா 75,000 வீதம் துறைசார் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) அதிகாரசபையின் இயக்குனர் சபையின் 5 பேர் உட்பட துண்டு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 02 உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வைத்தியசாலை மற்றும் சிகிச்சைகளுக்கான காப்புறுதி மேற்கொள்வதற்காக ரூபா 426,200 அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

(ஐ) அமைச்சின் பதவியணிக்கு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அங்கு சேவையில் இருக்கும் போது அதிகாரசபையின் நிரந்தர பதவியணிக்கான நியமனமொன்று வழங்கப்பட்டு சம்பளம், எரிபொருள், மருத்துவ காப்புறுதி மற்றும் வெளிநாட்டுப் பிரயாணம் என்பவற்றிற்காக முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 3,051,897 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த உத்தியோகத்தர் ஒரு நாளேனும் அதிகாரசபையில் சேவைக்காக சமூகமளித்திருக்கவில்லை.

(ஒ) விமான சேவைகள் நடவடிக்கைகளுக்காக மாத்திரம் தாபிக்கப்பட்டுள்ள அதிகாரசபைக்கு விற்பனை மேம்படுத்தல் மதியுரையாளர் பதவியொன்றிற்காக ஒப்பந்த அடிப்படையில் விற்பனை மேம்படுத்தல் மதியுரையாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 80,000 வீதம் 03 மாதங்களுக்காக ரூபா 240,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த உத்தியோகத்தர் ஒரு நாளேனும் சேவைக்கு வருகை தராமல் இருந்ததுடன், எந்தவொரு சேவையையும் நிறைவேற்றியிருக்கவில்லை. மேலும் இந்த நியமனத்திற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஆட்சேர்ப்பு நடைமுறைக் கோவையை பின்பற்றாமல் விமான தகைமை மதியுரையாளராக சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த இலங்கைப் பிரஜை அல்லாத கனடா சிவில் விமான சேவை அதிகாரசபையில் சேவை புரியும் உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாமல் மதியுரையாளராக இரண்டு மாதங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். அவர் அடுத்த நாளே சேவை ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்திருந்த போதும் ஒரு மாத காலத்திற்கு ரூபா 172,250 அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) அதிகாரசபையின் 6 உத்தியோகத்தர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகாரசபை நிதியத்திலிருந்து ரூபா 78,000 செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரசபையின் வளங்கள்**

---

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 3.8.9 ஆம் பிரிவிற்கு முரணாக அமைச்சிற்குரிய நானாவித செலவினங்களுக்காக ரூபா 290,084 தொகை அதிகாரசபையால்

செலவிடப்பட்டிருந்ததுடன், அதிகாரசபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தன. அவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,225,657 அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணி நிர்வாகம்

அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் | 01 | 01 | -- |
| சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 34 | 23 | 11 |
| நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 42 | 35 | 07 |
| செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் | 55 | 54 | 01 |
| அலுவலக உதவியாளர்கள் | 34 | 33 | 01 |
| மொத்தம் | 166 | 146 | 20 |

# 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்


## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே 142 சதவீதம் முதல் 186 சதவீதம் வரையிலான வீச்சில் கருத்திற்கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு அம்சங்களின் பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான சேகரிப்பு
(இ) விமானங்கள் சம்பவப் பரிசீலனை
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) செலவினக் கட்டுப்பாடு
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்
(எ) மனித வள முகாமைத்துவம்



ஒப்பம் :- எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

FN/12/4 2014.03.13

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் திணைக்களம்
பத்தரமுல்லை

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச்சட்டத்தின் 14(2) (C) வாசகத்திற்கமைய கணக்காய்வாளரின் அறிக்கை**

மேற்கூறப்பட்ட அறிக்கை பதங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள மேற்வார்வை தொடர்பில் கருத்துக்கள் தெளிவுபடுத்தல்களை இத்தால் சமர்ப்பிக்கின்றோம்.

## 2.2 நிதிவெளிப்பாடுகள் தொடர்பாக கருத்து தெரிவித்தல்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டுத் தரம்

தங்களது மேற்பார்வையினை நன்றிக்கடன் உடன் ஏற்றுக்கொள்கிறேன்.

2012 நிதியாண்டுக்காக கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய கணக்குகளை தயாரிப்பதற்காக பட்டயக் கணக்காளர் ஒருவரின் உதவி பெறப்பட்டதுடன் தங்களது மேற்பார்வையினை அவருக்கு சமர்ப்பித்து உரிய குறிப்புக்களை உள்ளடக்கி மறுசீரமைக்கப்பட்ட நிதி வெளிப்பாடுகள் மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்

தங்களது மேற்வார்வையினை நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன். இம்மாற்றங்கள் இனங்காணப்பட்ட 2013 இறுதியாண்டு கணக்கீடு தயாரிக்கும்போது உரிய ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.3 கணக்காய்வுக்கான சாட்சிகள் இன்மை

ஐந்தொகையில் உறுதிப்படுத்தும் ஆவணம் உதவிக் காணக்காய்வு அத்தியட்சகர் இற்கு நேரடியாக சமர்ப்பிக்குமாறு சகல கடன்படுநர் மற்றும் கடன் கொடுநருக்கு .2013.02.06 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (முகவரி எழுதப்பட்ட கடித உறையுடன் உறுதிப்படுத்தப்பட்ட) உரிய நிதியாண்டுக்கு முன்னர் ஆண்டின் ஒப்பீடுகள் தொடர்பிலான விளக்கம் உப ஆவணத்தின் மூலம் கோரப்படவில்லை.

### 2.2.4 சட்டங்கள், ஒழுங்குகள், கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை

(அ) பாராளுமன்றச் சட்டம்

(i) இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் முன்னெடுப்பதற்காகவும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் தேசிய வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. இதற்காக தேவையான நிதி அதிகார சபையினால் தனிப்பட்ட ரீதியில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன அத்துடன் 1971 இல. 38 கொண்ட நிதிசட்டத்தின் இல 7 கொண்ட வாசகத்திற்கிணங்க அதிகார சபை பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் முன்னெடுப்பதற்காகவும் தேவையான ஏற்பாடுகள் குறைந்த பட்சம் 5 ஆண்டுகளுக்கு காணப்படுவதால் உறுதிப்படுத்த அதிகார சபையின் பணிப்பாளர் சபை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ள வர்த்தகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார சபை பிரதான கட்டு நிர்மாணிப்பு, வர்த்தக அலுவலகத்தை நிர்மாணித்தல் மற்றும் வீரவெல இல்லத்தின் நிர்மாணித்தல் போன்ற பிரதான உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செயற்றிட்டம் ஆரம்பிப்பதற்காக தேவையான திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் இப்பணிகளுக்காக தேவையான மூலதனமும் அதிகார சபையினால் வகுக்கப்பட வேண்டுமென திறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்கூறப்பட்ட செயற்றிட்டங்களின் பணிகள் ஏற்கெனவே அப்பணிகளுக்கான கொடுப்பனவு உரிய உடன்படிக்கைக்கு அமைய தாமதமின்றி மேற்கொள்ளக்கூடியவாறு அதிகார சபை மிகை நிதி தேக்கிவைக்கப்பட்டுள்ளது.

அதிகார சபையின் பிரதான அலுவலக நிர்மாணிப்புக்காக மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 1080 மி. என்பதுடன் அதற்கு தேவையான மனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக குறிபிடப்பட்ட நிதி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட செயற்றிட்டங்களின் எஞ்சியுள்ள பணிகளை பூர்த்திசெய்வதற்காக தேவையான முழுமையான மதிப்பீட்டு நிதி ரூபா 1200 மி ஆகும். இதற்கமைய 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச்சட்டத்தின் இல. 10 (2) வாசகத்திற்கமைய அதிகார சபையின் மிகை நிதி மேற்கூறப்பட்ட செயற்றிட்ட பணிகளுக்காக பயன்படுத்தும் முறையில் அதிகார சபை தீர்மானத்தின் ஊடாக விரிவான அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக தேவையான விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சிரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேலும் வரி கொடுப்பனவு தொடர்பில் இவ்வதிகார சபைக்குரிய பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்படுவதுடன் இவ்வதிகார சபையின் எஞ்சிய வருமானத்தில் கடந்த ஆண்டுக்குள் கீழ் குறிப்பிட்ட வாறு பொதுச் திறைசேரிக்கு நிதி மீள் அளிப்புக்கள் மேற்கொள்ளப்ட்டுள்ளன.

2011 - ரூ.மி. 250

2012 - ரூ.மி. 350

2013 - ரூ.மி. 200

இதற்கமைய மேற்கூறப்பட்ட மூலதனச் செலவுகளுக்காக மட்டும் நிறுவனத்தின் நாளாந்த தேவைகளைத் தவிர ஏனைய மிகை நிதி நிறுவனத்தினால் தேவையற்றவாறு தேக்கிவைக்கப்படவில்லை.

(ii) அமைச்சர் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சபையின் அதிகாசர சபையின் பணியாளர் நிருவாக ஒழுங்கு விதிக் கோவையில் (SLTFE 5000) ஒதுக்கீட்டுக்கமைய நிறுவன ஊழியர்களினால் உழைக்கும்போது கொடுப்பனவு குத்தகை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் 2012.11.12 ஆம் திகதி இடம்பெற்ற பொது வர்த்தகம் தொடர்பான பாராளுமன்ற குழுவின் ஆலோசனைக்கமைய அதிகார சபையின் பணியாளர் சபையின் ஒழுங்கு விதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிக் கோவை மீள அமைச்சரவை அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமைச்சர் அவையினால் இதனை மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சின் தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை சமர்ப்பித்து தீர்மானம் கிடைக்குவரை தற்போது அமுலிலுள்ள பணியாளர் சபையின் சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பொதுநிர்வாக சுற்றறிக்கை

(i) அதிகார சபையில் தற்போது காணப்படும் வாகனங்கள் நாளாந்தம் கடமைப் பணிகளுக்காக ஈடுபடுத்த போதியளவு இன்மையினால் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு உரிமை கொண்ட உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தப்படும் வாகனங்களும் கடமை நேரத்திற்காக நிறுவனத்தில் வேறு தேவைகளுக்காக பயன்படுத்த வேண்டியுள்ளது. இதற்கமைய இவ்வாகனங்கள் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு உரிமை கொண்ட உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தப்படுவதினால் அதிகார சபையின் இலட்சினைகள் பயன்படுத்தப்படவில்லை.

(ii) (i) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்குவிதி முறைகள் மற்றும் நிருவாக ஒழுங்கு விதிமுறைக் கோவையின் (SLLAP 5000) ஒதுக்கீட்டிற்கு அமைய இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் 012.11.12 ஆம் திகதி இடம்பெற்ற பொது வர்த்தகம் தொடர்பான பாராளுமன்றக்

குழுவின் ஆலோசனைக்கமைய அதிகார சபையின் சட்ட ஒழுங்குவிதி முறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்குவிதி கோவைகள் மீள அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமைச்சரவை அதனைப் பரிசீலணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சின் தலைமைத்துவத்துடன் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை சமர்ப்பித்து தீர்மானம் கிடைக்கும் வரை தற்போது அமுலிலுள்ள பணியாளர் சபை சட்ட ஒழுங்குவிதி முறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிமுறைக் கோவை ஏற்பாடுகளுக்கிணங்க தொடர்ந்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

(ii) மேற்கூறப்பட்ட (i) பதிலுக்குரியது

(இ) கட்டிடத்தை கூலிக்குப் பெற்றுக்கொள்ளும்போது விலை மனுக்கள் கோரப்பட்டிருப்பது ஒரு சதுர அடிக்கு 1 வருடத்திற்கு அறவிடப்படும் நிதி அடிப்படையிலாகும். இதற்கமைய தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைக்கமைய திணைக்கள பொதுமைக் குழு வருடாந்த கூலி நிதியினை அங்கீகரித்துள்ளதுடன் ரூபா 34.48 மில்லியன் திணைக்கள பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்க முடியுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கட்டிடத்தை பொறுப்பேற்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்ட படி உரிய விலை மனுக்கள் மாற்றமின்றி பேணப்படுவதாயின் 3 வருட கால உடன்படிக்கைக்காக கட்ட வேண்டிய கட்டிட உரிமை அறிவிக்கப்பட்டுள்ளதுடன் காணப்படும் நிலைமைக்கமைய நிறுவனத்திற்கு அவ்வாறு மேற்கொள்ளமுடியும். இது எவ்வாறியிருப்பினும் 3 வருடங்களுக்காக ஒரே தடவை நிதி செலுத்தப்பட்டதுடன் வருடாந்த குத்தகை நிதி செலுத்தப்பட்டுள்ளது.

இது எவ்வாறாயிருப்பினும் மேற்பார்வையுடன் இணங்குவதுடன் இது தொடர்பான விடயங்கள் அமைச்சரவை பெறுகைக் குழுவுக்கு தேவையான மீளாய்வு மற்றும் பொருத்தமான தீர்மானம் எடுப்பதற்காக சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) அரச வர்த்தக சுற்றறிக்கை

(i) அமைச்சரவை தீர்மானத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்ட புதிய நிர்மாண அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிருவாக ஒழுங்குகள் கோவையின் (SLCAP 5000) ஏற்பாடுகளுக்கமைய இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் 2012.11.12 ஆம் திகதி பொது வர்த்தகம் தெடர்பான பராளுமன்றக் குழுவின் ஆலோசனைக்கமைய அதிகார சபை பணியாளர் சட்ட விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு கோவைகள் மீள அமைச்சரவைக்கு அங்கீகாரத்துக்காக காண்பிக்கப்பட்டதுடன் அமைச்சரவையினால் இது பரிசீலணைசெய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சின் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது, குழுவின் அறிக்கை சமர்ப்பித்து தீர்மானம் கிடைக்கப்பெறும் வரை தற்போது அமுலிலுள்ள பணியாளர் சபை ஒழுங்கு விதி முறைகள் மற்றும் ஒழுங்கு கோவைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க தொடர்ந்தும் செயற்பட முடியும் என நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

(ii) பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்கமைய பொறுப்புடன் இணைந்த பணிகள் அதிகமானது என்பதனால் அக்கடமைகளை மேற்கொள்வதற்காக ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தேர்ச்சி கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் இருக்கவேண்டுமென்பதனால் பணிகள் மேற்பார்வை செய்வதனை விரைவுபடுத்தும் நோக்குடன் சிரேஷ்ட பணியாளர் சேவை தேர்ச்சி மற்றும் தொழில்நுட்ப அறிவை மதிப்பீடு செய்யும் வகையில் இது விமான சேவை அதிகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு கீழ் பணியாளர் சபையினால் சி. உருவாக்கப்பட்டு அதற்குரிய கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிறுவனத்தின் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக இவ்வாறான பதவிகள் அத்தியாசியமானது ஆகும்.

மேலும் சமீபத்தில் தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன் அவ்வாறான பதவி தேவை தேசிய சம்பள ஆணைக்ககுழு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள

மீள் கட்டமைப்பு விடயங்கள் நிறுவனக் குறிப்பு மற்றும் பணியாளர் சபைக்கு அவ்வாறான பதவி பொருத்தமான சம்பள அளவுடன் உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(iii) அமைச்சரவையினால் அங்கீகரிக்க சிவில் விமான சேவையின் அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதி கோவையின் (SLCAP 5000) ஏற்பாடுகளுக்கிணைங்க பணியாளர் சபை இக்காப்புறுதி தழுவல் அங்கீகரிக்கப்ட்டுள்ளதுடன் அதற்கமைய கொடுப்பனவுக்ள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(iv) (i) உரிய கால எல்லை தெளிவாகக் குறிப்பிட்டு அடிப்படை ஆய்வுகள் இது தொடர்பில் கிடைக்கப்பெறவில்லை. எனவே தங்களது கணக்காய்வினை மேற்பார்வை செய்யும் அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் தொடர்பில் தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் அதில் குறிப்பிட்டபட்டுள்ள நிதி தொடர்பாக கருத்துக்களை தெரிவிப்பது சிரமமானதாகும்.

இது எவ்வாறாயிருப்பினும் நிறுவனத்தின் தலைவரைத் தவிர இதுவரை எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அதிகார சபையின் உத்தியோகபூர்வ வாகனத்தை ஒதுக்குவதற்கு அல்லது அவ்வுத்தியோகபூர்வ வாகனத்திற்காக எரிபொருளை ஒதுக்க அல்லது எரிபொருள் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வுத்தியோகபூர்வ வாகனம் இவ்வுத்தியோகத்தரின் பிரயாணத்திற்காக மாத்திரமன்று குழாமில் உள்ள வாகனமாக நிறுவனத்தின் பொதுவான கடமைகளுக்காக தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றது. இதனால் தங்களினால் குறிப்படப்பட்ட முழுமையான செலவினம் இவ்வுத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்படவில்லை.

நிறுவனத்தின் வாகனத்தைப் பயன்படுத்தும்போது அவ்வவ் சந்தர்பப்ங்களில் கடமைக்காக இணைப்பு செய்ய முடியாதுள்ள சாரதிகள் மற்றும் வாகனங்களுக்கமைய இவ்வாகனத்தை இடைக்கிடையே பணிப்பாளர் நாயகத்தின் கடமைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

பணப்பாளர் நாயகத்திற்கு எரிபொருள் ஒதுக்கீடு அல்லது அவரின் மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக எதுவித எரிபொருள் கொடுப்பனவு அல்லது போக்குவரத்து கொடுப்பனவு அல்லது வேறு முறையினாலான எதுவித கொடுப்பனவுகளும் அவருக்கு வழங்கப்படவில்லை.

மேலும் இவ்வாகனத்தை பணிப்பாளர் நாயகத்தின் பிரயாணத்திற்காக மாத்திரமன்றி குழாமின் வாகனமாக நிறுவனத்தின் ஏனைய பொதுக் கடமைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமையினால் தங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள நிதி, பணிப்பாளர் நாயகத்திற்காக மாத்திரம் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்ட ஒழுங்குவிதிகள் விதிமுறைக் கோவை (SLCAP 5000) ஒதுக்கீடுகளுக்கமைய இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் 2012.11.12 திகதி இடம்பெற்ற பொது வர்த்தகம் தொடர்பான பாராளுமன்ற செயற்குழுவின் ஆலோசனைக்கிணைங்க அதிகார சபையின் பணியாளர் சபையின் சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாகக் கோவை மீள் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்பபிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவயையினால் இது பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சின் தலைமையில் குழு நியமிக்கபட்டது. குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து தீர்மானம் கிடைக்கும்வரை தற்போது அமுலிலுள்ள பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதி முறைகள் மற்றும் நிருவாகக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதிகார சபையின் சட்ட ஒழுங்குகள் மற்றும் நிருவாக கோவையின் 9.2 வாசகத்திற்கமைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பு கொடுக்பபனவு ஒரு மாத சம்பளம் வரை வழங்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அதிகார சபையின் சகல ஊழியர்களுக்கும் அவரின் அடிப்படைச் சம்பளத்திற்கு சமமாக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை மேற்கொள்ள 2012.12.13 திகதி இடம்பெற்ற 91 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய சகல ஊழியர்களுக்கும் அவரது அடிப்படைச் சம்பளத்திற்கு சமமாக ஊக்குவிப்பு கொடுப்பனவு

செலுத்தப்பட்டதுடன் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டிருப்பது அவரின் அடிப்படை சம்பளத்திற்கு சமமான நிதியாகும். எனவே, அந்நிதி ஊக்குவிப்பு கொடுப்பனவு மேற்கொள்வதனை அடிப்படையாகக் கொண்ட கொள்கையுடன் இணங்குவதுடன் இதன்போது எதுவித மோசடிகளும் ஏற்படவில்லை.

(ஊ) திறைசேரி சுற்றறிக்கை

தங்களது மேற்பார்வையினை வரவேற்கிறோம்.

தற்போது ஏனைய மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பான தகவல்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 03 நிதிச் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

### 3.2 விளக்கமான நிதி மீளாய்வு

## 04. செயற்பாட்டு மீளாய்வு

4.1. இலங்கை அரசியல் யாப்பின் 154 வது வாசகம் மற்றும் 1971 இல. 38. கொண்ட நிதிச்சட்டத்தின் 13(5) வாசகத்திற்கமைய கணக்காய்வு அதற்குரியதாக வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் கணக்கு தொடர்பாக கணக்காய்வுகள் தேவைப்படும் சகல புத்தகங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் அதிகார சபையினால் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு தாமதமின்றி வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் விமான விபத்துக்களை பரிசோதனை தொடர்பில் உரிய தகவல்கள் மீது அமுலிலிருப்பது 2010 இல. 14 கொண்ட சிவில் விமான சேவைக் சட்டத்தின் 57 மற்றும் 61 வாசகங்களுக்கமைய மற்றும் அச்சட்டத்தின் 2வது வாசகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமான சேவை சாசனத்தின் 19வது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கமைய விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பிலான பரிசோதனைகளுக்குரிய புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்கள் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்குப் பிறம்பான செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவது, சட்டத்தினால் தடுக்கப்பட்டுள்ளமையினால் அத்தகவல்கள் வழங்குவது தொடர்பில் கணக்காய்வு அத்தியட்சகரின் கோரிக்கைக்கு அமைய தேவையான ஆலோனைகளுக்காக அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் செயலாளரின் பதில் இவ்வதிகார சபைக்கு இரு பெறுதிகளுடன் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது எவ்வாறாயிருப்பினும் மீளாய்வுக்குட்படுத்தபட்ட ஆண்டுக்குரியதாக சகல செயற்பாட்டு புள்ளிவிபரங்கள் மற்றும் ஆய்வுகள் கணக்காய்வாளர்களினால் கூறப்பட்ட அதே சமயத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் நிறுவனத்தின் செயற் சாதனைகள் தொடர்பான சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள் தங்களது அறிக்கையில் குறிப்பிடப்படாதமையினால் அத்தகவல்களின் இணைப்பு 1 என தங்களுக்கு அனுப்பபட்டுள்ளன.

4.2 2014 ஆண்டு தொடக்கம் சேவைக் கட்டணத்தை மறுசீரமைப்பதற்கான வர்த்தகமானி அறிவித்தல் தயாரிக்கப்பட்டன.

4.3 முகாமைத்துவ வினைதிறன் இன்மை

(அ) சிவில் விமான சேவை அதிகார சபை தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேளையில் இருந்த சுப்பிறீம் கட்டிடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தாபிப்பதற்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்து அப்போதைய அதன் முதல் குத்தகையாளரான சுற்றுலா அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டமையினால் துரித கதியில் வேறு இடமொன்றை இனங்காண்பதற்கு அதிகார சபைக்கு ஏற்பட்டது. ஜின சேவைக் கட்டிடத்தின் உரிமையாளரிடமிருந்த சிறந்த தரத்திலான கட்டிடத்தை குத்தகைக்கு வழங்க இணங்கிய போதிலும் வேறு எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்ளாது தேவையான மாற்றங்களை மேற்கொள்ள இணக்கம் எட்டப்படவில்லை. கிடைக்கப்பெற்றிருந்த கால எல்லைக்குள் கொழும்பு நகரை சூழ வேறு பொருத்தமான கட்டிடத்தை இனங்காண முடியாமையினால் கட்டிடட வாளகத்திற்கு பாரிய வாகனஙங்கள் நிறுத்தி வைப்பதற்காக இடவசதிகள் இலவசமாக வழங்கியமையினால் கூலிக் கட்டணத்திற்காக நிதி அமைச்சின் செயலாளரின் எழுத்து மூலம் அங்கீகரரம் கிடைக்கப்பட்டதன் பின்னர் இக்கட்டிடத்தை குத்தகைக்கு எடுதுத்துக்கொள்ள அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

குத்தகைக்குப் பெறப்பட்ட ஜினனே கட்டிடத்திற்காக கட்டிட உரிமையாளர் எதுவித மேலதிக செலவினத்தையும் மேற்கொள்ள முன்வராமை மற்றும் வேறு மாற்றுக் கட்டிடம் மீதி காலப் பயன்பாட்டிற்காக இனங்காண முடியாமையினால் அதிகார சபையின் பணிகள், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றக்கூடியது மாத்திரமன்றி இவ்வதிகார சபைக்கு தொடர்ந்தும் வருகை தரும் வெளிநாட்டவர்கள் எதிர்காலத்தில் நாட்டின் தேசிய அடையாளம், அபிமானம் மற்றும் நிறுவன கட்டமைப்பினை பாதுகாக்கக்கூடியவாறு செயற்படக்கூடிய சூழ்நிலை வாடகைக் கட்டிடங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பதினால் நிறுவன சூழலை விருத்திசெய்யும் பணிகள் இடம்பெற்றதாக தயவாகக் குறிப்பிடுகிறேன்.

(ஆ) தங்களது மேற்பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதக விடயங்களை நீக்குவதற்கு குத்தகை உடன்படிக்கையினை மீளப் புதுப்பிக்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதும் அவ்வாறு மேற்கொள்வதற்கு கட்டிட உரிமையாளர் இணங்கவில்லை. அவ்வாறு ஆக்குவதாயின் குத்தகைக் கட்டணத்தை மீள மறுசீரமைக்க ஏற்படுமென அறிவிக்கப்பட்டது.

கட்டிடத்திற்காக கூடுதலான வர்த்தகம் சார்ந்த கோரிக்கை கொண்ட கொழும்பு நகரின் ஒரு சதுர அடிக்கு 100 ரூபா போன்ற நிதிக்கு மீள கட்டிடத்தை இனங்காண்பது சிரமம் என்பதினால் பிரதான அலுவலக கட்டிடம் எதிர் வரும் 2 வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் நிர்மாணிப்புப் பணிகள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் மீள வேறு குத்தகைக் கட்டிடத்திற்கு மீள்செல்லும் காலம், ஊழியம் மற்றும் நிதி வீணாகுவது பயனற்ற பணிகள் என்பதனால் அவ்வாறு மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

(இ) மேற்கூறப்பட்ட 4.3 (அ) பதிலுக்குரியதாகும்

அதிகார சபையின் செயற்பாட்டு பணிகளை முன்னெடுக்க பொருத்தமான அலுவலக சூழலை ஏற்படுத்துவதற்காக தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ள மற்றும் அதுசார்ந்த பணிகளை மேற்கொள்ள இவ்வாறு செயற்பாடுகள் இடம்பெறவேண்டும்.

(ஈ) விசேட கடமை சந்தர்ப்பங்களில் அணிவதற்காக கைப்பட்டி ஒரு பகுதி ஏற்கனவே சிவில் விமான சேவை பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய சகல உத்தியோகத்தர்களுக்கும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஞாபகார்த்த சின்னமாக அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகளில் பங்கேற்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் உள் நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இக்கைப்பட்டிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

(உ) இது தொடர்பில் ஆரம்ப ஆய்வுகள் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் கணக்காய்வு அத்தியட்சகரினால் குறிபிடப்பட்ட உத்தியோகத்தரின் பெயர் வாய் மூலம் தொலை பேசி ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது.

திரு பிரபாத் குலரத்ன - இந்நிறுவனத்தின் ஆலோசகர் (சிவில் விமான சேவை ஊக்குவிப்பு) இன் அடிப்படையில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் இவ்வுத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள கடமையின் தன்மைக்கமைய உள்நாடு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள் மற்றும் நபர்களுடன் செயற்பட வேண்டி ஏற்பட்டமையினால் அவருக்கு சந்திப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஊ) எழுத்துமூல வரலாற்றுக்கமைய 1911 டிசம்பர் 25 ஆம் திகதி கப்பல் மூலம் இலங்கைக்கு விமானம் ஒன்று கொண்டுவரப்பட்டபோதிலும் இலங்கை வான் பரப்பின் முதற் தடவையாக வெற்றிகரமாக வான ஊர்தி பறந்ததாக 1912 டிசம்பர் 25 ஆம் திகதி சான்றுகள் பதிவாகியுள்ளமையினால் அத்தினம் இலங்கையின் விமான சேவையின் ஆரம்பமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை விமான சேவைக்கு 100 ஆண்டுகள் பூர்தியை ஒட்டி அரச அனுசரணை விழாக்கள் ஒழுங்குசெய்ய தீர்மானிக்கப்பட்டது. அவ்விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஊடாகும். அதற்கமைய உரிய பணிகள் ஒழுங்கு செய்யுமாறு கௌரவ அமைச்சரினால் சிவில் விமான சேவை அதிகார சபைக்கு உத்தரவு இடப்பட்டமையினால் அதற்கமைய செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(எ) சிவில் விமான சேவை அதிகார சபை தாபிக்கும்போது உரிய நிறுவனக் கட்டமைப்பு, ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளைப் போன்று உத்தேச சம்பள மட்டம் மற்றும் உரிய தொழில்சார் கொடுப்பனவுகளுக்காக யோசனைத் திட்டத்தில் AD/2/1/2 மற்றும் 2003.06.11 ஆம் திகதி சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் எழுத்து மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்குப் பதிலான முகாமைத்து சேவை திணைக்களத்தின் DMS/H/46/XXIII மற்றும் 2003.8.19 ஆம் திகதி

கடிதத்தின் மூலம் அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க உரிய அனுமதிப் பத்திரம்.·. சான்றிதழ் பெற்றுள்ள ஊழியர்களுக்காக அதிகார சபை தாபிக்கபட்ட தினம் தொடக்கம் இத்தொழில்சார் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளன.

மேலும் அவ்வங்கீகாரத்திற்கு மேலதிகமாக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேபை பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் நிருவாகக் கோவை (SLCAP 5000) இத்தொழில்சார் கொடுப்பனவுக்காக கொடுப்பனவை மேற்கொள்ளும் தொடர்பில் குறிப்பபுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஏ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இவ்விமான சேவை அதிகார சபை பணியாளர் சபை சட்டங்கள் மற்றும் நிருவாக ஒழுங்கு விதி முறையில் குறிப்பிடப்பட்டவாறு வைத்திய காப்புறுதித் திட்டத்திற்கு நிருவகத்தின் சார் ஊழியர்கள் அடங்குவதினால் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இவ்வசதிகள் வழங்கப்ட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கிணங்க பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு இவ்வசதிகள் வழங்கப்ட்டபோதிலும் சமீபத்தில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய இவ்வசதிகள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

(ஐ) கௌரவ சிவில் விமான சேவை அமைச்சரின் 2011 ஆகஸ்ட் 11 ஆம் திகதி கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு சிவில் விமான சேவை மற்றும் உரிய கௌரவ அமைச்சரின் பணிகளை இலகுவாக மற்றும் விரிவான இணைப்பிற்காக அவரின் சேவைக்காக அபிவிருத்தி திட்டமிடல் இணைப்பு உத்தியோகத்தர் அவசியம் என்றும் இதற்காக திரு வி. எம் தயாவன்ச வை நியமிக்கும்மாறு இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக் சட்டத்தின் 31.1 வது வாசகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள உத்தரவாக இக்கட்டளைகளை அமுல் படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதிகார சபை தாபிக்கப்பட்ட காலம் தொடக்கம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் காலத்துக்கு காலம் இவ்வாறான கட்டளைகள் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அக்கட்டளைகள் அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ளமை முன்மாதிரியாகும்.

மேலும் இதுதொடர்பில் தங்களினால் அனுப்பப்பட்ட கணக்காய்வுகள் குறித்து கவனம் செலுத்தி சிவில் விமான சேவையின் அமைச்சின் செயலாளர் உரிய விடயங்கள் தொடர்பான விரிவான பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இதன்போது கௌரவ அமைச்சரின் உத்தரவை அமுல்படுத்துவதற்காக சிவில் விமான சேவை அதிகார சபையினால் திரு தயாவன்சவுக்கு வழங்கப்பட்டிருந்தது “முறையான நியமனம் அன்று கடமை பொறுப்பு வழங்கல்” என அறிவிக்கப்பட்டமையினால் திரு தயாவன்ச அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நியமனக் கடிதம் முறையான கடமையைப் பொறுப்பளிப்பதன் மூலம் மீள் கட்டமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. 2012 ஒக் 31 திகதி பணிப் பொறுப்பணிப்புக் காலம் முடிவடைந்தமையினால் தற்போது இவருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

(ஒ) நூற்றாண்டு பூர்தி விழாவை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட விழாக்களின் பிரதான நோக்கமாக அமைந்தது சிவில் விமான சேவை குறை தொடர்பான விளக்கத்ததை முழு சமூகத்திற்கும் வழங்குவதாகும். இதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது. “நீல வானை வெற்றிகொள்வோம்” என்ற தொனிப்பொருளின் கீழ் மஹிந்த சிந்தனை எதிர்காவல் நோக்கு வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாக மாற்றியமைத்து இலங்கை விமான சேவையின் கேந்திர நிலையமாக மாற்றியமைக்க அதி மேன்மை தங்கிய ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவது அவசியம் என கௌரவ அமைச்சரினால் வலியுத்தப்பட்டமையினால் அச்செயற்பாடுகளை சேவைத் தரத்திற்கு இணங்க மேற்கொள்வதற்காக ஊடகம் தொடர்பான அறிவு கொண்ட ஊடகவியலாளரின் சேவையினைப் பெற வேண்டுமென விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் தலைமையினாலான நூற்றாண்டு பூர்த்தி விழா ஏற்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கபட்டமையினால் அதற்காக ஊடகத்துறை தொடர்பாக தேர்ச்சி பெற்ற ஒருவரை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட அனுபவம் மிக்க ஊடக ஆலோசகரினால் மேற்கொள்ளப்பட்ட ஊடக வேலைத்திட்டங்கள் கருத்திற்கொள்ளும்போது இப்பணி முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் நிதி வீணாக்கப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

(ஓ) சிவில் விமான சேவை அதிகார சபையின் புதிய பொறியியலாளர்களுக்கிடையே அவர்களுக்கு துரிதகதியில் பயிற்சிகளை வழங்குவதற்காக "செயற்பாட்டு பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான விமான தகைமையினை விருத்திசெய்யும் வகையில் தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம்" (COSCAP) இன் கீழ் உதவி கோரப்பட்டதுடன் அவர்கள் பரிந்துரை செய்யப்பட்ட பிரபல விமான தகைமை பொறியியலாளருடன் இலங்கை சிவில் விமான சேபை அதிகார சபைக் சட்டத்தின் 7 இன் கீழ் ஆலோசனை உடன்படிக்கை எட்டப்பட்டது. இவ்வாறான சேவை அனுபவம் கொண்டுள்ள நிபுணத்துவம் மிக்க விமான தகைமை கொண்ட பொறியியலாளர்கள் மிக அரிதாகக் காணப்படுவதுடன் அவர்களுக்கு கூடுதலான கேள்விகள் காணப்படுவதினால் இவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள கணிசமான நிதியினை செலவிடவேண்டி ஏற்பட்டுள்ளது.

இப்பயிற்சி கனடாவில் வழங்கப்பட்டிருப்பின் இதற்காக ரூபா 10 மில்லியனை அண்மித்த நிதி செலவாகும். சாந்த மெண்டிஸ் அவர்கள் தமது விசேட அறிவுக்காக கட்டணத்தை அறவிடாது நாள் ஒன்றுக்கு 50 டொலர் போன்ற மிகக் குறைந்த நிதி கொடுப்பனவை மாத்திரம் பெற்றுக்கொண்டு தமது சேவையை வழங்க இணங்கியமை இலங்கையர் என்ற ரீதியில் விமான சேவைக்கு மேற்கொள்ளப்படும் சேவையாக கருதப்படுகின்றது. உரிய காலத்திற்காக அவரை சேவைப்படுத்துவதற்காக குடிவரவு குடிஅகல்வு கட்டுப்பாட்டாளரின் தழுவல் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(ஐ) சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் சேவா வணித்தா பிரிவினால் இந்நிறுவனத்தின் பெண் உத்தியோகத்தர்களின் நலன்புரிக்காக அவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள இலகுபடுத்தும் வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை பணிப்பாளர் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2011 ஜுலை 21ஆம் திகதி இடம்பெற்ற 79 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது எவ்வாறாயிருப்பினும் தங்களது மேற்பார்வையினைக் கருத்திற்கொண்டு இந்நிதியை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.4 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார சபையின் வளங்கள்

**கௌரவ அமைச்சரின் உத்தரவுக்கிணங்க இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.**

## 5. கணக்கு செயற்பாடுகள் மற்றும் சிறந்த நிருவாகம்

**5.1 2012 ஆம் ஆண்டின் டொலரின் பெறுமதி ரூபா 117 அஇலிருந்து 132 வரை அதிகரித்தமையினால் முன் வழங்கப்பட்ட பிரயாண அறிவித்தல் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட அதிகரித்தமையினால் மத்தள உப அலுவலகத்தின் நிருமாணப் பணிகள் 2013 வரை ஒத்திவைக்கப்பட்டமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன செலவு இடம்பெறாமையினால் முதலீட்டு எதிர்பாபர்ப்பு குறைவடையாமையினால் முதலீட்டு வட்டி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட அதிகரித்தமை இத்தழம்பலுக்கு பிரதான காரணமாகும்.**

## 6. முறை மற்றும் நிருவாகம்

**கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்த பெறுமதி மிக்க விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் முடியுமான அளவு நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளின் குறைபாடுகளைக் குறைப்பதற்கும் அதனூடாக நிறுவனத்தின் செயற்சாதனைகளை மேம்படுத்துவதற்கும் தீர்வுகள் வழங்கப்படுமென அறிவிக்கிறோம். மேலும் கணக்காய்வுப் பணிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் மிகுந்த ஆர்வத்துடன், பக்க சார்பின்றி நெகிழ்வுத் தன்மையுடன் நிறைவேற்றி நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக உரிய பணிகளை மேற்கொண்ட கணக்காய்வு அத்தியட்சகர் உள்ளிட்ட பணியாளர் சபைக்கு நன்றி தெரிவிக்க இதனை சந்தர்ப்பமாகக் கொள்கிறோம்.**

ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த

தலைவர்,
இலங்கை சிவில் விமானப்
போக்குவரத்து அதிகாரசபை

எச்.எம்.சீ.நிமல்சிறி

சிவில் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.